3797

# செந்தமிழ்

தொகுதி 73 செப் - டிசம்பர் பகுதி - 3-4

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,

# உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பிற்காலச் சோழர்களின் ஆட்சி அமைப்பு<br>கே. வி. ஜெயராஜ், எம். ஏ. | 1 |
| 2. | அறநெறித் திரட்டு<br>கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | 11 |
| 3. | திருத்தக்க தேவரும் கம்பரும்<br>ரா. இராகவையங்கார் | 16 |
| 4. | ஸ்ரீமத் கனகசபைப் பிள்ளையவர்களும் அவர் தமிழாராய்ச்சியும்<br>ரா. இராகவையங்கார் | 21 |
| 5. | நாட்டுத் தெய்வங்கள்<br>க. சின்னப்பா, எம். ஏ. | 28 |
| 6. | முல்லை இயல் அல்லது ஆயர் இயல்<br>புலவர் வி. அ. அரங்கசாமி | 34 |
| 7. | வித்துவக் கோட்டம்மா<br>வி. எஸ். திருமாவளவன் | 46 |
| 8. | அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் தமிழ் இசையும்<br>பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் | 54 |
| 9. | குடும்ப விளக்கு<br>பழநி. அரங்கசாமி | 60 |
| 10. | செய்திக் கதிர் | 67 |
| 11. | சங்கச் செய்திகள் | 74 |
| 12. | தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு | 80 |

# பிற்காலச் சோழர்களின் ஆட்சி அமைப்பு

கே. வி. ஜெயராஜ் M.A.
(மதுரைப் பல்கலைக் கழகம்)

தென்னிந்தியப் பேரரசுகளுள் சிறப்புமிக்க ஒன்றுன சோழப் பேரரசின் ஆட்சிமுறையைக் கூறுவதற்கு முன் அவர்கள் ஆரம்பகால வரலாற்றைப் பார்ப்போம். சோழ வமிசம் பழைமை மிக்க வமிசமாகும். பிற்காலத்தில் ஆண்ட சோழ அரசர்கள் ஆட்சியைப் பற்றிய ஆதாரங்கள் முறையாகக் கிடைத்துள்ளன. எனினும், முற்காலத்தில் சோழர்களின் ஆட்சியை அறியப் போதிய ஆதாரங்கள் இல்லே. சோழர்கள் பற்றிய செய்தி மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து அவர்கள் மகாபாரத காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவு. அசோகரும் தமது கல்வெட்டுக்களில் சோழர்களேச் சுதந்திரமான பேரரசு புரிந்தவர்கள் என்றே கூறுகின்ருர். இலங்கையின் பௌத்த இலக்கியமான மகாவம்சம் என்ற நூலும் சோழ மன்னர்களேப் பற்றிய செய்திகளேத் தருகின்றது. பெரிப்ளஸின் எரித்திரியன் கடல் எனும் புத்தகத்திலும், டாலமியின் பூகோளவியல் எனும் புத்தகத்திலும் சோழர்களுடைய பூர்வீகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய ஆதாரங்களே வைத்துப் பார்க்கும்போது சோழர்களின் காலம் கி.மு. 4 அல்லது கி.மு. 3 - ஆம் நூற்ருண்டு எனக் கொள்ளலாம். ஆரம்ப காலத்தில் சோழர்கள் உறையூரையும் பின்னர் புகாரை அல்லது காவிரிப்பூம்பட்டினத்தைத் தலேநகராக வைத்தும் ஆட்சி புரிந்தனர். புகாரின் பெருமையைப் பற்றி பெரிப்ளஸின் எரித்திரியன் கடல் என்னும் புத்தகம் விவரிக்கின்றது. இலங்கையின் கயவாகு மன்னரின் காலத்தை ஒத்த கரிகாலனும் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலேநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்றும், இவர்தான் தலேநகரை உறையூரில் இருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றினுர் என்றும் கருதப்படுகின்றது. இவர் தம் காலத்தில் இலங்கை நோக்கிப் படையெடுத்தார் என்றும், இலங்கையில் இருந்து 12000 கைதிகளேக் கொண்டு வந்தார் என்றும், அவர்களேப் பயன்படுத்திக் கல்லணேயைக் கட்டினுர் என்றும் கருதப்படுகிறது. கரிகாலச் சோழனுக்குப் பின்னர் அவருடைய பேரன் நெடுமுடிக்கிள்ளி பட்டமெய்தினுர். இவருடைய ஆட்சிக் காலத்தின்போது- அதாவது கி.பி. 3 ஆம் நூற்ருண்டில் - காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிக்கப்பட்டது எனக் கருதப்படுகிறது. இக் காலத்திற்குப் பின்னர் சோழர்களின் ஆதிக்கம் சேர மன்னர்களாலும், பின்னர் பல்லவ மன்னர்

களாலும் வீழ்ச்சியுற்றது. கி.பி. 7-ஆம் நூற்றுண்டில் யுவான் சுவாங் தென் இந்தியாவில் பயணம் மேற்கொண்டபோதுகூட சோழர்கள் குறுநில மன்னர்களாக விளங்கியதாகவே கூறுகின்றுர். கி.பி. 10 ஆவது நூற்றுண்டில் பல்லவர்களுடைய வீழ்ச்சிக்குப் பின்னர்தான் சோழ அரசு மீண்டும் புத்துயிர்பெற்றது. விசயாலயச்சோழன், முதலாம் ஆதித்யர் ஆகிய அரசர்கள் சோழ அரசைப் புதுப்பித்தனர். எனினும், முதலாம் பராந்த சோழன்தான் சோழப் பேரரசு தென்னிந்தியாவில் நிலைபெற அடிகோலியவர் எனலாம்.

கி.பி. 907 முதல் கி.பி. 1218 வரை உள்ள சோழ மன்னர்களின் காலத்தில் இருந்த ஆட்சிமுறையை முறையே நடுவண் அரசு, மாநில அரசு, மற்றும் ஸ்தல அரசு என்று பகுக்கலாம். முதலாம் பராந்தகர் காலந்தொட்டு ஆட்சி முறை சிறப்புடன் இருப்பினும், சோழநாடு முதலாம் ராசராசன் காலத்திற்குப் பின்னர்தான் பேரரசுத் தன்மையை அடைகிறது.

சோழப் பேரரசின் பரப்பு இன்றுள்ள தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களும், திருச்சிமாவட்டத்தின் ஒரு பகுதியும் என்று கொள்ளலாம். பேரரசு பல பகுதிகளாகப் பிரிக்கபபட்டு மண்டலங்கள் என்றும், வளநாடுகள் என்றும் நாடு அல்லது கோட்டம் என்றும் கூறப்பட்டன.

நாட்டின் தலைவர் அரசர். அரசர்கள் வல்லாட்சி செய்தனர். அரசர் மறைவுக்குப் பின் மூத்தமகன் அரசாவது மரபு. இருப்பினும் சில வேளைகளில் இம் மரபில் மாற்றம் இருந்தது. உதாரணமாக முதலாம் கந்தராதித்யனுக்குப் பின் அவர் மகன் உத்தம சோழன் பட்டமெய்துவதற்குப் பதில், கந்தராதித்தரின் சகோதரரான பரகேசரி அரிஞ்சயர் பட்டமெய்தினுர். ஆட்சிபீடமேறும் அரசரின் மகனை இளவரசர் என்று அழைப்பர். பிற மகன்களை பேரரசின் பிற மாநிலங்களில் அரசப் பிரதிநிதியாக நியமிப்பர். இளவரசருக்கு ஆட்சிமுறையிலும், படையை நடத்திச் செல்லும் முறையிலும் பயிற்சி அளிக்கப்படும். மன்னர் ஒரு சர்வாதிகாரியாக விளங்கினுர். அவரைக் கட்டுப்படுத்த ஒரு பொதுச்சபை என்ற ஒன்றும் இல்லை. ஆனுல் மன்னர் அமைச்சர்கள் பலரை நியமித்து ஆலோசனைகள் கேட்டார். இந்த அமைச்சர்கள் மன்னரின் சேவகர்களாகத்தான் திகழ்ந்தார்களே ஒழிய மக்களின் பிரதிநிதிகளாக அல்ல. இவ்வமைச்சர்களுக்கு உடன்கூட்டத்தார்' என்று பெயர். இவர்களுக்கு முதல் மந்திரி 'என்ற ஒருவர் இருந்தார். மன்னர்கள் முடிசூடும்போது உடையார்'

திரிபுவன சக்கரவர்த்தி, கோனேரின்மை கொண்டான் போன்ற பட்டங்களையும் பரகேசரி, ராஜகேசரி போன்ற சிறப்புப் பட்டங்களை யும் பெறுவர். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்ற வள்ளுவர் கூற்றுப்படி சோழ மன்னர்களில் சிலரை மக்கள் கடவுள் என மதித்தனர். அந்த அள விற்கு இச் சோழ மன்னர்கள் மக்கள் நலன் கருதி ஆட்சி புரிந்-தனர். ஆகவே இவர்களை ஐரோப்பாவில் 17-ஆம் நூற்றாண்டில் நல்லாட்சி செய்த வன்மையாளர்களுக்கு ஒப்பிடலாம் அரசின் அலுவல்களைக் கவனிக்க அதிகாரிகள் கொண்ட செயலகம் ஒன்று இயங்கி வந்தது. மன்னருக்கு ''திருவாய்க் கேள்வி'' எனும் அந்தரங்கக் காரியதரிசி ஒருவர் இருப்பார். இவர் மன்னர் இடும் உத்தரவுகளைப் பிற அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார். திருமந்திர ஓலை நாயகம் எனும் அதிகாரி, தலைமைச் செயலராகச் செயல்பட்டார். படைக் காவல் அதிகாரி, பாதுகாவல் துறைத் தலைவராக இருந்தார். விடையில் அதிகாரி என்பவர் ஒற்றர் துறைக்குத் தலைவராயிருந்-தார். இத்தகைய அதிகாரிகள், பெருந்தரம், சிறுதரம் என இரு-வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்களை தற்போதுள்ள முறையே அரசிதழ் பதிவு பெற்ற (Gazetted) அரசிதழ் பதிவு பெறாத (non-Gazetted) அதிகாரிகளுக்கு ஒப்பிடலாம். இத்தகைய அதிகாரி களுக்கு மாதந்தோறும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. டெல்லி சுல்தான்கள் காலத்திலும் ஐரோப்பாவில் நிலமானிய முறையிலும், அதிகாரிகளுக்குச் சம்பளத்திற்குப் பதில் நிலம் வழங்கப்பட்டதைப் போன்று சோழ கால அதிகாரிகளுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அரசருக்கு ஆலோசனை கூற எத்துணை அமைச்சர்கள் இருந்தனர் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. அமைச்சர்களுடன் யானைப் படைத் தலைவன் குதிரைப் படைத்தலைவன், தரைப்படைத்தலைவன் போன்ற அனைத்துப் படைத் தலைவர்களும் இருந்தனர். மன்னர் மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்தார். மன்னர் நாட்டில் சுற்றுப்பயணம் செல்லும்போது முக்கிய அதிகாரிகளும் சென்றனர். மன்னர் சுற்றுப்பயணம் செல்லும்போது மக்கள் தங்களின் குறை களை மன்னரிடம் எடுத்துரைத்தனர். மன்னர் மத்திய அரசு அலுவ லர்களுக்குப் பல பட்டங்கள் வழங்கினார் அவற்றுள் மாராயன், ஆரையன், தொண்டைமான், பிரம்மராயன், நாட்டாள்வான், சேதி ராயன், காசிராயன், காடவராயன், சாம்டிவராயன் போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும். அரசின் வருமானத்தில்வரும் பெரும்பகுதி நிலவரியே. நிலங்கள் ஒழுங்காக அளக்கப்பட்டு தரம் வாரியாகப்

பிரிக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டன. துறைமுகம், கோவில்கள். அரசாங்க நீர்த்தேக்கங்கள், காலவாய்கள் போன்றவற்றிற்கு வரி இல்லை அரசு சில பிராமணர்களுக்கு நிலங்களை நன்கொடையாக அளித்தது அதற்கு இறையிலி என்று பெயர் வருவாயை ஒழுங்கு படுத்தப் 'புரவு வரித்தணைக் கழகம்' எனும் ஒரு துறை இருந்தது இதன் தலைமை அதிகாரி நாயகம என அழைக்கப்பட்டார். இவருக்கு அடுத்தபடியாக கண்காணி எனும் அதிகாரி இருந்தார். இவர் தன்னுடைய எல்லைக்கு உட்பட்ட பகுதியின் வரவு-செலவுகளை மேற் பார்வையிட்டார். பதிவேடுகளைப் பத்திரமாக வைத்திருக்கும் அதிகாரிக்கு வரிப் பெட்டகம் என்று பெயர் நிலத்தில் வரும் வருமானத்தில் 1/6 பங்கு வரியாக வசூலிக்கப்படும். இதனைப் பணமாகவோ பொருளாகவே கொடுக்கலாம். இது தவிர சுங்கவரி, தொழில் வரி, வீட்டு வரி போன்ற பிற வரிகளிலிருந்தும், நீதித்துறையில் விதிக்கும் அபராதத்தின் மூலமும் அரசுக்கு வருமானம் கிடைத்தது. அரசு குடியானவர்களுக்கு அதிகச் சலுகை அளித்தது அவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டியது அரசு கோவில்களுக்கு நிலங்களை மானியமாகவும் வழங்கிற்று. விவசாயிகளின் நன்மையைக் கருதி ஏரிகள், கால்வாய்கள் வெட்டப்பட்டன.

சோழர்கள் காலத்தில் தரைப்படையும் கப்பற்படையும் இருந்தன. தரைப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்று மூன்று பிரிவாக இருந்தது. படைக்குத் தளபதி பிரமாதிராஜா என்று அழைக்கப்பட்டார். படை வீரர்கள் கோவில்களைப் பாதுகாப்பு அரண்களாக வைத்துக் கொண்டனர். உதாரணமாக, தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில், கோவிலுடன் கூடிய கோட்டையைக் கொண்டதாக விளங்குகின்றது இப்படை வீரர்கள் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு வரி வசூலிக்கும் காலங்களில் துணை செய்தனர். சோழர்கள் கப்பல்படை வைத்திருந்தனர். அவர்கள் இலங்கையைத்-தாக்கிப் பிடித்தனர். சேரர்களின் கப்பல்படையைக் கண்டலூர் என்னுமிடத்தில் தோற்கடித்தனர். மேலும் லட்சத்தீவு, மாலத்தீவு போன்ற தீவுகளையும் பிடித்தனர்.

நீதித்துறையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான வழக்குகள் பஞ்சாயத்துக்களிலே விசாரிக்கப்பட்டன. சில முக்கிய வழக்குகளை மட்டும் அரசின் பேரவை விசாரித்தது. வழக்குகள் விசாரிக்கும்போது மூன்றுவிதமான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். பழக்க வழக்கங்கள், ஆவணங்கள், தனியார் சாட்சியம் ஆகிய இம் மூன்றுமே

அவை, திருட்டு, கால்நடைத் திருட்டு, பொய்க் கையெழுத்து, சுற் பழித்தல், தேசத்துரோகச் செயல், கோவில் சொத்துக்களைக் கொள்ளை-யடித்தல் ஆகிய குற்றங்கள் காணப்படுகின்றன. பெரிய குற்றங்-களுக்கு மட்டும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. அதாவது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதுதான் கடுமையான தண்டனை. மரண தண்டனை கொடுக்கும் பழக்கமில்லை. குற்றவாளிகளைக் கழுதை மேல் ஏற்றிக் கரும்புள்ளி செம்புள்ளியுடன் ஊர்வலம் செல்லச் செய்வதும் கடுமையான தண்டனையாகக் கருதப்பட்டன.

இனி மாநில அரசு குறித்துப் பார்ப்போம். முதலாம் ராச-ராசனின் ஆட்சிக் காலத்தில் பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை (1) சோழ மண்டலம் (2) பாண்டிய மண்டலம் (3) ஜெயம் கொண்ட சோழமண்டலம் (4) மும்முடிச் சோழமண்டலம் (5) நிகரிலி மண்டலம் (6) ஆதிராஜராஜ சோழ-மண்டலம் (7) மலை மண்டலம் (8) முடிகொண்ட சோழ மண்டலம் (9) வேங்கை மண்டலம் என்பனவாகும். இவற்றுள் சோழ மண்டலம் என்பது வடக்கு வெள்ளாறுக்கும் தெற்கு வெள்ளாறுக்கும் இடைப்-பட்ட பகுதி. பாண்டிய மண்டலம் இன்றுள்ள மதுரை, ராமநாத-புரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் அடங்கிய பகுதி. ஜெயங் கொண்ட சோழ மண்டலம் தென்பெண்ணாற்றுக்கும், திருப்பதி மலைக்கும் இடையே உள்ள பகுதியாகும். மும்முடிச் சோழமண்டலம், ராசராசசோழனால் பிடிக்கப்பட்ட இலங்கையின் ஒரு பகுதியாகும். நிகரிலி சோழ மண்டலம் என்பது நோலம்பாடியும் பெல்லாரி மாவட்-டமும் ஆகும். ஆதிராஜராஜசோழ மண்டலம் என்பது கொங்கு நாட்டைக் குறிக்கும். மலை மண்டலம் என்பது கேரள மாநிலத்தைக் குறிக்கும். முடிகொண்ட சோழ மண்டலம் என்பது கங்கபாடியையும், வேங்கை மண்டலம், வேங்கை ராஜ்ஜியத்தையும் குறிக்கும்.

இத்தகைய மண்டலங்கள், பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டன. இவ் வளநாடுகள் பின்னர் நாடுகளாகவும், நாடுகள் பல கூர்ரம் அல்லது கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. கோட்டம் அல்லது கூர்ரம் பல கிராமங்களைக் கொண்டது. கிராமங்கள் சுய ஆட்சி நிறு-வனங்களாக விளங்கின. பெரிய கிராமங்களும், நகரங்களும் தனியூர் என்று வழங்கப்பட்டன. மண்டலங்களின் ஆட்சிமுறை இளவரசர்-களிடம் விடப்பட்டிருந்தது.

இனி ஸ்தல அரசு குறித்துக் கூற விரும்புகிறேன். ஊராட்சியின் நிறுவனங்களில் முக்கியமானவை நான்கு. அவை சபை, தேவதானத்துச் சபை, ஊர், நகர் ஆகியவை ஆகும். இந்த நிறுவனங்களின் அமைப்பு, செயல் முறைகளைத் தெரிந்து கொள்ள நமக்குப் பலவிதமான கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன இக் கல்வெட்டுக்கள், இந்த சபைகளின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எத்தகைய பணிகளை மேற்கொள்கின்றனர் என்றும் நமக்குக் காட்டுகின்றன. சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களை வைத்து இச் சபைகளின் குறிப்பாக மகாசபையின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் காணலாம். அதன்படி கி.பி 907 முதல் கி பி. 1120 வரை நமக்கு 413 கல்வெட்டுக்களும் கி. பி. 1120 முதல் கி பி. 1216 வரை 89 கல்வெட்டுக்களும், கி.பி. 1216 முதல் 1279 வரை 40 கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன இவற்றை வைத்துப் பார்க்கும்போது கி.பி. 907 முதல் கி.பி. 1120 வரை உள்ள காலத்தை மகாசபை அல்லது சபையின் பொற்காலம் என்று கொள்ளலாம். மகாசபா அல்லது சபை என்பது சதுர்வேதிமங்கலங்களிலிருந்த பிராமணர்கள் குடியிருப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய சபை. ஊர் என்பது பிராமணர் அல்லாத மக்களின் உறுப்பினர்கள் அடங்கிய சபை தேவதானத்துச் சபை என்பது தேவதானங்களில் இருந்த சபை, நகர் என்பது வணிகர் வசித்த நகரங்களில் இருந்த சபை.

இந்தச் சபைகளுக்கு உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதைச் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன. முதலாம்பராந்தகஅரசரின், 12ஆவது 14ஆவது ஆண்டு ஆட்சியின்போது- அதாவது கி.பி. 919, கி.பி. 921 ஆகிய ஆண்டுகளில் உத்திரமேரூர் மகாசபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் கிடைத்துள்ளன. இவை மகாசபைக்கு உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதைவிளக்குகின்றன. அதன்படி கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். 30 பிரிவுகளில் இருந்தும் மக்கள் தங்களின் பிரதிநிதிகளை மகாசபைக்கு அனுப்புவர். மகாசபைக்கு உறுப்பினராவதற்குத் தகுதி நிர்ணயம் செய்திருந்தனர். அதன்படி கீழ்க்கண்ட தகுதிகள் வரையறுக்கப்பட்டிருந்தன.

(1) உறுப்பினர் ஆக ஒருவருக்கு ¼ வேலி நிலம் சொந்தமாக இருக்கவேண்டும். அத்தோடு சொந்த இடத்தில் வீடு கட்டியிருக்கவேண்டும்.

(2) 35 வயதுக்கு மேலும் 70 வயதுக்குக் கீழும் உள்ள வயதினராக இருக்கவேண்டும். அத்தோடு வேதங்களையும் பிரமாணங்களையும் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

அல்லது

எட்டில் ஒரு பகுதி வேலி நிலத்திற்குச் சொந்தமானவராகவும், ஏதேனும் ஒரு வேதம் தெரிந்தவராகவும் இருக்கவேண்டும்.

மேற்கூறிய தகுதிகள் இருப்பினும் கீழ்க்காணும் தகுதியின்மையும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை

(1) கடந்த மூன்று ஆண்டுக் காலமாக ஏதேனும் ஒரு வாரியத்தில் உறுப்பினராக இருந்தாலோ,

(2) யாரேனும் ஒரு வாரியத்தில் உறுப்பினராக இருந்து, அதன் வரவு-செலவுக் கணக்குகளை சமர்ப்பிக்காமல் இருந்தால் அந்த உறுப்பினரும், அவரது உறவினர்களும்

(3) பஞ்சமா பாதகங்களான பொய், களவு, காமம், சூது, கொலை போன்ற குற்றங்களைச் செய்தவர்களும், அவர்களின் உறவினர்களும்

(4) கீழ் வகுப்பினருடன் தொடர்பு வைத்திருந்தவர்களும்

(5) புலால் போன்ற தடுக்கப்பட்ட உணவுகளை உண்டவர்களும் ஆவன,

தகுதி உடையவர்கள் மட்டும் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மகாசபைக்கு உறுப்பினராகும் தகுதி பெற்ற அனைவரின் பெயரையும் பனைஓலையில் எழுதி ஒரு பானையில் போட்டு குலுக்குவார்கள். பிறகு ஒரு சிறுவனை அழைத்து எத்தனை உறுப்பினர்கள் தேவையோ அத்தனை ஓலைகளை எடுக்கச் சொல்லுவர். அப்போது அரசரின் ஆணையின்படி அரசாங்க அதிகாரி ஒருவர் வந்திருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனிப்பது வழக்கம். இதற்குக் குடவோலை முறை என்று பெயர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 30 உறுப்பினர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பல வாரியங்களின் பணியைச் செய்தனர். சம்வத்சர வாரியம் அல்லது வருடாந்தரக் குழு என்ற வாரியத்தில் வயது முதிர்ந்த அனுபவமிக்கவர்கள் நியமிக்கப்பட்டனர். இது போன்று தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்சவார வாரியம், பொன்

வாரியம் போன்ற வாரியங்களும் இருந்தன. தோட்ட வாரியம் ஊரில் உள்ள பூங்கா போன்ற தோட்டங்களையும், ஏரி வாரியம் நீர்ப்பாசன நிர்வாகத்தையும் கவனித்தன. பஞ்சவார வாரியம், நிலத்தில் வருகின்ற வருமானத்தை ஐந்தாகப் பிரித்து ஒரு பகுதியை நடுவண் அரசுக்கு அனுப்பும். பொன் வாரியம் தங்கம், தங்க நாணயத்தின் தரத்தை சோதனை செய்யும். மேலும், அது மகாசபையின் கருவூலமாகவும் விளங்கும். உத்திரமேரூர் அல்லாத வேறு கல்வெட்டுக்களில் இருந்து நீதிக்குழு, நிலக்குழு, உதாசினக்குழு போன்ற குழுக்களும் இருந்ததாகத் தெரிய வருகின்றது. உதாசினக்குழு என்பது புதியவர் அல்லது அந்நியர்களுக்கான குழு எனக் கருதப்படுகின்றது. இக் குழுக்களின் உறுப்பினரின் எண்ணிக்கை ஊருக்கு ஊர் வேறுபட்டது. உதாரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் 30 குடும்பங்களையும் தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் உள்ள செந்தலை 60 குடும்பங்களையும் கொண்டு நிர்வாகம் செய்தன. வாரியத்தின் உறுப்பினர்கள் கௌரவ உறுப்பினர்களே. இவர்களுக்கு ஊதியம் கிடையாது. இவ்வுறுப்பினர்களை 'வாரியப் பெருமக்கள்' என்பர். மகாசபையின் கூட்டம் ஊரில் உள்ள கோவில்களிலோ, மரத்தடியிலோ அல்லது ஏரியின் கரையிலோ நடைபெறும். வாரியங்களின் நிர்வாகம் பற்றி இவ்வுறுப்பினர்கள் விவாதிப்பர். விவாதத்திற்குப் பின்னர் பல பிரேரணைகளை நிறைவேற்றி கோவில் சுவற்றில் பொறுத்தி வைப்பர். கிராமத்தின் பல பணிகளைச் செவ்வனே செய்ய பல பணியாட்களைச் சபையினர் பணித்தனர். அவர்கள் மத்தியஸ்தர், கரணத்தான், பாடி காப்பான், தண்டுவான் (தண்டல்) அடிக்கீழ் நிற்போன் என்போர் ஆவர். இவர்கள் எல்லோரும் கிராமசபையில் ஊதியம் பெற்றுப் பணி புரியும் பணியாட்கள் கரணத்தான் என்பவன் கணக்கன் ஆவான். நாணயம் உள்ள ஒருவனே இவ் வேலைக்குப் பணிக்கப்பட்டான். ஆண்டுக்கொருமுறை கணக்குக் காட்ட வேண்டும். சபையாரிடம் கணக்குக் காட்டும்போது சிவக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின், கணக்கனுக்குச் சம்பளத்திற்கு மேல் கால் பங்கு பொன் கொடுக்கப்படும். ஊறுபடுமாயின் 10 கழஞ்சி பொன் தண்டம் விதிக்கப்படும். இவனுக்குச் சம்பளம், ஒரு நாளைக்கு நாலி நெல்லும், ஆண்டுக்கு எழு கழஞ்சுப் பொன்னும் ஆகும். பாடிக்காப்பான் என்போன் கலகம், திருட்டு முதலான குற்றங்கள் நிகழாதவாறு ஊரைக்காத்துவருபவன். அடிக்கீழ் நிற்பான் என்போன்.

ஊர்ச்சபையார்க்குக் குற்றவேல் புரியும் பணி மகன் ஆவான். மத்தி-யஸ்தன் என்போன், கிராம சபையார் கூட்டம் நடத்துமிடத்து அங்குச் செய்யப்படும் முடிவுகளை அவர்கள் நடுவிலிருந்து அவர்கள் கூறியபடி நிகழ்ச்சிக் குறிப்பில் எழுதுபவன்.

இச் சபையினர் ஊர்தோறும் சபையின் செலவிற்காக ஒரு வரி வாங்கினர். அதற்கு "சபா விநியோகம்" என்றும், 'ஊரிடு வரிபாடு' என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. இப் பஞ்சாயத்து ஆட்சி முறையில் பெரும்பாலும் நடுவண் அரசு தலையிடுவது இல்லை. நடுவண் அரசு பொதுவாக மக்களை வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து காப்பதும் உள் நாட்டில் அமைதியை நிலை நிறுத்துவதும், நாட்டின் பொரு-ளாதாரத்தையும், கலாச்சாரத்தைப் பெருக்குவதிலும் கவனம் செலுத்திற்று. இரு சபைகளுக்கிடையே தகராறு ஏதேனும் ஏற்பட்டால் ஒழிய அரசு பஞ்சாயத்து ஆட்சி முறையில் நடுவண் அரசினர் தலையிடு-வதில்லை. கிராம சபையினர், பொது இடங்களையும், தனியார் நிலங்-களின்மீது வரி விதிக்கும் நிர்வாகததையும் செய்து வந்தனர். பயன்-படா நிலத்தை உழவுக்குக் கொணர்ந்தனர். நிலங்களைத் தரவாரியாகப் பிரித்து வரிவிதித்து, வசூலித்து, ஒரு பகுதியை நடுவண் அரசுக்கு அனுப்பினர். வரி கொடுக்க மறுத்தோரின் நிலத்தை ஏலம் விட்டு விற்கும் உரிமையும் கிராம சபையிடம் இருந்தது. நிலத்தைக் கனியாட்சி, தேவதானம், பிரமதேயம், மடப்புரம், திருவிளையாட்டம் என்று பல பிரிவாகப் பிரித்திருந்தனர். கனியாட்சி என்பது தனியார் நிலம். தேவதானம் என்பது சிவன் கோவிலுக்கு வழங்கப்பட்ட நிலம். பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டநிலம் பிரம்மதேயம். மடங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் மடப்புரம் என்றும், விஷ்ணு கோவிலுக்கு கொடுக்கப்பட்ட நிலம் திருவிளையாட்டம் என்றும் வழங்கப்படும்.

பொதுப்பணிகளின் பெரிய திட்டங்களை நடுவண் அரசே மேற்-கொள்ளும். கிராமங்களுக்கிடையே சாலைகள் அமைத்தல், பாசனவசதி-கள் போன்றவற்றைக் கிராம சபையே கவனித்து வந்தது. கோவில், மருத்துவம், மடம், கல்வி ஆகிய பணிக்காக விடப்பட்ட மானியங்களை மேற்பார்வையிடும் பொறுப்பு தர்ம வாரியம் எனும் வாரியத்திடம் விடப்பட்டது. நீதி முறையை விசாரிக்க நியாயத்தார் எனப்படுவர் இருந்தனர். இவர்கள் குற்றவாளிகளை விசாரித்து குற்றவாளி, நிரபராதி எனத் தீர்ப்பளிப்பர். ஆனல் குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவது, அரசாங்கத்தில் நியமனம் செய்யப்பட்ட ஓர் அதிகாரியே. ஊர் அல்லது ஊரவர் சபை, பிராமணர் அல்லாத பிற குடிகள் வாழும்

கிராமங்களின் சபை. பிராமணர் வாழும் கிராமங்களில் உள்ள சபையின் ஆட்சிபோன்று, தங்கள் கிராமத்தில் உள்ள சூழ்நிலைக்கேற்றவாறு ஊர் என்னும் சபை ஆட்சி செய்தது. இந்த ஊர் சபையில் விவசாயிகள் போன்ற பல தொழிலில் ஈடுபட்டிருந்த அனைவரும் உறுப்பினர் ஆயினர். ஊராட்சியின் செயற் குழு, ஆளுங்கனம் என அழைக்கப்பட்டது. தண்டல் அல்லது வரி வசூலிப்பவர், நியாயத்தார் போன்ற அரசாங்க அதிகாரிகள் ஊர் சபையின் கீழ் பணியாற்றினர். இவ்வாறே நகர சபையில் வணிகர்களும், தேவதானத்துச் சபையிலும், கோவில்கள் பல அடங்கிய கிராமங்களில் ஒவ்வொரு கோவிலுக்கும் குழுக்களை அமைத்தும் நிர்வாகம் மேற்கொண்டனர்.

எனவே சோழர்களுடைய ஆட்சியில் கிராமங்கள் சுய ஆட்சி செய்தன எனத் தெரிகின்றது. இற்றை நாட்களில் பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியன்கள் என்று ஏற்பாடுகள் செய்து ஆட்சி செய்கின்றோம். என்றாலும், இக்காலத்தில் வாழும் நம்மைக் காட்டிலும் அக்கால மக்கள் அக்காலத்தில் இருந்த பஞ்சாயத்து ஆட்சிமுறையில் மன நிறைவும், மகிழ்ச்சியும் கொண்டிருந்தனர். அத்தகைய ஆட்சியின் பொற்காலம் கி. பி. 10 முதல் 12-ஆம் நூற்றாண்டுவரை இருந்தது எனக் கொள்ளலாம். 12-ஆம் நூற்றாண்டில் உள் நாட்டுக் குழப்பத்தாலும், 13-ஆம் நூற்றாண்டில் வெளிநாட்டிப் படையெடுப்பாலும் இவ்வாட்சி முறை வீழ்ச்சியுறத் தொடங்கிற்று.

# அற நெறித் திரட்டு

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
[மான்முருகனார்]
நாவலரில்லம், நாகர்கோவில்-2

### நல்லினம்

நல்லின மென்று நலந்தரும்; அல்லினம்
ஆவ தழித்து விழும். 1

### ஆராய்ச்சி

ஆராய்ந் தொருவினை யாற்றுக; சீராய்ந்து
செய்யாத செல்வந் தெறும். 2

### பழிவினை

அழிலில ரேனு மழிவர்; பழிதழுவும்
பான்மை பரந்து படின். 3

### பிழையுணர்ச்சி

பிழைத்துணர்ந்த தாமே பிறங்கும்; இழைத்திழைத்
தேற்ப வுணர்வ ரெனின். 4

### கற்றாரினஞ்சேரல்

உற்றறிவு சால வொளிர்ந்திடும்; கற்றறிவு
பெற்றவரைச் சாரப் பெறின். 5

### கல்வியின்பம்

கற்றற்கட் டோன்றுங் கழியின்ப மெற்றெனினும்
ஏழை யறிவ திலை. 6

### கல்லாதார் இழிதகவு

குன்றளவு செல்வத்த ராயினும், மன்றினுள்
மாண்டமெய்க் கல்வி யிலார். 7

### கல்லாதார் சொல்

கல்லாதார் யாது கழறினும், செல்லாது
தேர்ந்துநூல் கற்ருர் திறத்து. 8

### புகழ் வினை

உலகம் புகழ்வ வுருற்றல், அழிவிலா
வாக்கம் பயக்கு மது. 9

### செயற்றிறன்

ஏனுடைய ரேனு மியல்பறிந் தாற்ருக்கால்
தானு நகையுந் தரும். 10

### உடனுதவி

பல்லினத்தும் வேண்டப் படுவதால், நல்லினத்து
ஙப்போலும் வாழ்க்கை யவர். 11

(ஙப்போலும்-'ங' எனும் எழுத்தை ஒத்த; ஙகரம் சொல்லிடை நின்று பயன்படும். தலைமையேற்காவிடினும் பலருடன் சேர்த்து பயன்படுவர் சிலர்)

### பெண்ணேவல்

என்னேவல் செய்யினுஞ் செய்க; இயலறியாப்
பெண்ணேவல் செய்யாமை நன்று. 12

### விலைப் பெண்டிர்

பொருணச்சி மெய்வழங்கும் பூவையர் கேண்மை
அருளாட்சி வாழ்வார்க ணில். 13

### கழி வேட்கை

கருங்குழலார் மாட்டுக் கழிவேட்கை யுற்ருர்க்
கருங்குறைக ளாவ பல. 14

### சிறியார் நட்பு

அறிஞர் பகைகொளினுங் கொள்ளற்க வென்றும்
அறிவில் சிறியார் தொடர்பு. 15

## இல்லஞ்சல்

இல்லாளை யஞ்சி யிருப்பவன் எஞ்ஞான்றும்
நல்லாண்மை நாடுவ தில் 16

## ஊக்கம்

ஊக்க முடையா ருயர்வுடையவர், ஞாலத்தின்
ஆக்க மதுவொப்ப தில் 17

## பழகிய நட்பு

இன்னுங் கெனத்தா மிழப்பரோ பன்னாட்
பயின்ற வுறவின் பயன் 18

## புன்கேண்மை

என்கேண்மை யென்றுள் ளிகழுங் கயவர்தம்
புன்கேண்மை புன்மை தரும் 19

## நன்றுந்தீதும்

நன்றுதீ தாதலுந் தீதுநன் றாதலும்
ஒன்று முணரப் படா. 20

## இல்லறத்தியை மன்பு

அன்பொத்து நல்லில் லறத்தாற்றின் வாழ்பவர்க்
கின்பொத்து நிற்கு மியைந்து 21

## ஊழ்-முயற்சி

அனைத்துமீண் டுழென் றசைஇ யிருப்பார்
எனைத்தும் பெறுவதொன் றில் 22

ஊழு ழெனக்கூறி யுற்று முயலாரேல்
வீழு முரிதாய் விடும் 23

## கரவுநட்பு

நஞ்சம் பிறிதுண்டோ நட்பின் கரவுடையார்
நெஞ்சந் தனக்கு நிகர் 24

(கரவு-வஞ்சனை)

### பெருமைக்கோள்

யாம்பெரிய மென்று கருதற்க; ஆம்பெருமை
யார்க்கு மளத்த லரிது 25

### உதவி மறுத்தல்

உதவின வெல்லா மொருங்கு மறப்பர்
உதவா வுரைப்ப ருடன்று 26

### உற்றார்க்குத் தீங்குபுரிதல்

உற்றார்க்குந் தீங்கிழைத்த லுள்ளுங் கொடியவர்க்
கெற்றானு மொப்புரைப்ப தில் 27

### விலங்கு-மக்கள்

விலங்கின மெல்லா மிடலொக்கும்; ஒவ்வா
திலங்குபன் மக்க ளினம் 28

### கல்வியல்பு

தாங்கற் றளவினைத் தாமே யறிந்துழியும்
பாங்கி னுயர்வர் பலர் 29

### கற்பு

யவ்வென் சினைபோல இல்வாழ் மடவாரை
யாவர் திகர்ப்ப ரிவண் 30

('ய்' எனும் எழுத்தைப் போல, யகரமெய் 'ஆ' எனும் எழுத்தோடல்லாது சொல்லுக்கு முதலில் வராது)

### அறிவு புலப்படுதல்

அகக்காழ் கரம்போல்வ ரான்றவர்; புல்லர்
புறக்காழே போல்வர் புலம் 31

### இன்னாதாரும் பயன்படுவர்

நஞ்சமு மிக்க நலிவகற்றும்; எஞ்சலில்
இன்னாருந் தீர்ப்ப ரிடர். 32

### உள்ளந்திரிதல்

வும்முன்ன ரஃகுகரம் போல்வார் பலராவர்
தம்முன்னர்த் தக்கார் வரின் 33

### சீர்திருத்தம்

அறநெறியொ டின்பத்த தாகுந் திருத்தம்
மறநெறியின் மாற்றுவ தன்று. 34

### செல்வ முதலியவற்றுல் செருக்காமை

மிகவு கருதி மிகற்க; எவர்க்குந்
தகவே பெருமை தரும் 35

(மிகவு-செல்வமேம்பாடு)

### பெண்பிறப்பினுயர்வு

இறப்பில் கடமை யியைதலின் மக்கட்
பிறப்பிற் சிறந்தது பெண் 36

### அடக்கமுடையார்

அரும்பே யனைய தடக்கம்; அரும்பே
ஈலரனைய தாகு மடல் 37

### சினம்

சினத்தாற் கொடும்பாடு செய்யற்க, செய்யின்
இனத்தாற் கெடுத லெளிது 38

### அறம்

நன்மை பயப்ப தறமாகும்; பன்மைப்
பனுவல் பகரும் பகுத்து 39

### தீதகற்றல்

யாதெனினுஞ் செய்க வியல்புணர்ந் தியாவர்க்குந்
தீது செறியா தெனின் 40

# திருத்தக்க தேவரும் கம்பரும்

ரா. இராகவையங்கார்

(முன் தொடர்ச்சி)

கம்பர் ஆற்றுப்படலத்து,

புள்ளி பால்வரை பொன்னெ னுேக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைக
ளுள்ளி யுள்ள மெலாமு வந்தீயுமவ்,
வள்ளி யோரின் வழங்கின மேகமே,

எனப் பாடினுர்.

இது சிந்தாமணிக் கண்
தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளி வெண்
தோனி ரைத்தன போற் கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே.

என்னும் பாடற்கருத்தினைப் பற்றி வந்ததென்று கொள்ளலாம். கம்பர் மழைத் தாரையை வெள்ளி வீழென உவமித்து ''வெள்ளி வெண் கோனிரைத்தன போற் கொழுந் தாரைகள்''. என்னுஞ் சிந்தாமணி பற்றியே யாயினும் சிந்தாமணிக்கண் அவ்வெள்ளிக்கோல் இம்மலைச் சென்னியிற் சொரிதற்குக் காரணங் கூறப்பட்டதில்லை கம்பர் கூறியது அவ்வாறன்று; வானுலகு பொன்னுலகு; இமயமலை பொன்மலை; எனப்படுதலை நோக்கி, அவ்வானுலகு பொன்னுதலிற்றனக்கே பொன்மலை உரியதாவது; இம் மண்ணுலகிற் குரித்தாவதில்லையென்று கொண்டு, அதனைத் தனக்குரித்தாகப் பிணித்துக் கோடற்கு வெள்ளி வீழ்களை இடைவெளியே வீழ்த்திறுற்போல மேகம் தாரையை இமய மலை மேல் வழங்கின என்பது கம்பர் பாடிய பாட்டின் பொருள் வானுலகு பொன்னுலகாதலிற் பொன்மலை தன்பாலிருத்தற்குரித்து மண்ணுலகிற் குரியதன்று என்று கருதி அதனைத் தன்பாலிழுத்துக் கோடற்கு வெள்ளி வீழ்களை வீழ்த்தியது எனினும் அமையும், பொன் னெனல் நோக்கி வெள்ளி வீழ்த்திற்றென்றது. மணியைப் பொன்னுலும் பொன்னை வெள்ளியாலும் பிணிப்பது வழக்காதல் பற்றி என்று கண்டு கொள்க. ''*ஒள்ளழற் புரந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே*'' எனப்-புறப்பாட்டின்கண் (11) பொன்னுகிய. தாமரையை வெள்ளி நாராற் றொடுத்தது கூறினமையானும் இத் தன்மை யுணர்க, இமயமலையைப் பொன்மலை யென்பது பிங்கலந்தையிற் காண்க. புள்ளிமலை என்பதும் அவ்விமயத்திற் கொரு பெயர்.

இவ்வாறு பலபடியாக புனைந்து கூறுதல் அல்லது தாரையன்றேற்ற மட்டிற் கண்டு வெள்ளி வெண் கோலென்று வாளா கூறினர் இல்லை யென்க. ஈண்டுப் புள்ளிமலையைப் பொன்மலை யென்று வைத்து அதற்குப் பொருந்த வெள்ளி வீழ் எனத் தாரையைக் கூறினாற்போல ''மள்ளர் கண் மறுபடைமான யானைமேல், வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்'' எனக் கார் காலப் படலத்து மலையை யானை யாக வைத்து அதற்கு இயையப் பாய்தலும் வெண்மையுமுடையாற் றாரையை வெள்ளி வேல் எனக் கூறினர். யாண்டுக் கூறினும் பல-வற்றிற்கும் பொருந்தக் கூறுவதிவர்க்கியல்பென்க. கம்பர் உண்-டாட்டுப் படலத்து,

கண்மணி வள்ளத் துள்ளே களிக்குந்தன் முகத்தை நோக்கி
விண்மதி மதுவினுசை வீழ்ந்த தென் றெருத்தி யுன்னி
யுண்மகிழ் துணைவ னோடு மூடு நாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாகில் யானுந் தருவெனிந் நறவை யென்றுள்

எனப் பாடினர். இதன்கண் வள்ளத்து நறவிற் றன் முகத்தைக் கண்டு அதனை மதி யென்று மயங்கினாளென்பது, சிந்தாமணிக்கண் முத்தியிலம்பகத்து,

குழைமுக மிடவயிற் கோட்டி யேந்திய
அழனிறத் தேறலுண் மதிகண் டையென
நிழன்முகப் பகைகெடப் பருகி நீள்விசும்
பழலெனு நோக்குவான் மதிகண் டுடினாள்

என்னும் பாட்டிற் கண்டது. கம்பர் வாக்கியத்தில் மதி மதுவிற் றோன்றுவதற்கு மதி 'மதுவினசை வீழ்ந்தது' என்று ஏது கூறியுள்ளது. சிந்தாமணியில் அதற்கோரேது காணவில்லை. தன்முகத்தையே மதியெனக் கண்டு அதனையே முகப் பகையாக்கி அதனுக்கு நற-வினையீயாமல் உண்ணலினும், மதியை வள்ளத்துட் கண்டு கணவ-னுடன் ஊடியகாலத்துத் தன்னியல்பு திரிந்து அழலுவது இஃதென நினைந்து, அம் மதியினை நோக்கி, 'ஊடற்காலத்து என்னைச் சுடா தொழிவை யாயின் நினக்கு இம் மதுவினைத் தருவல்' என்று சொல்லி இவள் தன்குறையையும் அம் மதியின் குறையையும் முடிக்கக் கருதுதல் சிறந்ததேயா மென்க.

முன்.

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளை வன யாவையே

எனப் பெண்பாலார்க்குக் கல்வியறிவுடைமை கூறி அதன் பயனுக வருந்தி வந்தவர்க் கீதலும் உண்மை கூறினராதலால், அதற் கேற்பவே கொடையொடு கூறிய நல்ல குணத்தால் ஈண்டும் பெண் பாலைச் சிறப்பித்தராவர். இனிக் கம்பர் தாடகைவதைப் படலத்து.

"...... கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினய்"

என இராமனைக் கோசிகர் கூறியதாகக் கூறினர். இக் கருத்துச் சிந்தாமணியார் இலக்கணையினழகைப் புகழுமிடத்து,

"ஆண் விருப்புற்று நின்ருரவ் வளைத் தோளினரே" எனக் கூறியதனடியாய்ப் பிறந்ததொன்ருகும். சிந்தாமணியார் இலக்கணையின் அழகை நோக்கிய மகளிரெல்லாம் அவளை நுகர்தற்குரிய ஆண்மையை விரும்பி நின்ருர் என்ருர். கம்பர் சீராமமூர்த்தியினழகினைக் கண்ணிற் கண்ட ஆடவரெல்லாம் அவனை நுகர்தற்கேற்ற பெண்மையை விரும்புவர் என்ருர். இவ்விரிடத்தும் ஆண் பெண் என்னும் வேற்றுமையல்லது கருத்தொன்றேயாமென வைத்துத் தாரதம்மியம் இல்லையெனக் கொள்ளின் கம்பர் சிந்தாமணியார் கூறியதையே சிறிது பெயர் மாற்றித் தாமொன்று கூறினற் போலக் கூறியதல்லது உள்ளவாறு முன்னையதினும் பெருஞ்சுவை பயப்பத் தாமொன்றும் பாடியதில்லையெனக் கருத அமையும். இதன்கண் ஆராயவேண்டுவதொன்றுண்டு; அது சிந்தாமணியார் பெண்பாற் பக்கத்துக் கூறிய கருத்தொன்றை, என்னை காரணத்தாற் கம்பர் ஆண்பாற் பக்கத்து வைத்து மாற்றியுரைத் தனரென்பது பெண்பாற் பக்கத்து வைத்ததே பொருந்தியதெனக் கொண்டனராயின் கம்பர் தாமும் ஒரு பெண்பாலைச் சிறப்பிக்குமிடத்து அவ்வாறே கூறியொழியலாமே? அங்ஙனம் கூருமல் ஆண்பாற் பக்கத்து இக் கருத்தை வைத்தல் தாழ்ந்ததென்று தெரிந்து கொண்டே அதனைக் கூறப் புகுவது இழுக்கேயன்ருே? இவற்றையெல்லாம் நோக்குமிடத்துக் கம்பர் சிந்தாமணியார் கூறிய இக்கருத்தை நன்ருராய்ந்து இக்கருத்தைப் பெண்பாற்கேற்றுவினும் ஆண்பாற் பக்கத்து வைத்துரைத்தல் சிறந்ததென்று தெளிந்தபின்னேதான் இது கூறுவதற் கெழுந்தார் என்று கொள்ளுதலே பொருந்தியதாகும். இன்னும் ஒருவகையானும் இது துணியப் படும்' அது பின்வருமாறு சிந்தாமணியார் "ஆண் விருப்புற்று நின்ருரவ்வளைத் தோளினரே" என்றது இலக்கணை என்பாளைப் பல அணிகளாலும் அலங்கரித்து அங்ஙனம் அவளை அலங்கரித்த மகளிர் அவளுடைய பொலிவழகைக் கண்ட போதின்கண் என அறிக. இதற்கு முழுவதும் ஒத்த சமயோசிதம்.

இராமாவதாரத்துமுள்ளது, அது சீதையார் திருமணத்திற்காகக் கோலங்கண்டருளியபோது எனக்கொள்க. ஆங்குக் கம்பர் சிந்தாமணியார் கருத்தையே தழுவிப் பிராட்டியைப் பல மகளிர் பலவணிகளால் அலங்கரித்த பின்னர் அம்மகளிர் பலரும் தேவியாரின் பேரழகைக் கண்களாற் பருகித்தகை தடுமாறி நின்ருர் என வுரைத்துளார். அங்ஙனம் பிற பெண்டிரெல்லாம் அழகை மாந்திக் களிமயக்குற்ருர் என்று கூறுதற்குடம்பட்ட கம்பருக்குச் சிந்தாமணியாருடைய பெண்டிர் ஆண் விருப்புறுங் கருத்துமுடம் பாடாயின், ஆண்டுக் கூறிப்போவர் என்க, கம்பராங்குக் கூறியது.

கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டுபோல
வஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினு ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறிநின்ருர்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யான்ரே.

என்பது. இப்பொருத்தமான விடத்துக் கம்பர் சிந்தாமணியார் கருத்துப்படி அழகு மாந்திய பெண்களெல்லாம் ஆண் விருப்புற்ருர் என்று கூறினரில்லை. மற்று, மாதரார் அழகு மாந்தினர் என்ருராலெனின், மாதர்கள் ஒரு பெண்ணழகை மாந்திஞர்களென்றற்கும் மாதர்கள் ஒரு பெண்ணழகைக் கண்டு அவள்பாற் காமந்துய்த்தற்கு ஆண்டன்மையினை விரும்பிஞர்களென்றற்கும் வேற்றுமை பெரிதன்றே? மற்று 'மஞ்சர்க்குப், மாதரார்க்கும் மனமென்பது ஒன்று என ஈண்டுக்கூறியது என்னெனின், இங்கே பெண்ணழகைப் பெண்கள் மாந்தினர் என்றன்ரே கூறிஞர். 'பெண் என்பது மைந்தர் மட்டில் நுகரும் பொருளேயாக நினையற்க; அது பெண்ணுனும் அழகு நுகரப்படும். ஆணுக்கும் பெண்ணுக்கும் நுகரும் மனம் வேற்றுமையில்லாது ஒரு படித்தாதலான்! என்று கூறியதாமென்க. ஈண்டுச் சிந்தாமணியார் கருத்தைக் கம்பர் தழுவாமைக்கு ஏது விசாரித்தால் தானே இவ்விருவர் கருத்துக்கும் ஒருவாறு தாரதம்மியங் காணலாமென்று கருதுகின்றேன். கம்பர் சீதையாரைச் ஸ்ரீராமமூர்த்தியன்றிப் பிறராடவர் விரும்பினதாகக் கூறுதலேயில்லை. அது பிராட்டியார் பெருந்தூய்மைக் கேற்காதென்பது அவர் கருத்தாம். பிறராடவரெல்லாம் பிராட்டியாரைத் தெய்வமாகக் கொண்டு கைதொழுது நிற்பரென்றே கூறுவர். இவ்வாறு,

நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையநுகர் கொற்றவனு மாதவருமல்லார்
கைகடலை புக்கன கருத்துளது மெல்லாந்
தெய்வமென வுற்றவுடல் சிந்தைவச மன்ரே

எனக் கோலங்காண் படலத்து வந்ததனாலறியப்படும். இம்முறை யினின்று தவறி விழைந்தவன் அரக்கன் பட்டபாடே இவ்விராமவ தாரமானது, சீராமமூர்த்தியைக் கண்டு பல மகளிரும் விழைந்ததாகக் கூறுவதல்லது பிராட்டியைக் கண்டு பல புருஷரும் விழைந்ததாகவே நினைக்கவுஞ் செய்யார்.' இத்தகைய பேரறிவாளர் பிராட்டியினழகைக் கண்டு பெண்கள் ஆண்மையை விரும்பினரெனக் கூறுவரோ கூரூர்.

இனி, "ஆண் விருப்புற்று நின்றாரவ்வளைத் தோளினாரே" என்ற சிந்தாமணியார் கூற்றினை நோக்குமிடத்து 'அவ்வளைத்தோளினாராகிய பலரும் இவளை நுகர்தற்கு ஆண்மையைவிரும்பினர்' என்றற்கண் ஒரு மகளைப் பல ஆடவர் விழைகின்றது தொனிக்கின்றது. ஆடவர் பெண் மையை யவாவுந்தோளினாய்" என்ற கம்பர் கூற்றைநோக்குமிடத்துப் பல ஆண்மக்களும் இவனை நுகர்தற்குப் பெண்மையை விரும்புவர் என்றற்கண் ஒரு மகனைப் பல மகளிர் விழைகின்றது தொனிக்கின்றது பெண் ஆண் விரும்புதற்கண், பெண் தனக்குரிய பணிவு, மென்மை, அமைதித்தன்மை இவற்றைவிட்டுத் தன்னினுயர்ந்த ஆண்டன்மையை, விருப்பத்தான் விழைவுற்ற பெண்ணைத் தனக்குப் பணித்ததாகச்செய்ய நினைக்கின்றதுஉளது. ஆண் பெண்மையை விரும்பற்கண் ஆண் தனக் குரிய பெருமையினையும் உரனையும்விட்டுத்தன்னிற்றணிந்த பெண்டன் மையினை விரும்பித்தான் விழைவுள்ள ஆணுக்குத்தான் பணிந்ததாகச் செய்ய நினைக்கின்றது. "தன்னையுந் துறக்குந்தன்மை காமத்தே தங் கிற்றன்றே" என்று கம்பரே கூறியுள்ளதுக்கேற்ப ஆண் பெண்மை விரும்புதலிலே தன்னை விடுத்தலிருந்த லன்றிப் பெண் ஆண்மையை விரும்பற்கண் தன்னையுயர்த்தலேயுள்ளது என்று கண்டுகொள்க. இவற்றாற்கம்பர்சிந்தாமணியார் கூறியாங்குக்கூறாமல் மாற்றியுரைத்த தற்குக் காரணந்தேறப்படும். இதுபோலச் சிந்தாமணியார் கருத்துக்-களை ஆங்காங்கு தழுவியும் மாற்றியும் புனைந்தன பலவுள. சிந்தாமணி யார் 'பருந்து மதனிழலும் பாட்டுமொழாலும் (328) காந்த என்றார். கம்பர் "பருந்தொடு நிழல் சென்றன்ன வியலிசைப் பயன்றுய்ப்பாரும்' என்பார். சிந்தாமணியார் 'வள்ளி வாரிய குழியின் வளர்பொன்னும் வயிரமுமிமைக்கும்" (கேமசரி-9) என்றார் கம்பர் வள்ளி கொள்பவர் கொள்வன மாமணி" என்பார். இவற்றையெல்லாம் ஈண்டு விரிபயிற் பெருகும். இத்துணையுங் கூறியவாற்றாற் கம்பர்திருத்தக்க தேவருடைய சிந்தாமணியையும் நன்று பயின்றவரே யாவரென்பது தெளியப்படும்.

(தொடரும்)

காலஞ் சென்ற

# ஸ்ரீமத் கனகசபைப் பிள்ளையவர்களும் அவர் தமிழாராய்ச்சியும்

ரா. இராகவையங்கார்

தமிழரின் பண்டை நாகரிகச் சிறப்புக்களை தமிழ் நூல்களையும் புறநூல்களையும் துணைக்கொண்டு, நவீன முறைக்கேற்ப ஆராய்ச்சி செய்த ஆங்கிலம் வல்ல அறிஞருள்ளே, சமீப காலத்திலிருந்து தமிழகம் வருந்தக் காலஞ்சென்ற ஸ்ரீமத் கனகசபைப் பிள்ளையவர்களை முதல்வராகச் சொல்லுதல் புனைந்து உரையாகாது. இந்நூற்றுண்டில், ஆங்கிலத்திலும், தமிழிலும் அதி மேதையராய் விளங்கிய தமிழ்மக்கள் சிலரும் உளராயினும், தமிழின் பழமை பெருமைகளை நுண்ணறிவாலும் ஆராய்ச்சி வன்மையாலும் நான்முகமாக வெளியிட்டுத் தம்புகழ் நிறுவிய தன்மையில் பிள்ளையவர்களையடுத்தே அவர்கள் நிற்றற்குரியர். கனக சபைப் பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட "1800 வருஷத்துக்கு முந்திய தமிழர்" என்றும் அரும்பெரும் நூலிலே அவர்களது ஆராய்ச்சித் திறனையும் நுண்ணறிவையுங் காட்டவல்ல சாஸனமென்னலாம். கடைச்சங்க நாளிலிருந்த தமிழ் நாட்டினியல்களையும் யவனர் முதலிய அந்நியர்கட்கும் தமிழர்க்கும் அக்காலத்து நிகழ்ந்த தொடர்புகளையும் தமிழரது சாதிகுலங்களையும் தமிழ்ப்பேரரசர் சிற்றரசர் வரலாறுகளையும் தமிழர் வகக்க ஒழுக்கங்களையும் பண்டை நூலாசிரியர் சரிதங்களையும் தமிழர் மதக்கொள்கைகளையும் பிறவற்றையும் பற்றி அரிய பெரிய நுணுக்கங்காட்டிப் பிள்ளையவர்கள் எழுதிப்போந்த விஷயங்கள், தமிழினும் ஆங்கிலத்தினும் பயிற்சியுடைய ஒவ்வொருவர் உள்ளத்தையும் கவரத் தக்கன வென்பதில் ஐயமில்லை நாகரிகமும் அறிவாற்றல்களும், தமிழர்பால் முற்காலத்தே புகழத்தக்கவாறு அமைந்திருந்த தன்மையை அகக்கருவி புறக்கருவிகள் கொண்டு இனிய நடையிற் பிள்ளையவர்கள் எழுதிச் செல்லும் திறமை பெரிதும் வியப்புறுத்தவல்லது. அவர்கணூலை நீளப் படித்து வந்தால் அதன்கணுள்ள வாக்கியங்கள் பெரும்பாலவும் ஒவ்வோராதாரத்தைக் கொண்டு எழுதப்பட்டிருத்தல் காணலாம். பிள்ளையவர்கள் தமிழ்க்குரிய சரிதத்தை அந்நிய பாஷையில் எழுதிச் சென்றது ஒரு குறையென்று சிலர் கருதக்கூடுமாயினும் ஆராய்ச்சியில்லாதே தமிழின் பழைமைபெருமைகளை குறுக்கிப் பேசும் ஆங்கிலப் பண்டிதரை அறிவுறுத்தற்கு அப் பாஷை வேண்டப்படுவதேயாகும்

அன்றியும் நாமெடுத்துக் கொண்ட சரித்திர சம்பந்தமான விஷயங்கள் அதற்கு ஆங்கிலமே ஏற்றதென்பது பிள்ளையவர்கள் கருத்தாகவிருத்தலுங் கூடும். கனக சபைப் பிள்ளையவர்கள் ஆங்கில பாஷையில் காட்டும் அற்புத நடைபோலவே தமிழிலும் எழுத வல்லவர்களென்பதைச் செந்தமிழில் முன்பு எழுதிப் போந்த 'தமிழ்ப்பெருமை' என்னும் வியாசமே நன்கு விளக்கவல்லது.

பிள்ளையவர்கள், மேற்குறித்த நூலேயன்றி அவ்வக் காலங்களிற் பத்திரங்களுக்கு எழுதிய அரிய விஷயங்களும் பல உண்டு. அவர்கள் ஆராய்ச்சியில் வெளிவந்த தமிழ்ச் சரித்திர நுட்பங்களும் எண்ணிறந்தனவாம். அவை எல்லாவற்றை இங்கு எடுத்துக் கூறுவதற்குப் போதியவிடமும் அவகாசமுமில்லேயேனும் அவற்றுட் சிலவற்றைச் செந்தமிழபிமானிகளும் படித்து மகிழுமாறு கீழே வரைகின்றேன்'

நூற்றுவர் கன்னர் :- சிலப்பதிகாரத்திலே, செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயிலெடுப்பித்து விழாக் கொண்டாடிய காலத்தே. இலங்கையரசனுகிய கயவாகு என்பானும் உடனிருந்தனனென்று கூறப்பட்டுள்ளது. இலங்கை பழைய சரித்திர நூல்களாகிய மகாவமிசம் தீபவமிசம் முதலியற்றிற் கண்ட அத் தீவு அரசர் வரிசையில் கயவாகு என்னும் பேருடையார் இருவர் காணப்படுகின்றனர். அவருள் பிந்தியவன் மிகவும் பிற்காலத்தவனுதலின், முதற் கயவாகு சிலப்பதிகாரத்துக்கேற்றவனென்று கொள்ளத்தக்கது. இவ்வேந்தன் இற்றைக்கு 1750 வருஷத்துக்கு முன்பிருந்தவனென்பது அவ்விலங்கா மான்மியங்களாற் பிரசித்தமாம். ஆகவே அக் கயவாகுடன் விழாக் கொண்டாடிய சேரன் செங்குட்டுவனும் அவனைச் சார்ந்தோரும் இற்றைக்கு 18 நூற்ருண்டுக்கு முன்பு விளங்கியவரென்பதாயிற்று. இக் கொள்கையைக் கனகசபையவர்கள் தம் நுணுகிய ஆராய்ச்சியால் மற்ருராதாரங்காட்டி நிறுவியிருத்தல் புகழத்தக்கது. சிலப்பதிகாரத்திலே செங்குட்டுவன் வடக்கே சென்றிருந்த காலத்துக் கங்கையாற்றை நூற்றுவர்கன்னர் தொடர்ந்த படகுகளாற் ருண்டிச் சென்ருனென்று சொல்லப்படுகின்றது. இந்நூற்றுவர் கன்னரென்போர் வடமொழியிற் 'சதகர்னி' என்றழைக்கப் பெறுவர் என்றும், இவர் மகத நாடாண்ட ஆந்திரவரசர் என்றும், இவ்வரசர் இன்றைக்கு 1750 வருஷத்துக்கு முன் விளங்கியவரென்றும் விஷ்ணு மச்சபுராணங்களைக் கொண்டு

பிள்ளையவர்கள் காட்டியிருக்கின்றார்கள். இவ்வரிய விஷயம் இளங்கோவடிகள் உடன்பிறந்தவனாகிய செங்குட்டுவன் 1750 வருஷத்துக்கு முன்பிருந்த இலங்கை வேந்தனாகிய கயவாகு காலத்தவன் என்று முற்கூறியதோடு பெரிதும் ஒற்றுமைப்பட்டு, கடைச்சங்ககாலத்தைக் கரதலாமலக மாக்குதல் காண்க. இவ்வரிய சரித்திர நுட்பத்தை வெளியிட்டவருடைய ஆராய்ச்சி வியக்கத்தக்கதன்றோ?

தமிழகம் :- நம் தமிழ்நாட்டுக்கு முற்காலத்திலே வழங்கிய பெயர் 'தமிழகம்' என்பது. இஃது 'இமிழ்கடல் வரைப்பிற் றமிழகமறிய' எனச் சிலப்பதிகாரத்தும், 'சம்புத் தீவினுட் டமிழக மருங்கில்,' என மணிமேகலையினும் 'இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க' என பதிற்றுப்பத்துப் பதிகத்தினும் வருதலால் இனிது தெளியப்படும். இத் தமிழகம் என்ற பெயர், 1750 வருஷத்துக்கு முந்திய டாலமி முதலிய யவனப் பண்டிதர் குறிப்புக்களில் 'லிமரிக்' எனவும், 1600 வருஷத்துக்குமுன் வரையப்பட்டதென்று கருதப்படும் 'பியூடிஞ்சர்' படத்தில் 'டமிரிக்' எனவும் திரிந்து வழங்கப்பட்டுள்ளது. இவற்றால் கடைச்சங்க நாளில் இந்நாடு தமிழகமென்னும் பெயரால் வழங்கப்பெற்றதென்பது விளக்கமாம். நம் தமிழ்நாட்டின் ஆதிப்பெயர் இஃதென்று நம் ஆராய்ச்சியால் விளங்கவைத்தவர் பிள்ளையவர்களே.

குமரியாற்றினழிவு :- சிலப்பதிகாரம், கலித்தொகை முதலிய நூல்களிற் கூறப்பட்ட குமரியாறு கடல் கொள்ளப்பட்டது. இன்றைக்கு 2100 வருஷங்கட்கு முன்னிகழ்ந்ததென்று மகாவமிச முதலிய நூல்கள் கொண்டு பிள்ளையவர்கள் வரையறுத்துள்ளார்கள். இக்கொள்கையே முடிவாகும் என்பதை, மற்றொரு காரணத்தாலும் நிறுவக்கூடும். இன்றைக்கு 2300 ஆண்டுகட்கு முன் சந்திரகுப்த சக்கரவர்த்தியால் யவனதேசாதிபதி விடுத்த தூதராய் இத்தேசத்திற்கு வந்து சென்ற மெகஸ்தனிஸ் என்பார், இலங்கா தீபத்தைப் பற்றிய தங்குறிப்பிலே 'இத்தீவும் இந்தியாவினின்று ஒரு நதியால் பிரிக்கப்படுகின்றது' என்றும் பொருள்பட எழுதியுள்ளார். இஃது அத்தூதர் காலத்தில், பரதகண்டத்தின் தென்னெல்லையாக நின்றது ஒருநதி என்பதை நன்றாகக் காட்டும். மெகஸ்தனீஸுக்கு நான்கு நூற்றாண்டுக்குப் பின்பு இந்நாடு வந்து சென்ற 'பிளைநி' முதலிய யவனபண்டிதர் நாளிலே இந்நதி மறைந்தொழிந்ததென்பது அவர் குறிப்புகளாற் புலனாம். இவ்வாறு 2300 ஆண்டுகளுக்கு முன் பரதகண்டத்தின் தென்னெல்லையாய் விளங்கிப் பின்பு இல்லையானதென்று அந்நியரெழுத்துக்களால் அறியப்பட்ட நதியானது, தமிழ்நூல்களிற் சொல்லப்

பட்டபடி, இத்தேயத்தின் தென்னெல்லையாய்ப் பின்னர் கடல் கொண்டொழிந்த குமரியாருகவேயிருத்தல் வேண்டுமென்று நாம் கருதவிடமுண்டன்ருே? இங்ஙனம் கருதற்கேற்ப, மெகஸ்தனிஸாக்குப் பின்னும் பிளிநி முதலியோருக்கு முன்னுமான காலத்தே அஃதாவது இற்றைக்கு 2100 ஆண்டுகட்கு முன்னே, திஸ்ஸா அரசன் ஆட்சியில் இலங்கையையடுத்து ஒரு பெருங்கடல்கோள் நிகழ்ந்ததென்று மகாவமிசம் 21-ஆம் அத்தியாயத்துக் கூறப்படுகின்றது. இதனையே குமரியாற்றினழிவுக்குக் காரணமான கடல்கோளென்று முன்கூறிவந்த காரணத்தாற் றுணியலாம். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நின்ற குமரியாருனது, இப்போதுள்ள பாம்பனுறு போன்ற ஒரு பெருங் கடற்கழியாதல் வேண்டும். இவற்ருல், கனகசபையவர்கள் குமரியாற்றினழிவு நிகழ்ந்தது இற்றைக்கு 2100 ஆண்டுகட்கு முனபென்றுகூறியது பொருந்தியதாதல் காண்க. குமரியாற்றினழிவுபற்றிய தமிழ் வழக்குத் தெரியாது. ஆங்கிலப் பண்டிதர் சிலர் மெகஸ்தனிஸ் எழுத்திற்கு வேறு பொருள் கொண்டனர்.

*யவனர் :-* முன்னாளில் கிரேக்க தேசத்தார்க்கும் தமிழருக்குமிருந்த தொடர்பை முன்னூல் பனுவல்கள் பலவற்றையும் ஆராய்ந்து பிள்ளையவர்கள் எழுதியிருப்பன அடியில்வருமாறு ;- 'தமிழகத்திற்றிறங்கிய மேற்றிசை வியாபாரிகள் யவனர் எனப்படுவர். யவனர் என்னும் பதம் கிரேக்கரைக் குறித்தற்கு அவர் மொழியில் வழங்கும் 'ஐயோனிஸ்' என்பதன் சிதைவு. வடநூல்களில் கிரேக்கரைக் குறிக்க யவனமதம் வழங்குகின்றது. அவ்வாறே பழைய தமிழ் நூல்களிலும், கிரேக்கரையும் உரோமரையும் குறிக்க யவனர் என்ற சொல் வழங்கப்படுகின்றது. பாண்டியன் நன்மாறனை நக்கீரர் பின்வருமாறு விளிக்கின்ருர்.

'யவனர் நன்கலந் தந்த தண்கமழ்தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாள் மாற;

(புறம் : 56)

இப் புலவராற் குறிக்கப்பட்ட யவனர் எகிப்து தேயத்தினின்று வந்த கிரேக்கரேயாவர். ஏனெனில் பெரிப்பிளஸ் கூறியவாறு இவ்வெகிப்து வணிகரே முசிறி, வேய்க்கரை முதலிய துறைமுகங்களில் சாராயம், பித்தளை, ஈயம், கண்ணுடி இவைகளை விற்று மிளகு, வெற்றிலை, தந்தம், முத்து, முதலிய பொருள்களை வாங்கிச் சென்றனர். இவர்கள் ஜூலை மாதம் புறப்பட்டு 40-ஆம் நாளில்

 முசிறிவந்து சேருவதும் மலை நாடுகளில் மூன்று மாதந்தங்கி டிஸம்பர் ஜனவரி மாதங்களில் தங்கள் தேசநோக்கிச் செல்வதும் பெருவழக்கமாயிருந்தன. இவ்வாறு மலைநாட்டில் அலைந்து திரியுங்கால் இக்கிரேக்கர் தம் நாகரிகங்களைத் தமிழர்க்குப் புகட்டியிருக்கலாம். இந்து மகா சமுத்திரத்திலே கப்பற் கொள்ளைக்கூட்டத்தார் மிகுதியாதலால் கிரேக்கர் தங்கப்பலுடன் விற்படையும் உடன் கொணருவர். அந்நாளில் எகிப்து தேசம் உரோமரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால், அவ்விற்படைவீரர் உரோமராயிருத்தல் வேண்டும். அவ் வீரருடைய சிறந்த படைகளும் ஒழுக்க முறைகளும், அவருடன் நல்லுறவாடி அவர் நாகரிகத்தை அடைய வேண்டுமென்ற அவாவைத் தமிழர்க்கு உண்டாக்காமலிரா. பாண்டியர்தம் உரோமரின் கூட்டுறவும் பயனை முதன்முதல் உணர்ந்தவர். இப் பாண்டியரில் ஒருவன் உரோம வேந்தனது நட்பு வேண்டி அகஸ்டஸ் சீம்ருக்கு இருமுறை தூதனுப்பினுன் இவற்றில் ஒரு தௌத்தியம் அவ்வகஸ்டஸ் 'டெரகோணு' என்னும் இடத்தில் இருக்கும்போது சீசிறந்த 18-ஆம் வருஷம் (கி.மு. 26) நிகழ்ந்தது. மற்றது, அந் நிகழ்ச்சிக்கு ஆறுவருஷத்திற்குப் பின்பு அவ்வரசன் 'சாமாஸ்' என்னுமிடத்திலிருநதபோது நடந்தது. உரோம வீரர் பாண்டியரிடத்தும் மற்றத் தமிழரசரிடத்தும அமர்ந்திருந்தனர். பாண்டியன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் காலத்தே மதுரைக் கோட்டை வாயிலைக் காத்தற்கு இவ் வீரர் நியமிக்கப்பட்டிருந்தனர். (சிலப்பதிகாரக் காதை 14 அடி 66 67) இக் காலத்திலிருந்த நப்பூதனூர் என்றும் புலவர் பாசறையில் கடகாரத்திலிருந்த தமிழ் வேந்தனொருவனை அடியில் வருமாறு வருணிக்கிறூர்.

> "மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
> மெய்ப்பை புக்கவெருவருந் தோற்றத்து
> வலிபுணர்யாக்கை வன்கண் யவனர்
> புலித்தொடர் விட்ட புனைமா ணல்விற்
> றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
> ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
> ளுடம்பி னுரைக்கு முரையாநாவிற்
> படம்புகு மிலேச்ச ருழைய ராக;' (முல்லைப்பாட்டு)

இதனால், யவனரும் மிலேச்சரும் தமிரசருக்கு மெய்க்காப்பாராக நியமிக்கப்பட்டிருந்தமை வெளியாம். யவனருடைய கலங்களும், ஒதிம விளக்குகளும் (பெரும்பாண்) பாவை விளக்குகளும் (நெடுநல்) தமிழகத்தில் மிகுதியாக உபயோகிக்கப்பட்டனவாகத் தெரிகின்றது.

கீழ்த்திசையிற் பெரிய துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தை யவன வியாபாரிகளுடைய குடியிருப்பொன்று உண்டு. (சிலப்-காதை) உரோமருடைய வர்த்தகம் தமிழகத்திலும் இந்தியாவின் ஏனைப்பாகங்களிலும் அதிகமாகவே நிகழ்ந்தது. பிளைநி சொல்லுமாறு, இந்தியா ஆண்டுதோறும் உரோம ராஜ்யத்தினின்று 986,979 பௌன் கவர்தற்குரிய பண்டங்களை "ஏற்றுமதி" செய்துவர, அப்பண்டங்கள் அவ்வந்நிய நாடுகளில் 100 மடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன. முன்னால் உரோமருடைய தங்க நாணயங்கள் அதிகமாக இங்கு வழங்கலாயின என்பதற்கு அறிகுறியாக, அகஸ்டஸ் காலம் முதல் ஜேனோ காலம் வரை (கி.மு. 46—கி.பி. 491) யுள்ள உரோம நாணயங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வெட்டியெடுக்கப்படுகின்றன. கி பி. 226ல் எழுதப்பட்ட "பியூடிஞ்சர்" படத்தின்படி, உரோமர் பிற்காலத்தும் தம் வியாபாரத்தை காத்தற்கு 840-1200 வரை கொண்ட விற்படைவீரரை முசிறியில் வைத்திருந்தனர். இதேயிடத்தில் அகஸ்டஸுக்கு ஒரு கோயிலும் எடுப்பித்தனர் என்பது. இவை, பலரும் அறிந்து மகிழத்தக்க விஷயங்களாம்.

திரையர்—சங்க நூல்களிலே. சோழரில் ஒரு பிரிவினராய்த் தொண்டை நாடாண்டவரென்று சொல்லப்படும் திரையரைப்பற்றிப் பிள்ளையவர்கள் எழுதியவை அறிந்து மகிழத்தக்கன. இவ்வரசர் கடலினின்று வந்து இந்நாடாண்டமை பற்றித் "திரையர்" எனப் பெயர் பெற்றார் சங்ககாலத்தே காஞ்சியிலிருந்து ஆட்சிபுரிந்த தொண்டைமானிளந்திரையனைப்பற்றிய பெரும்பாணாற்றுப்படையில்

"திரைதரு மரபி னுரவோ ரும்பல்" என வருதலாலும்,

"கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றுய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்-வெம்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு".

என்னும் இனிய வெண்பாவாலும் இதனை அறிக இத்திரையர் சோழர்க்கு, நாக கன்னிகை யொருத்தியிடந் தோன்றியவரே என்பது. மேற் கூறியவடிக்கு நச்சினார்க்கினியரெழுதிய விசேட வுரையாலும், "தொண்டை மான்கள் சரிதை" என்னும் நூலாலும் விளங்குகிறது, இக்கதையும் பிறவும், திரையரென்பார் அந்நிய நாட்டினின்று வந்து தமிழ்ச் சம்பந்தம் பெற்றவரென்பதை நன்கு விளக்கும். இவர்கள் தமிழ்நாட்டுக்குரியவரல்லமென்பதைப் பிள்ளை

யவர்கள் தொண்டை மண்டலப் பட்டயத்திலே இவர்களைக் பற்றிக் கூறியவற்றைத் தக்க சான்ருகக் காட்டியிருக்கிருர்கள். அப்பட்டயத்தில். பங்காளத்திரையர், சீனத்திரையர், கடாரத்திரையர், சிங்களத்திரையர், பல்லவத்திரையர் எனத் திரையரிற் பல வகுப்பினரிருந்ததாகக் கூறப்படுகிறது. இவற்றுள் கடாரம் என்பது இப்போது ''பர்மா'' என்றழைக்கப் பெறும் தேசமாகும். (இவ் வுண்மையைப்) பல தக்க காரணங்களுடன் வெளியிட்டவரும் கனகசபையவர்களே இத் திரையர், பகுப்புகளால் அவர் பிறநாடுகளின்று கடல் வழியாகத் தென்ஞடைந்து ஆட்சி புரிந்தவரென்பது கரதலாமலகமாகும்.

தமிழர்:- இவர் வடக்கினின்றே தென்னடு வந்தவராதல் வேண்டுமென்பது பிள்ளையவர்கள் கொள்கை. இக்கொள்கைக்குப் பல சிறந்த காரணங்காட்டி அவர்கள் ''செந்தமிழில்'' எழுதிப் போந்த 'தமிழ்ப்பெருமை' என்னும் வியாசத்தே விளக்கியிருத்தலால், அவற்றை இங்கே கூறுதல் மிகையாம்.

இன்னும் தமிழரது பண்டை வழக்கவொழுக்கங்களைப் பற்றிப் பிள்ளையவர்களெழுதியுள்ள பாகம் பெரிதும் மதிக்கத்தக்கது. சங்க நூல்களையும் பிறவற்றையும் கடைந்து துருவி அவர்கள் அவ் விஷயம் எழுதியுள்ளார்களென்பதை அதைப் படிக்குமவர் நன்கறிவர்.

இவ்வாறே கனகசபையவர்களது ஆராய்சிகளில் காணும் சரித்திர நுட்பங்களையெல்லாம் எடுத்துரைப்பின் விரியுமென்று நிறுத்துகிறேன். பிள்ளையவர்களது சரித்திர வாராய்ச்சி முடிபுகளில் சிற்சில, பிற்கிடைத்த வேறு கருவிகள் சிலவற்ருல் மாறுபடக்கூடியனவாயிருப்பினும், அக்கருவிகளில்லாத காலத்தே ஆராய்ந்த அவர்கள் பெருமையை, அம்மாறுபாடு மாறுபடுத்தவல்லனவல்ல 'குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள் மிகைநாடி மிக்ககொள்' ளுதல் நல்லறிஞர் மரபன்ருே'

'தபாலிலாகா' வில் உயர்ந்த நிலைமை வகித்த பிள்ளையவர்கள் தம் வேலை மிகுதிக்கிடையே அறிஞர் வியக்கும் வண்ணம் இவ்வாறு தமிழாராய்ச்சியையும் விடாது புரிந்து வந்தமை வியக்கத்தக்கதாம்' இத்தகைய பேரறிவாளர் தமிழகம் வருந்தத் திடீரெனச் சின்னுண் முன்னர்க் காலஞ் சென்றது தமிழ் மக்கட்குப் பெருந்துக்கம் விளைக்குமென்பதில் ஐயமில்லை.

செந்தமிழ் தொகுதி 4, பகுதி 1

# நாட்டுத் தெய்வங்கள்-2

க. சின்னப்பா எம். ஏ,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பெருமையொடு மறைந்த பெண்கள் பிற்காலத்தே பெண் தெய்வங்களாக வணங்கப் பட்டனர் என்பது சென்ற இதழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காளியம்மன் :

பெண்களின் பெயரால் நூற்றுக்கணக்கான தெய்வங்கள் திரு-மங்கலம் வட்டாரத்தில் போற்றப்படுகின்றனர். சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கொற்றவை வணக்கம்தான் இப்பெண் தெய்வப் பெருக்கத்திற்குக் காரணம் எனலாம்.

'காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை' எனும்

பொருநராற்றுப்படைக்கு உரைகூறப்போந்த சோமசுந்தரனார் 'காடுறை கடவுளான காளி, கூளி போன்றன' என்றார். ஆனால் இன்று காட்டில் குடியிருக்கும் காளி மிகவும் அரியவள்.

கந்தபுராண ஆசிரியராகிய கச்சியப்ப சிவாச்சாரியார்,

'கொடிய வெஞ்சினக் காளி குவலய முழுதும்
முடிவு செய்வன் என்று எழுந்த நாள் முளரியோன் முதலோர்
அடைய அஞ்சலும் அவள் செருக்கு அழிவுற அழியாக்
கடவுள் ஆடலால் வென்றதோர் வடவனங் கண்டான்'
—உற்பத்திக்காண்டம்

எனக் காளியம்மனைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

வடமொழியில் 'காலீ' என்றும் 'காலிகா' என்றும் அழைக்கப்-பெறுகிறாள். காலீ எனும சொல் தென் மொழியில் 'காளி' எனத் திரிபு பட்டுள்ளது. இரண்டு முதல் பதினெட்டுக் கைகளுடன் ஆயுதங்கள் தாங்கி வாகனமின்றித் தனியே கோபசொரூபமாகவும் சிம்மவாகனத்-தின்மீது அமர்ந்து ஓர் அரக்கனை (மகிசாசுரன்) சூலாயுதத்தால் வதம் செய்தவாறும் இக்காளியின் சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன காளிக்கு உரிய வாகனம் சிம்மமும் உரிய ஆயுதம் சூலாயுதமும் ஆகும், சிலை இல்லாத பல ஊர்களில் பீடத்தின்மீது சூலாயுதம்

மட்டும் அமைத்தே இக்காளியை வழிபட்டு வருகின்றனர் இவ்வட்டாரத்தில் நான் இதுவரை களஆய்வில் ஈடுபட்ட கிராமங்கள் 66. இவற்றில் 46 கிராமங்களில் இவ்வம்மன் வழிபாடு 59 கோவில்களில் அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| காளியம்மன் | கோவில் | 35 |
| பத்தரகாளியம்மன் | " | 8 |
| மாரியம்மன் | கோவில் | 8 |
| முப்பிடாரி | " | 2 |
| உச்சமா காளி | " | 1 |
| செத்தகண் மாரி | " | 1 |
| வெயில்உகந்த அம்மன் | " | 1 |
| பகவதி அம்மன் | " | 1 |
| மாமுண்டியம்மன் | " | 1 |
| வேப்பேரி | " | 1 |
| | | 59 |

பத்தரகாளி, மாரியம்மன், மாமுண்டி போன்ற தெய்வங்கள் காளியம்மன் வரிசையில் வைக்கப் பெற்றதற்குக் காரணம் காளியம்மனோடு இவ்வம்மன்களுக்கு அமைந்த தொடர்பு நோக்கியே காளியம்மன் என்ற பெயரிலேயே ஒரே ஊரில் ஒன்றிற்கு மேற்பட்ட அம்மன்கள் எழுந்தருளியிருப்பதும் கண்கூடு. சான்றாக ஆலம்பட்டி கரிசல்பட்டி என்ற இரண்டு கிராமங்களையும் கூறலாம். இவ்விரண்டு கிராமங்களிலும் நான்கு நான்கு காளியம்மன்கள் உள்ளனர். எதிரும் புதிருமாக அமைந்த இரண்டு கிராமங்களையும் பிரிப்பது இடையே இருக்கும் கண்மாயொன்றுதான். சாம்பன், குடும்பன், நாயக்கர், கவுண்டர் என்ற நான்கு இனத்தார் தனித்தனியே பீடம் அமைத்து ஆலம்பட்டியில் இவ்வம்மனை வணங்கி வருகின்றனர். கரிசல்பட்டியில் இரண்டு கோவில்கள் ஊர்ப்பொதுவாகவும் ஒன்று பகடை என்ற அரிசனத்தாருக்கும், மற்றொன்று சாம்பன் என்பாருக்குமாக அமைந்துள்ளன.

ஒரே கிராமத்தில் காளியம்மன், பத்தரகாளியம்மன், முப்பிடாரி எனத் தனித்தனித் தெய்வங்கள் அமைந்து தனித்தனி இனப் பூசாரிகளைக் கொண்டு வழிபாடு நிகழ்வதுண்டு. சான்றாகக் கிழவனேரி என்ற கிராமத்தில் காளிக்கு வேளாரும், பத்தரகாளி, முப்பிடாரி

ஆகியவற்றுக்குப் பண்டாரமும் பூசாரிகளாக உள்ளனர். கூடக்கோவில், சாத்தன்குடி, செட்டிகுளம், சிவரக்கோட்டை, மறவன்குளம், மேலக்-கோட்டை ஆகிய கிராமங்களில் காளியம்மனுக்கும் மாரியம்மனுக்கும் தனித்தனி கோவில்களும் தனித்தனிப் பூசாரிகளும் உள்ளனர். தனித் தனி இனத்தாரையும் பூசாரியையும் கொண்டு வணங்கப் பெறுவதால் காளி, மாரி, பத்தரகாளி, முப்பிடாரி, பகவதி எனப்பெயர்கள் தாங்கிய இவ்வம்மன் ஒருவரா பலரா என ஐயுற இடம் எழுகின்றது. எனவே ஆய்ந்து முடிவு காண்பது அவசியம்.

ஆய்வனுகல் : -

1. இவ்வம்மன்களுக்கு அமைந்த சிலைகளைக் கூர்ந்து நோக்கி ஒப்பிட்டு வேறுபடுத்தலாம். ஆனல் பெரும்பாலும் சிலைகளே இல்லாமல் பீடத்தின்மீது சூலாயுதம் அமைந்து பெயரளவில் வேறுபட்டு நிற்கின்றன. அப்படியே சிலையே காணப்பட்டாலும் உயர அகலங்கள் வேறுபடுகின்றனவே தவிர உருவங்கள் வேறுபடவில்லை.

2. இக்கோவில்கள் பெரும்பாலும் வடக்குநோக்கியும் சிலகிராமங்-களில் கிழக்குப் பார்த்தும் அமைந்துள்ளன; மேற்கு, தெற்கு ஆகிய திக்குகளை நோக்கி இருப்பது இவ் வட்டாரத்தில் இல்லை.

வடக்குப் பார்த்து இருப்பதற்கான காரணங்கள்:-

அ காளி என்றதுமே பலருக்கும் கல்கத்தா காளிதான் நினைவுக்கு வரும். கல்கத்தா என்பதே காளிக் கட்டம் என்பதன் மருஉ.

ஆ. தட்சிணேசுவரத்தில் அருள்மிகு. இராமகிருட்டிணருக்கு அருளிய காளி, கோவிலில் குடி கொண்டிருக்கிருள்.

இ. *காளிகாதேவியின் நர்த்தனக் கோலம் வங்காளத்திற்கே உரியது. நவராத்திரியின்போது வங்காளிகள் மிகப் பெரிய காளி உருவை வழிபட்டுப் பின்னர் ஆற்றிலோ குளத்திலோ விடுவது வழக்கம். இதற்குக் 'கௌரி குளித்தல்' எனப் பெயர். வங்காளிகள் தயா-

* துர்க்கா பரமேஸ்வரி பக்- 77, நசன் என்ற நடராசன் பிரதிபா பிரசுரம், சென்னை-600004

ரிக்கும் காளி உருவம் தலைவிரி கோலமாகச் சிவந்த நாக்கு வெளியே தொங்க அசுரனைச் சூலாயுதம் கொண்டு வதைத்தவாறு பயங்கர வடிவம் கொண்டதாக இருக்கும்.

ஈ. உஜ்ஜெயினியிலுள்ள காளிகோவில் மிகவும் பிரசித்திபெற்றது.

உ. இராணா பிரதாப்சிம்மன் காளிக்குக் காணிக்கையாக அளித்த போர்வாள் குஜராத்தில் பார்கத் என்ற இடத்தில் அமைந்த பத்ரகாளிக்கு உரியது.

ஊ. ஆந்திரதேசத்தில் வாரங்கல்லில் பிரபலமடைந்த காளிகோவில் உள்ளது.

எ. மாயவரம் அருகில் உள்ள திருமலைராயன் பட்டினத்தில் 'ஆயிரம் கண் காளியம்மன்' கோவில் கொண்டிருக்கிறாள்.

ஏ. திருச்சி, திருவாச்சூர் கிராமத்தில் மதுரகாளியம்மனும் சமயபுரத்தில் மாரியம்மனும் சக்தி வாய்ந்த தெய்வங்களாக வழிபடப் பெறுகின்றனர்.

ஐ. தில்லையிலும் திருவாலங்காட்டிலும் காளிக்குத் தனியாக அமைந்த கோவில்கள் உண்டு.

ஒ. திருமங்கலம் வட்டாரத்திற்கு வடகிழக்கே அமைந்துள்ள தஞ்சை மாவட்டத்து உடையாளூர், மாடக்குடி என்ற ஊர்களில் செல்வ மகாகாளியம்மன் எழுந்தருளியுள்ளாள். கிழக்கே அமைந்துள்ள காளையார்கோவில் மருதவனத்தில் காளிகாதேவி கோவில் கொண்டுள்ளாள்.

... ... ... எனவே திருமங்கலம் வட்டாரத்திற்கு வடக்கேயும் ஓரிரு இடங்களில் கிழக்கேயும் இவ்வம்மன் சிறப்பாக வழிபடப்பெறுவதால் அதைக்கண்ட கிராமத்து மக்கள் வடக்குப் பார்த்து இக் கோவிலை அமைத்தனரோ என அனுமானிக்க இடம் எழுகிறது. வடக்கே வழிபடப்பெறாத பல தெய்வங்கள் வடக்குப் பார்த்த கோவிலைக் கொண்டிருக்கின்றனவே என்ற ஐயவினா எழாமல் இல்லை. பெரிய கோவில்களைப் பார்த்த பெரியவர்கள் 'போலச் செய்தல்' என்ற அமைப்பில் எழுப்பிட இருக்கலாம் என்பதுதான் ஐயமறுத்தலாகிறது.

3) காளியம்மன், பத்தரகாளியம்மன், மாரியம்மன், முப்பிடாரி உச்சமாகாளி, செத்தகண்மாரி, வெயிலுகந்தஅம்மன், பகவதி,

மாமுண்டி, வேப்பேரி என்று அமைந்த 59 கோவில்களில் 50 கோவில்களுக்கு வேப்பமரம் உண்டு. எனவே வேப்பமரத்திற்கும் இவ்வம்மனுக்கும் தொடர்பு உண்டு. வேப்பமரம் தளிர்த்துப் பூத்துக் காய்ப்பது பங்குனி, சித்திரை, வைகாசி என்ற கோடை காலத்து மாதங்களில். வெப்பத்தைத் தணிப்பதிலும், வெப்பு நோய்கள் வராமல் காப்பதிலும் இவ்வேம்பு மரத்திற்குப் பங்கு உண்டு. அறிவு அடிப்படையில் ஊன்றப் பெற்ற வேப்பங்கன்றுகள் பக்தி அடிப்படையில் கிளை விட்டுத் தளிர்த்து நிற்கின்றன. அம்மன் விழாவின்போது வேப்பங்குலைகள் வீடுகளில் காப்புக் கட்டப் பயன்படுகின்றன. கோவிலைச் சுற்றியும் கிராமத்து வீதிகளிலும் கொடித்தடைக் கயிறுகளில் தோரணமாக முடிந்து கட்டப்படுகிறது தீச்சட்டி எடுத்து ஆடிவரும் பக்தர்களின் கைகளில் வெப்பக்காப்பாக வேப்பங்குலை பயன்படுகிறது

4. காளி தொடர்புடைய அம்மன் கோவில்கள் பெரும்பாலும் வணங்கப்பெறுவது பங்குனி அல்லது வைகாசி என்ற கோடை மாதங்களில்தான். ஆடியில் மருதங்குடியிலும், புரட்டாசி மாதத்தில் செட்டிகுளம், பெரிய உலகாணி, கண்டுகுளம், கூடக்கோவில், கப்பலூர் என்ற ஐந்து கிராமங்களிலும், ஐப்பசியில் கிழவநேரியிலும், கார்த்திகையில் ஆலம்பட்டியிலும், கோடைகாலத்துத் தொடக்கமான மாசியில் கண்டுகுளம் நாயக்கர்களும் வணங்குகின்றனர். புரட்டாசி, ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பயிர்பச்சைகளைப் பச்சாலை நோயில் இருந்து காப்பதற்காகவும் சிலகாலங்களில் பருவமழை பொய்ப்பதால் குழந்தைகளை அம்மை போன்ற வெப்பு நோய்களில் இருந்து பாதுகாப்பதற்காகவும் இம்மழை மாதங்களில் வழிபடுகின்றனராம். வெப்பு நோய்களில் இருந்து பாதுகாப்பதற்காகவே அரசபட்டியில் வெயில் உகந்த அம்மனைக் காளியம்மன் காட்சி தருகிறாள்.

5) இவ்வம்மன் கோவில்களில் சிலை இருந்தாலும் இல்லை என்றாலும் சூலாயுதம் அமைந்திருப்பது ஒரு ஒற்றுமையை மேலும் உறுதிப் படுத்தும். இவ்விடத்தில்,

"யாதுமாகி நின்ருய்—காளி! எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம்—காளி! தெய்வலீலை யன்ருே
பூதமைந்தும் ஆனுய்—காளி! பொறிகளைந்து மானுய்
போதமாகி நின்ருய்—காளி! பொறியை விஞ்சிநின்ருய்"

என்றருளிய பராசக்திப் பக்தனுகிய பாரதியை நினைந்து நெஞ்சுருகுகிருேம்.

எனவே,

காலங்களைக் கடந்த காளியும்
கோபசொருபமுள்ள *பத்தரகாளியும்
மாயவன் தங்கை என நம்பப்பெறும் மாரியம்மனும்
முப்புர நாயகியான முப்பிடாரியும்
சண்டமுண்டர்களைக் கொன்ற சாமுண்டியும்
பகைவர்களை வதைத்த பகவதியும்
வேப்பிலை நாயகியான வேப்பேரியும்
உச்சிவேலையில் பூசைபெறும் உச்சமாகாளியும்
வெப்பம் தணிக்க வந்த வெயிலுகந்த அம்மனும்—

ஒருவரே என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

(தொடரும்)

---

பத்ர என்ற வடசொல்லுக்கு மங்களம் என்பது பொருள். தீமையை அழிக்க இவள் கோபம் கொள்வதால் நன்மையை நாடுபவர்களுக்கு மங்களம் உண்டாகிறது.

# முல்லை இயல் அல்லது ஆயர் இயல்

புலவர் வி. அ. அரங்கசாமி
பேராசிரியர் திருவையாறு.

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பினுள் பாண்டியர் நாட்டு மண்ணை கடலலையூர்ந்து மேற்சென்று வெளவியது. வெளவியதற்கு மனந்தளராது மேற்சென்று பகைவர் நாட்டினைக் கடல் கொண்ட அளவிற்கு ஈடாகத்தான் கொண்டு அவ்விடங்களின் புலிவிற் பொறித்த அடையாளங்களைப் போக்கித் தள்ளுட்டு கயற் பொறியைப் பொறித்து நீறீஇய வாடாச்சீரினையும் பாடும் புகழினையும் தலைமையினையுமுடைய பாண்டியர் குடியொடு ஒக்கத்தோன்றியது ஆயர்குடியாகும். பாண்டியர்குடி பழைமை வாய்ந்தது என்பது வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி பண்பிற்றலைப் பிரிதலின்று எனும் வள்ளுவர் வாய்மொழிக்குத் தெள்ளு பரிமேலழகர் "பழங்குடியாவது சேர சோழ பாண்டியர் என்றாற்போல, தொன்றுதொட்டு வருங்குடியென"த் தோற்றங்கூறியமையால் ஆற்றவும் அறியப்படும். பதியெழுவறியாப் பழங்குடி என்பதனால் பழங்குடியின் பாங்கு தெளிவுறும். இன்னும் அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தி வடிவேலெறிந்த வான்பகை பொருது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து குமரிக்கோடுங் கொடுங் கடல்கொள்ள, வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசையாண்ட தென்னவன் என்பதனாலும் பாண்டியர் சிறப்பு அறியப்படும். அரசுபடக் கடந்தாற்றிற்றந்த முரசு கெழுமுது குடியாகிய தம் தொல்குடிக் குரித்தாகிய கத்தும் கடல் தரூஉம் முத்தமொடு, ஒருங்குடன் கூடி தீதின்றிப் பொலிகவெனத் தெய்வக் கடியயரும் அழியாத குடிப்பின தோன்றியது ஆயர்குடியாகும். நெல்லும் நீரும் எல்லோர்க்கும் எளியவென வரைய சாந்தமும் திரைய முத்தமும் இமிழ் குரல் முரசும் மூன்றுடனுளும் தமிழ் கெழு கூடல் தண்கோல்வேந்து என்பதனுல் பாண்டியர்க்குரிய திரையமுத்தமும் வரையசாந்தமும் என்பதறியப்படும். இவற்ருல் ஆயர் குடியின் பழைமையும் சிறப்பும் அறியப்படும்.

ஆயரியல்:- இமிழ் என்னும் ஒலியுண்டாக பால்பற்றறச் சுரண்டு தலைச்செய்த கறவைக் கலங்கள் வைத்த உறியினர்; கறத்தற்குரிய ஆக்களைக் கறத்தற்கு இரண்டு தலையும் சீவி மாலையாகக் கட்டிக்

கழுத்திலிருக்கும் கழுவோடு சூட்டுக்கோல்களையும் இட்டுச் சுருங்கிய தோற்பையையுடையர். கொன்றைத் தீங்குழல் ஓசையர், வழுச்சொல்லினர் பசுக்களோடு மழையாலே நனைந்த நிலத்திடத்தர்; ஆகாத்தோம்பி ஆப் பயனளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை எனப்போற்றப்படுவர். ஆக்களைக்காத்தலாவது வெருவும்பிணியுமுற்றுழிக் காத்தலாம்; ஓம்புதலாவது புலத்தலைப்புல்லார்த்தி அலைத்தலை நீருட்டலாம். கன்றருத்தி மிக்கதனை யாவருக்குமளித்தல் ஆப்பயனளித்தலாம்; இவையே கொடும்பாடிலாவாழ்வாம். இன்ன இயல்பெற்ற ஆயர் எனவும் இடையர் எனவும் பொதுவர் எனவும் படுவர். இவரே ஆட்டினத்தார், எருமையினத்தார் எனவும் பிரிக்கப்படுவர். இவரே கோவினத்தார், புல்லினத்தார் எனவும் சொல்லப்படுவர். ஆவினமுடையாரைக் கோவினத்தார் என்றும் ஆட்டினமுடையாரைப் புல்லினத்தாரென்றும் போற்றுவர்.

ஏறுகள்:-

முல்லைநிலத்து வாழும் ஆயர், தம்முடைய நிலத்து வழக்காற்றிற்கும் மரபுக்குமேற்ப, ஏறுகளை, ஏற்றம்பெற ஆற்றலுற விறுடனே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருவர். அவ்வேறுகளைத் தழுவுவோர்க்கு தம் மகளைக் கொடையாக நேர்வர். ஏறுகள் காட்சிக்கினிமையும் கருத்துக்கு விருந்தும், தோற்றமும், பார்ப்பார்க்குப் பயமும், ஏற்பார்க்கு ஏற்றமும் தருஉம் இயல்பின. அவ்வேறுகளை ஆயர் தொழுவில் புகுத்தும் காட்சி மாட்சி தருவதாகத் தோன்றும்.

மலைவீழருவிபோல் வெண்காற்காரிஏறு, அந்திவான் விசும்புபோல் புள்ளி வெள்ளேறு, குழவித்திங்கள்போல கோடணி செய்ஏறு முரணும் முன்புமுடைய பலவாய ஏறுகள் புகும் தொழு அரிமாவும், பரிமாவும், களிறும் கராமும் பெருமலையின் முழையிடத்தே ஒருங்கு கூடியது போலக காட்சியளிக்கும்.

யானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளை ஏறு, திருமறு மார்பன்போற் றிறல்சான்றகாரிஏறு, முக்கண்ணன் உருவேபோல் முரண்மிகு குராலேறு, வேல்வல்லான் நிறனேபோல் வெருவருஉம் சேவேறு, ஒப்பிலாப் பிற ஏறுகள் பலவும் மேகக்கூட்டம் போல் முழங்க ஆயர் அவற்றைத் தொழுவிலே விட்டனர்.

நேமியான் வாய்வைத்த வளைப்போல் நெற்றிச்சுட்டியுடைய காரிஏறு, நம்பிமுத்தபிரான் திருமார்பில் விளங்கும் சிவந்தமாலை

போலச் சிவந்த மறு வினையுடைய வெள்ளை ஏறு, கணிச்சிப்படையுடைய சிவன் மணி மிடற்றணிபோல கரிய கழுத்தினையும் குட்டேற்றினையுமுடைய குரால்ஏறு, வச்சிரப்படையுடைய, இந்திரன் கண் போல பல புள்ளிகளையுடைய ஏறு, முருகன் அணிந்த வெள்ளிய உடைபோல வெள்ளியகால்களையுடைய சிவந்த ஏறு, பிற ஏறுகள் பலவும் கூற்றுவர் உயிருண்ண ஊழி முடிவில் சேரச் சுழன்று திரியுமாறுபோல தொழுவிடத்தே சேரப் புகுதலிட்டனர்.

ஆயர்,ஏறுகளை அவற்றிற்கமைந்த நிறங்களைக் கொண்டே காரி, வெள்ளை, சேய், குரால் எனப் பெயரிட்டழைத்தனர். இக்காலத்தும் அவ்வழக்குண்மை தெளியப்படும். ஏறுகள் பெற்ற நிறங்களும, அவற்றிடையே உற்ற புள்ளிகளும் கொண்ட திறப்பாடு ஓர்நதே மால், சிவன், முருகன், பலராமன், ஆய கடவுளர்களையும், இந்திரன், கூற்றுவன், சந்திரன் போன்ற தேவர்களையும், மலைவீழருவி, அந்திவான் விசும்பு போன்ற இயற்கைக் காட்சிகளையும் ஒப்புமையிட்டுரைத்த பான்மையால் அக்காலச் சமுதாய நிலை அறியப்படும்.

**ஆயர் ஆய்ச்சியர் :-**

தளிபெறு தண்புலத்து அரும்பீன்று தழைத்தபிடாவும், கள்ளுண்டு களித்தான் போன்ற அசைவினையுடைய தீக்கடையிற் பிறந்த நெருப்பு நிரைத்தாற் போன்ற இதழ்களையுடைய செங்காந்தளும், நீலமணிபோல் நிறனுடைய காயாவும் பிறவும் அணிகொளச் சூடும் கண்ணியர் ஆயர். கொடியிற்றோன்றியதளவும், தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும் பிறவும் பூத்த மலர்கள் நெருங்க தழை, கோதை, இழை இவற்றைக் கட்டி மகிழ்ந்து திளைத்துவிளையாடும் ஆயர்மகளிர், கலலிடத்தும் காட்டிடத்துமுள்ள புல்லிலைவெட்சி முல்லை, குருந்துகோடல், மராம் பூவாலும செய்த கண்ணியைச் சூடி பொதுவர் ஏறுகோடலைக் காணும பொருட்டு முலலை நிரைத் தன்னபல்லர் மடஞ்சேர்ந்த சொல்லர் ஆய்நல்லார பரணிடத்தே போந்தனர்.

**ஏறுடர்க்கு முறையும் மாறுகொளும் ஏற்றியலும் :-**

ஆயர் தொழுவில் புகுங்கால் நீர்த்துறையிலும் ஆலமரத்திலும் மாமரத்திலும் உறையும் தெய்வங்களைப் பரவிப் பின் தொழுவிலே புகுவர். புகுந்தோருள் ஒருசார் செந்நிறஏற்றின் நோக்கிற்கு அஞ்சா

னுய்ப் பாய்ந்த பொதுவனைச் சாவக்குத்திக் கோட்டிடைக் கொண்டு குலைக்கும் தோற்றம், பாஞ்சாலியின் கூந்தலிற் கைந்நீட்டிய துச்சாதனனை நெஞ்சைப் பிளந்து, பகை நடுவண் வஞ்சினம் முடித்த வீமசேனனைப் போன்றது.

மற்ருெருசார் கரிநெற்றிக்காரி மீது பாய்ந்த பொதுவனைச் சாடிக் குடர் சரியக் குத்திக் குலைக்கும் தோற்றம உருத்திரன் கூற்றுவன் நெஞ்சத்தைப் பிளந்து அவன் குடரினைக் கூளிக்கிடுஞ் செயலை ஒத்தது.

ஒருசார் நுண்பொறி வெள்ளை ஏற்றின் கதத்திற்கு அஞ்சா-னுய் அதன் செவி மறைவாகப் பாய்ந்த பொதுவனைச் சாடி நுதிதுனைக் கோட்டால் குலைக்கும் தோற்றம், இரவில் இருளென்று பாராது வந்து தன் தந்தை துரோணுசாரியனைக் கொன்ருனைக் கொன்று தன்தோளால் தலையைத் திருகும் அசுவத்தாமனைப் போன்றது.

பொதுவருள் பலர் ஆர்த்து ஏறுகளின் எதிர் எதிர் சென்ருர். ஏறுகளும் சினம்மிக்கு உருத்தெழுந்து பாய்ந்தார் மேல் ஓடின. எழுந்தது துகள்; ஏற்றனர் மார்பு. கவிழ்ந்தன மருப்பு; கலங்கினர் பலர். பொதுவரும் ஏறுதழுவும் விருப்பினுல் பாய்ந்து தம்தோள்களால் ஏற்றின்கழுத்தை இறுகத் தழுவி இமிலிடைத் தோன்றி வருந்தினர். ஏறுடை நல்லார் ஏறெவ்வம் காணுது எழுந்தார். மகிழ்வதன்றி மிகையாதல் என்ன பயனுடைத்தாம். வேட்கை மீதூர்தலால் தொழுவினுள் பொதுவர் புரிபு புரிபு புக்கனர். ஏறுகளும் மாறுற்று தெரிபு தெரிய குத்தின. இறைவன் சூடிய பிறைக்கண் கிடந்த மாலைபோலக் குருதிக் கோட்டொடு குடர்வலந்தன. கோட்டொடு சுற்றிக் குடர் வலந்த ஏற்றின் முன்னே நின்று ஆடி அக் குடரை வாங்குவான் செயல் பீடுடைத்து. கோவினத்தாயர் மகனெருவன் ஏற்றின் எருத்-தத்தில் தத்தித்தார் போற் றழுவது காட்சிக்குரியதாம். ஏற்றின் மேல் இருந்து ஆடிபின், நீர்த்துறையிடத்து தெப்பத்திற் கிடந்து ஊர்வான் போற்ருேன்றும் கோவினத்தாயரின் கோடற் கொள்கை ஊறுபாடில்லா ஆறுபெற்றது காற்றுப் போல் மேல்வந்த கதழ்விடைக் காரியைக் களத்திடததே அடங்கக் கொண்டு அட்டு அதன் மேற்ருேன்றிய பொதுவனின் கோடற்போக்கு ஆடற்குரியது. வெள்ளேற்றின் மேற் கிடக்கும் பொதுவன் திங்களிடத்துள்ள மறுப்போற்ருேன்றும். வேகத்தொடு உருத்து மேல்வந்த சிவந்த ஏற்றின் செவியடியில் கொம்புகளைப் பிடித்துத் தழுவும் பொதுவன் செயல் கஞ்சன் வர

விடுத்த குதிரை வாயைப் பிளந்து கையால் அடித்த கண்ணன் செயலை ஒக்கும்.

மற்றொரு சார், புகைவலம்வர நிறுத்தப்பட்ட ஏறுகள் பறை-யொலியாலும், பலர் ஆர்ப்பொலியாலும் ஆயர் கோடற்றொழிற்கு எதிர்ந்தன. வெள்ளேற்றின் கரிய கூரிய கோட்டிற்கும் அஞ்சாளுய் அதன் கழுத்தில் பாய்ந்த பொதுவனைப் பொருது சென்று குத்தும் கரிய ஏற்றின் தோற்றம்; பான்மதி சேர்ந்த பாம்பினை கோள்விடுக்கும் நீனிறவண்ணனைப் போன்று காட்சியளிக்கும். குடர்சோரக் குத்தித் தன் கோடழியக் கொண்ட பொதுவனை ஆட்டித் திரிந்து அலைக்கும் கோபத்தினையுடைய எழிலேறு வெருவருதற்குக் காரணமான புகை-யைத் தோற்றுவிக்க வெகுண்டு திரியும் கொல்களிற்றை ஒக்கும்.

தோள்வலியால் ஏறுதழுவலை எக்காலமும் மனத்தகத்தே கொண்டு அம்முயற்சியாலே மற்றுள்ளார் தழுவு மாற்றைக் கடந்து சென்ற பொதுவன் கோன் வழுக்கி ஏற்றின் முன் வீழ்ந்து விட்டான். அவ்வாறு வீழ்ந்தவன் மேற் செல்லாது மீளும் ஏறு, அமருள் வாளொடு அகப்பட்டவனை பொருதற்கு ஒவ்வான் என்று அவனை வெட்டாமல் மீளும் மறவனை ஒக்கும்: இச் செயல் ஒருகையுடையது எறிவலோ யானும் இருகை சுமந்து வாழ்வேன் எனவும் அழிகுநர் புறக்கொடை அயில்வாளோச்சாக் கழிதறுகண்மை எனவும் பேராண்மை என்பது தறுகண் ஒன்றுற்றக்கால் ஊராண்மை மற்ற தன் எஃகு எனவும் வரும் கருத்துக்களை நினைவுறுத்தலோடு மறத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்டா நிற்கும்.

கொம்பு மார்பிற்படுதலை மார்புகொடுத்து ஏற்றுக்கொள்பவ ரோடு பாய்ந்து ஏறுபவரோடும், கோட்டிடையில் நுழைவாரோடும், ஏறுகொள்ளவல்லேன் என்று சாற்றுவாரோடும் ஏறுகள் பொருது எதிரே நிற்க, அதனைக் கண்டு பொருமல் மறுக்குமவரை விளக்கி மைந்தர் தழுவலின் எலும்பு முறிந்து தசைகளற்றுப் பரந்து கிடக்கும். இடியொலிமோடுமாறுகொளும் ஏற்றொலியோடு இயங்கள் பல ஒலிக்க விளங்கும். அத்தொழுவம் நூற்றுவர் மடங்க வரிபுனைவல்வில் ஐவர் அட்ட பொருகளம் போலும்.

கார்காலத்தில் இடியொலி போல இயம் பல இயம்ப, மேகம்-போலப் புகையெழ, மாலையணிமகளிர் அணியணியாக நிற்ப சினப் பொதுவர் கண்கள் மறையுமாறு துகள் விசும்பில் பரவ ஆர்த்துத்

தொழுவினுள் பொதுவர் பாய்ந்தார். பாய்ந்து கெசம்பினைப்பிடித்தும் மார்புறத் தழுவியும் கழுத்திடையடக்கியும், இமிலிறப்புல்லியும், கழுத்தினைக்கட்டியும், மேல்வந்த ஆயரைக் கீழ் விழ்த்தியும், கொம்பாற் குத்தியும், கழுத்தைத் தழுவ விடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின. மீண்டும் தழுவுவாரைக் கோட்டாற் குத்தித் தழுவப் பெறுமல் நின்ற ஏறு உயிருண்ணும் கூற்றை ஒக்கும். கரிய ஏற்றினுடைய கொம்பு கண்படுதலை மார்பிலே ஏற்றவர்களைக் கொம்புகளாலே படும்படிக் குத்தியதால் ஒழுகும் குருதியில் நனைந்த மணிகள் நிறவம் பூவினைச் சூழ்ந்து திரியும் தும்பியை ஒக்கும். இடையே பாய்ந்து கழுத்தைத் தழுவிய பொதுவனேடு பரணின்மேல் தாவிப் பாயும் வெள்ளேறு வானத்தில் பாம்பால் கொள்ளப்பட்ட மதியமும் போலும்.

இவ்வாறு ஏறுகளும் ஆயரும் மாறுபாடுதலால் தொழுவம் இருபெருவேந்தர் இகலிக் கண்ணுற்ற பொருகளத்தை ஒக்கும்.

ஏறுகள் கால்களால் வெட்டி நீற்றினை (புழுதி) எழுப்பும், மழை பெய்தமையால் கோட்டால் மண் கொள்ளும், இத்தகைய ஏறுகள் மாறுபாடுற்று முழங்கியும் பாய்ந்தும் செல்லும் காட்சி போர்க்களம் புகும் வீரரை ஒத்தன. ஒன்றேடொன்று தாக்கி கோட்டால் குத்தக் குருதி கொட்டும் ஏறுகள் நாட்காலை பெய்யும் மேகத்தை ஒத்தன. ஏறுகளின் மாறுபாடு போக்க இடையில் ஏறுகளை நிறுத்தி ஆவினத்தோடு மேய்புலத்தேற்றும் இடையர், நிலத்தை மறைத்துக் கிடந்த கடலைப் போக்கும் நான்முகனை ஒத்தனர். ஏறுகள் ஓடும்படி மிதித்து ஓடாது நின்றவர்களை எதிர் சென்று கோட்டாற் குத்தி உழலை கோத்த மரத்தைப் போல துளைத்தன. அவ்வாறு துளைத்ததனால் உண்டாய புண்களினின்றும் பொழியும் குருதி வழுககுதலின் மணலை அள்ளி கையாற்பிசைத்து உடம்பைத் திமிரி தாழ்க்காது கடலினுட்பரதவர் தெப்பத்தை ஏறினாற் போல ஏற்றைத் தழுவினர். ஏறுகள் கோட்டாற்றேண்டிய குடர்களை பருந்துகள் எடுத்துக்கொண்டு உயரப் பறந்து போங்கால் வாயினின்றும் வழுவி ஆலமரத்திலும் கடப்ப மரத்திலும், உறையும் தெய்வங்கட்கு இட்டமாலைபோல கொம்புகடோறும் தொங்காநிற்கும்.

குரவைக்கூத்து:- ஆய மகளிர் குரவைக் கூத்து ஆடி மகிழுங்கால், தம் மியல் தரும் தலைமையராவார். கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள் எனவும் ஆயர்மகன்தோள் அஞ்சாநெஞ்சராய் கொலையேறு கொள்பவர்க்கே செறிதற்குரிய, அறநெஞ்சிலார்க்குச் செறிதற்கரிய எனவும் கருதும் சீர்த்த இயல்பினர். உயிரானது

காற்றென உணராது காவல்கொண்டு ஏற்றின்மருப்பினை அஞ்சும் நெஞ்சினர் தோய்தற்கு ஆயர்மகள் தோள் எளியவாயிருக்குமோ எனவும், எற்றின் கோட்டிடை தாம வீழ்வார் மார்பின் முலையிடை விழுமாறு போல வீழின் ஆயர் தம்மகளிர்க்கு முலைவிலை வேண்டார் எனவும் குரவைக் கூத்துள் கூடியாடும் பெற்றியர்.

தொழுவினுள்கொண்ட ஏறுகளெல்லாம் மேயபுலம் போக ஆயரும் ஆய்ச்சியரும் ஊரிடத்தே கூடி குரவையாடுவர். ஆடும்போது கொலையேற்றுககோடு குறிசெய்த பொதுவன் மார்பினைப்பாடுவம். *நெற்றிச்சிவலை எறடர்த்தான் நீண்மார்பில் சாராதமைகல்லேன்* என்பாள் ஆயர் எடுக்கும் அவர் மொழிக்கும் வருந்தேன் எனவும் கூறும் பெற்றியள் காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே. அலரெடுத்த ஊராரை உச்சி மிதித்து ஆர்வுற்று ஆயர்கொடை நேர்வர். ஏற்றைத் தழுவின பொதுவன் முகத்தை நோக்கி ஆயர்மகள்கண் இமைத்தலை இலவாயிருந்தன.ஆயர்மகளிற் கூந்தலில் வெண்ணெயின் நாற்றம் நீங்கி முல்லைப்பூவின் நாற்றம் மேவிய-தற்கு சுற்றத்தார் கொல்லேறு போலும் கோபம் கொள்வர். செங்காரிக் கோட்டிடைப்புக்க பொதுவனிடத்து புகும் நெஞ்சினை-யுடையர். கோட்டினத்தாயர் மகனொடு கூடியதற்குச் சுற்றம் பொறுக்கும். ஆயின் பொருத அயலார் கண்பொடிவது எவனோ? அயலார் அலர் செய்யும் பான்மை என்னோ! கொலை ஏறு சாடிய-புண்ணை முலை வேதினொற்றி முயங்கிப் பொதியும் இயல்பினர். ஆய்ச்சியர் தயிர் கடையத் தம்மேற் கொண்ட புள்ளிகளின் மேல் கொல்வெறு கொண்டான் குருதி மயக்குறத் தழுவிக் கோடல் தோளிற் குற்றதோர் தனி அழகாம். ஏறு தழுவற்கு அஞ்சலும் ஆய்ச்சியர்தோள் காமுறுதலும், இரண்டும் ஒருங்குச் சேறலில.

ஏற்றைத் தழுவினன் சென்னியில் அணிந்த முல்லைக்கண்ணியை கோட்டாற் கொண்டலைத்த புகரேறு துள்ளியதால் அக்கண்ணி ஆயர் கூந்தனுள் வீழ்ந்தது. கொடுத்தபொருள் பெற்றாற் போல ஆப்பூவை முடித்ததை யாய்கேட்டனள் என்பவோ. ஏதிலான் கைபுனைகண்ணியை முடித்தாளென யாய் கேட்பின் செய்யும் பரிகாரம் இல்லை. அவன் ஆயர்மகனாயின் இவள் ஆயர்மகளாயின், அவன் இவளை விரும்பியிருப்பனாயின், இவள் அவனை விரும்பியிருப்பனாயின் இவளை கோவத்தக்கதொரு காரியம் இல்லை. ஆயர்மகனையும் காதலள், கைம்மிக, தாய்க்கும் அஞ்சுவளாயின் இவளுற்ற நோய்க்கு மருந்-தில்லையே. மாசற்ற இவர் கூழையுள் அவன் கண்ணியைத் தந்த-

தென்று பிறர் சொல்லக்கேட்டு தெய்வமாகிய மால் இவளுக்கு அவனைக் காட்டிற்று என மகிழ்ந்து தந்தையொடு தமையன்மார் எல்லோரும் கூடியிருந்து பொதுவற்குக் கொடுத்தலை தேர்ந்தார்.

மேற்கூறியவாற்றல் முல்லைநிலத்து ஆயர் குடியின் பழைமையும் சிறப்பும், ஆயரின் இயல்பும், ஆயமகளிர் ஏறு தழுவலைக் காண்டற்குப் பணிடத்து நிற்கும் பான்மையும், ஏறுகளின் தோற்றமும் ஆற்றலும், ஏற்றமும், ஆயர் ஏறடர்க்கும் முறையும், ஏறுகள் மாறு கொண்டு ஊறுபாடு செய்யும் உரனும், விறுபெறு சினத்தின் விளைவுகளின் புனைவுகளும் ஏறுகளை மேய்புலத்தே போக்குமாறும்; ஆயரும் ஆய்ச்சியரும் கைகோத்தாடும் குரவைக் கூத்தும், கூத்துன்பாடும் பாடலின் பொருட்செறிவும், ஆயர் தம் மகளைக் கொடை நேர்ந்த முறையும் அறியப்பட்டன.

இனி அகப்பொருட்பாடல்களுள் நற்றிணை நானூறு, அகநானூறு ஐங்குறுநூறு ஆய தொகை நூல்களிலமைந்த முல்லைத்திணைப்பாடல், களுக்கும், முல்லைக் கலிப்பாடல்களுக்கும் இயைந்த கருத்துக்களைக் காண்பாம் நற்றிணை நவிலும் முல்லைப்பாடல், பருவம் பகர்தலும், வாடையினியல் வகுத்தலும், வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகற் குரைத்தலும், தலைவி உறையும் ஊரினியலும், ஊரிருக்கும் காட்டியல் கட்டுரைக்குங்கால் நாட்டுவளம் நாட்டுதலும், கார்காலத் தொடக்கங் காட்டலும் கார்செய்யும் கவின்பெறு காட்சியை மாட்சிபெற ஆட்சியுறச் செய்தலும், காட்டில் வாழும் கருப்பொருள்கள் (ஆறறிவில்லாதன) காதற்குறிப்பை ஏதமிலாது எடுத்துக்காட்டிக் கூடிவாழின் கோடி நன்மை எனும் குறிப்பைத் தோற்றுவித்தலும், பிரிந்தவர் கூடி வாதம் பேசும் செய்திகளாக அமைதலும் ஆய கருத்துக்களை அறிவிக்கும்.

அகநானூற்றின்கண் அமைந்த முல்லைப்பாடல்கள் மிகுதியும் வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லும் வகையால் கார்ப்பருவவியலும், கவின்பெறு கானத்தியல்பும், தலைவி ஆற்றியிருக்கும் தன்மையும், தோழி பருவங்கண்டு வற்புறுத்தும் பான்மையும், காலமல்லாக் காலத்திற்றோன்றிய கார் காலமெனக் கழறலும், அதனல் தலைவனின் வாய்மையை வகுத்து நிற்றலும், இயற்கையின் நிகழ்ச்சியைப் பழித்தலுமாகிய பல கருத்துக்களைக் அறிவிக்கும். இவற்றிற்கெல்லாம் மேலாக தலைவனின் காதற்குறிப்பினை முல்லைநிலத்துக் கருப்பொருள்களாகிய பறவை, விலங்கு, செடி,

கோடிகளைக் கொண்டு அன்பு நெறியை இன்புற எடுத்துரைப்பதும் அறிவிக்கும்.

ஐங்குறுநூற்றின் முல்லைப்பாடல்கள் செவிலிகூற்று, தலைவன் பருவங்கண்டு பாராட்டல், விரவுப்பத்து, புறவணி, பாசறை, பருவங்கண்டு கிழத்திகூற்று, தோழி வற்புறுத்தல், பாணன்பத்து, தேர்வியங் கொண்டது, வரவுச் சிறப்புரைத்தல் எனும் பிரிவு பத்துள் பத்துப் பாடல்களாக அமைந்து கருத்துக்களை விளக்கிநிற்கும்.

கலித்தொகையின்கண்ணமைந்த முல்லைத்திணை பற்றிய பாடல்கள், ஏறு தழுவலை முதன்மையாக வைத்து காதன்மையைக் கருத்திருத்தி ஒத்த அன்புநெறியை அறிவிக்கும். மேலும் அகாக்க ஆனிரை மேய்த்தலும், ஆய்ச்சியரின் பாலுடையும்பாற் பயன் கோடலும், விற்றலும் ஆய நிகழ்ச்சிகளில் காதல் தோற்றும் கருத்துரைத்தலும், ஆய கருத்துக்களைத் தெரிவிக்கும். மேலும் பொதுவன், பொதுவர், பொதுமகளிர், (ஆய்ச்சியர்) போற்றப்படுதலும், ஆயரைக் கோவினத்தார், கோட்டினத்தார், புல்லினத்தார் என வகைப்படுத்தலும், அறியப்படும். இன்னும் வழூஉச்சொற்கோவலர், கள்வி, கட்குத்திக்கள்வன் என்ற சொல்லாட்சியும் சொற்றொடராட்சியும் அறிவிக்கும். பாடலின் உரையாடற் பகுதிகள், யா முனியா ஏறு போற் வைகற் பதின்மரை காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக்கள். வலை என வரும் தொடர்களின் கருத்து அறிந்து தெளியவேண்டியதொன்றாகும். ஆயர் தம் நிலத்துத் தொழிலுக்கேற்ப ஏறுபோல் என உவமைபெறினும் பதின்மரைக் காமுற்றுச் செல்வாய் என்றும் கட்குத்திக்கள்வன் என்றும் கூறிய கருத்து காதற்பெற்றிக்குச் சிறப்புத் தருவதொன்றாகுமோ. இக் கருத்து அகப் பொருள்பற்றிய தொகை நூல்களிற் காண்டற்கரியதொன்றாம்.

இனி முல்லைக்கலியில் முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் களவொழுக்கங் கூறி அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி வரைந்து கொள்ளும் வழக்காற்றினை, அசுரமணத்தொடுசார்த்தி முன்னைய மூன்றும் கைக்கிளை பெறுமே என்ற நூற்பாவையும் சான்று நிறீஇ கைக்கிளை என்ற உரையாசிரியரின் உரையும் உணர்ந்து தேறல் தெள்ளியோர் கடனாம். பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம், ஆசுரம் இராக்கதம், பைசாசம் ஆகிய மறையோர் மன்றலெட்டனுள், கந்தருவத்திற்கு முன்னுள்ள அசுரம் இராக்கதம் பைசாசம் ஆகிய மூன்றும் கைக்கிளை எனவும், கந்தருவத்திற்குப்

பின்னுள்ள பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம் ,தெய்வமாகிய நான்கும் பெருந்திணை எனவும் இவற்றிற்கு முறையே, ''முன்னைய மூன்றும் கைக்கிளை பெறுமே'' ''பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே'' என்ற நூற்பாக்களை உரையாசிரியர் எடுத்துக் காட்டுதல் அடுத்து வரும் ஏதமுறு கூற்றும்.

அசுரமாவது கொல்லேறுகோடல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடலாம். முல்லைத்திணையில் அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவலாகிய வழக்காறு தன்றையேக் கொண்டு ஏறு தழுவி மணஞ்செய்து கோடலை அசுர மணமாக்கியதோடு கைக்கிளை யெனக் காட்டுதல் எவ்வாற்றானும் பொருந்தாக்கூற்றும். தொல்காப்பியனார்

''காமஞ் சாலா இளமையோன்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையுமென் றிருதிறத்தால்
தன்னொடு மவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறுன் சொல்லியின்புறல்
புல்லித்தோன்றும் கைக்கிளைக் குறிப்பே''

என்ற நூற்பாவில் கைக்கிளை இன்னதென இத்தன்மைத்தென தெளிவுறுத்தியதால், காமஞ்சாலாரிடத்து நிகழ்வது கைக்கிளை எனவும் காமஞ்சான்றோரிடத்து அன்பொத்த நிலையில் ஆண் பெண்ணாகிய இருவர்பாலும் நிகழ்வதனை அன்பினைந்திணை எனவும், காமஞ் சான்றவரித்து அன்பு ஒவ்வா நிலையில் திரிவுபெற நிகழ்வது பெருந்திணை எனவும் அமைந்த குறிக்கோளுக்கேற்ப,

''கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணையென்ப''

என முறைப்படமொழிந்து தமிழர் மரபினைத் தெளிவுற உணர்த்தியுள்ளார். கலித்தொகையில் முல்லையோ அன்பினைந்திணைகளுள் ஒன்றாகும். ஆண்டுக் காமஞ் சான்றவரிடத்து அன்பொத்த நெறியால் ஆண்—பெண் இருபாலாரும் காதற் பெற்றியைத் தோற்றுவித்தலை முல்லைக் கலியால் உணரலாம். மேலும் முல்லைக்கலியில் அலர் எடுத்தார் ஆயர் எனவும் அலர் எடுத்த ஊராரை உச்சி மிதித்து ஆயர் கொடைநேர்ந்தார் எனவும் வருவனவற்றால் களவொழுக்கக் கருத்துமுணரப்படும். இன்னும் கொல்லேற்றுக் கோடஞ்சுவானை

மறுமையும் புல்லாளே ஆயமகள் எனவும் இருமணங்கூடுதல் இல்லியல்பன்று எனவும் வருவனவற்ருல் ஏறுதழுவல் அன்பினைந்திணை-யென அறுதியிட்டுரைக்கும் பெற்றியதாகும் அன்றி கைக்கிளை எனக் கட்டுரைத்தல் எவ்வாற்ருனும் பொருந்துவதன்ரும்.

வில்லேற்றியாயினும் கொல்லேறு தழீஇயாயினும் கொள்வல் என்னும் உள்ளத்தனுவான் தலைவனேயாதலின் அதனை முற்பிடப் பிறந்த அன்பு முறைபற்றி ஒருதலைக் காமமாகிய கிளை என்ருர் என நச்சினுர்க்கினியர் நவிலுவது முல்லைக் கலியில் நிகழும் ஏறு தழுவல் வழக்காற்றிற்கு எவ்வாற்ருனும் இயையாது. ஏறுதழுவல் அந்நிலத்து மரபு பற்றி அமைத்துக் கோடும் அமைப்பு அன்றி ஒருதலைக் காமம் என உரைத்தல் ஒல்லாது. முல்லை நிலத்து ஆண் பெண்ணுகிய இருவருக்கும் முன்னரே அன்பு அமைந்து கிடந்தது. ஏறுதழுவும் வழியான் தலைவற்கு மட்டும் முன்னர்ப் பிறந்த அன்பெனலாகாது.

இனிக் கைக்கிளையுள் அசுரமாகிய ஏறுகோடற் கைக்கிளை காமப் பொருளாகிய புலனெறி வழக்கில் வருங்கால் முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தருவமாகிய களவொழுக்கங் கூறி அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி வரைந்து கொள்வரென புலனெறி வழக்காகச் செய்தல் இக் கலிக்குரித்தென்று கோடலும் பாடலுளமையாதன என்பதனுற் கொள்கவெனவும் உரைகாரர் உரைத்துப் போந்த வதனுலும் அன்பினைந்திணையிலமையுமன்றி கைக்கிளை எனக் கோடல் பொருந்தாது.

காமஞ் சாலா இளமையோன்வயின் எனப் பொதுப்படக் கூறியவதனுன் வினைவலபாங்காயினுர் கண்ணும் கொள்க என உரை காரர் உரைத்தலோடு அதற்கு மேற்கோளாகக் காரரரப் பெய்த கடிகோள் வியன்புலத்து என்ற முல்லைக் கலிப்பாடலையும் எடுத்துக் காட்டியுள்ளனர். காட்டியதோடு, ''அடியோர்பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரையில புறத்தென்மனுர் புலவர்'' என்ற நூற்பா-வைச் சான்று காட்டி, வினைவலபாங்காரயினுர் கைக்கிளை பெருந்திணை களில் தலைமக்களாதற்குரியார் எனவும் உரைகாரர் உரைத்துப் போந்தனர். இக்கருத்தும் பொருந்தாது. நானில மக்களேயன்றி அடியோரும் வினைவலரும் அகத்திணை ஒழுக்கங்களை நாட்டிச் செய்யுட் செய்தல் விலக இல்லை என்பதே அடியோர் பாங்கினும் எனத் தொடங்கும் நூற்பாவிற்குப் பொருளாகும் என நாவலர் பாரதியார் நாட்டிச் சென்றுள்ளார். இக்கருத்தே இயைந்ததாகும். பழைய

உரையாளர் கருத்து பொருந்தாமையோடு முரண்பாடுடையதுமாகும். அடியோர் வினைவலர் கைக்கிளை பெருந்திணைகளுக்கு உரியர் என உரைக்கும் உரையாளர் முதல் நூற்பாவில் பிரமம் முதல் தெய்வ மீருக நான்கு மணமும் மேன் மக்கள் நிகழ்த்தலானும் இவை உலகினுள் பெருவழக்கெனப் பயின்று வருதலானும் பெருந்திணை எனப்பட்டது எனக் கூறுதல் முரணுற்ற கருத்தால்தெளிக.

மேலும் முல்லை நிலத்தியல்பு பற்றி ஆயர் தம் ஆனிரைகளைக் காக்கவேண்டி, மேலும் நிரை முன்னர் கோலூன்றி நிற்றலும் பாங்கரும் பட்டங்காற் கன்றொடு செல்லலும் உரியர். நிலவியல்பு பற்றிய கருத்தினைக் கொண்டு ஆயர், வினைவலபாங்கர் எனக் கோடல் பொருந்தாதாம்; அதனால் கைக்கிளை எனக் கட்டுரைத்தலும் ஏலாதாம்; வினைவல பாங்கர் என விளம்பல் பிழையாதலோடு கைக்கிளைக்குரியர் எனக் காட்டுதல் மேலும் பிழைபாடுடையதாம்.

எனவே முல்லை நிலத்தியல்பு பற்றி ஏறு தழுவி வரைந்து கோடல் அன்பினைத்திணையில் நிகழ்வதன்றி கைக்கிளை எனக் கோடல் எவ்வாற்றானும் பொருந்தாமை தெளியப்படுமாறறிதல் தெளிந்தோர் கடனாம்.

# வித்துவக் கோட்டம்மா

V. S. திருமாவளவன்
காரைக்கால்

ஆராவமுதனை அருந்தமிழ் இன்பப்பாவில் நாலாயிரமாய் நவின்றருளியவர்கள், பன்னிரு ஆழ்வார்கள் எனப்படுவர். அவருள் மன்னவர் இருவர்; ஒருவர் திருமங்கை மன்னர்; மற்றொருவர் குலசேகரப் பெருமாள்; மாறனாரின் நான்மறைக்கு ஆறங்கமாய் விளங்கும் அழகு அமைந்தது, மங்கை மன்னரின் நூலாறும். குலசேகரரோ எனின், வைணவகுலத்தின் மணிமுடியாய் - சேகரமாய் - தேட்டரும் திறல் தேனாய் - திகழ்ந்து பெருமாள் திருமொழியை அருளிச் செய்த அருளாளர்.

அரங்கத்தப்பனையும் இறைப்பொழுதும் அகலகில்லா அலர் மேல் மங்கை உறை மார்பனையும் கோவினைக் காக்கக் குன்றெடுத்து ஆடிய கண்ணனையும் கோசலையின் மணிவயிறு வாய்த்த கோலவார் சிலை இராமனையும் உள்ளம் நெகிழ்ந்து நெக்குருகிப் பாடிப் பரவசமுறும் குலசேகரர், ஒன்பான் மணிகளால் ஆய மாலை என மதித்துப் போற்றும் வகையில் ஒன்பது உவமைகளை அழகுற வித்துவக் கோட்டம்மான் பதிகத்தில் அமைத்துள்ளார். இப் பதிகத்தில் வித்துவக் கோட்டம்மானிடத்து ஆழ்வார் கொண்டுள்ள ஈடுபாடு தெற்றென விளங்குகிறது.

நுண்வினைக் கலைஞர்கள் தம் தொழிற்குகந்த கருவிகளை நயமாகக் கையாண்டு தம் படைப்பில் அழகினை வெளிப்படுத்தல் இயல்பு. கவிஞர்களும், சிறப்பாக இறைநெறிக் கவிஞர்கள் இறைவர்க்குச் சூட்டும் தம் பாமாலைகளில் எளிமையும் இனிமையும் எழிலும் கருத்தாழமும் கொஞ்சும் உவமைகளை ஆங்காங்கு அமைத்துத் தம் பாடல்களைத் தேனினும் தீவிதாக, நிலைபேறு உடையதாக ஆக்கிவிடுவர்.

பொதுவாக, உவமைகள், கலைஞர்களின் அனுபவத்தில் உயிர்க்கும் புதிய வார்ப்புகள். அவை காட்சிவாயிலாகவும், கேள்வி வாயிலாகவும் நூற்பொருள் வாயிலாகவும், உண்டு உயிர்த்து உற்றறிதல் வாயிலாகவும் அமைந்த அனுபவ முத்திரைகள். பிறிதொன்றிற்கு ஒப்பாவதற்கு முன்னர்க் கருத்துப் பொருளாகவோ, காட்சிப் பொருளாகவோ அமைந்த அவை, ஒப்புக் கூறும் அளவில், கருத்துப்-

பொருள், காட்சிப் பொருள் என்னும் நிலைமையோடு உவமைப் பொருள் என்னும் தகுதியை அடைகின்றன.

ஒன்றைப் பிறிதொன்றனோடு ஒப்புக் கூறும்போது (தனித்-தனியாய் அமைந்த இரண்டினை) அவ்விரண்டினைப் பற்றிய முன்னைய அனுபவத்தோடு பின்னுமொரு அனுபவம் கவிஞனுக்கு உண்டா-கிறது.

உவமைகள் கவிஞர்க்கு வைப்புநிதியாம். சொல்லப்படும் கருத்து தெளிவாகவும் நயமாகவும் அழுத்தமாகவும் ஆழமாகவும் அமைதற்கு ஊற்றுக் கோலாய் இருப்பவை உவமை எனின், அது பொய்யுரை அன்று; பொருளுரையேயாம்.

"வித்துவக் கோட்டம்மா நீவேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலேன்" என்னும் இது பெருமாள் திருமொழி-ஐந்தாம் திருமொழியின் கருத்துப் பொருளாகும். "தருதுயரம் தடாயேல்......முதலாக நின்னையே நான் வேண்டி" வரையுள்ள பாடல்களில் இந்நாந்திச் செய்யுளின் எதிரொலியைக் காணலாம்.

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் தாயும் சேயுமாய், கொண்டா-னும் குலமகளுமாய், கோனும் குடியுமாய், மருத்துவனும் நோயாள-னுமாய், வங்கக் கூம்பும் வான்புள்ளுமாய், வெங்கதிரும் செங்கமல-முமாய், வான்முகிலும், பைங்கூழுமாய், பெருங்கடலும் பேராறுமாய், வேண்டாதானும் விழுச் செல்வமுமாய் அமைந்துள்ளமையை இத்-திருமொழியில் குலசேகரர் விவரிக்கிறார்.

முதல் ஆறு பாடல்களிலும் உவமை அமைப்பிடம் ஒருவித-மாக உள்ளது. முதல் பாட்டின் இறுதி ஈரடிகளிலும் இரண்டாம் பாட்டின் முதல் ஈரடிகளிலும், இங்ஙனமே மூன்று ஐந்து ஆகிய பாடல்களில் இறுதி ஈரடிகளிலும், நான்கு ஆறு ஆகிய பாடல்களில் முதல் ஈரடிகளிலும் உவமை அணி செய்கின்றன. ஏழு முதல் ஒன்பது வரையுள்ள பாடல்களில் முதல் ஈரடிகளில் உவமை அமைந்துள்ளன.

ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வோர் உவமை வழியாகத் தம் உணர்ச்சியினை வெளிப்படுத்தும் கவிஞர், பாட்டில் உவமைகளை அமைக்கும் இடநெறியில் ஓர் ஒழுங்கினைப் பின்பற்றுதது வி ட ட கவே உள்ளது.

இனி, இத் திருமொழியில் அமைந்துள்ள உவமைகளைக் காண்போம். முதற் பாட்டில் இடம் பெற்றுள்ள உவமை,

''அரிசினத்தா லீன்றதாய் அகன்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே''

என்பதாகும்.

உலகியல் வட்டத்திலிருந்து கொண்டு குலசேகரர் சிந்திக்கிறார். தாய்-சேய் உறவினை உலக காரணனான இறைவனுக்கும் தமக்கும் உள்ள உறவாகக் கருதுகிறார். அண்ட சராசரங்களையும் உயிர்களையும் படைத்தவன் தாய் எனில், அவனால் படைக்கப்பட்ட உயிர் சேய்தானே! தானீன்ற சேயினைத் துன்பத்தினின்றும் காக்கவேண்டுவது தாயின் கடமை அன்றோ? 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்பது பொன்முடியார் பாட்டு. ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒலுறுத்துவாள், நொடிபயிற்றுவாள், கைத்தாய் என்னும் ஐவகைத் தாயரினும் மேன்மையுடைய, பால்நினைந்தூட்டும் தாயினைக் குறித்துள்ள பெற்றி ஆழ நினைத்தற்குரியது. ஈன்றெடுத்த தாய் ஒருகால் மிக்க சினம் கொண்டு தனது குழந்தையை விட்டு அகன்றாலும், தாயன்பில் தளையுண்ட குழந்தை அத் தாயின் அருளையே எண்ணி அழுதல் இயல்பன்றோ? அது போன்று உலக காரண பூதனான இறையாம் தாயைத் தவிர, வேறொருவரையும் அறியா நிலையில் ஜீவான்மக் குழந்தை கிடக்கிறது. இறையாம் தாய் ஜீவான்மக் குழந்தைக்கு அருள் புரியாமல் அகன்றாலும், அது பரமான்மாவின் பேரருட் பெருங்கருணையை எண்ணிக் கரைகிறது.

இரண்டாம் உவமையும் உலகியல் வட்டச் சார்புடையது. பரமான்மா- ஜீவான்மா உறவினைக் கணவன்-மனைவி உறவில் வைத்து பேசுகிறார், குலசேகரர். தாயன்பினைத் தவிர வேறொன்றினை அறியா ஜீவான்மா இறை தத்துவத்தை அறிந்து கொண்ட நிலையில், அறிவு வளர்ச்சியும் அனுபவ முதிர்வும் பெற்ற நிலையில், பரமான்மாவோடு கூடுவது இவ்வுவமையில் சித்திரிக்கப்படுகிறது இதனை நாயக-நாயகி பாவமென நவில்வர், அறிஞர்.

''கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்''

இவ்வுவமை 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன், என்னும் பழமொழியின் எதிரொலி. கணவன் தீய ஒழுக்கம் உடைய

வனாய் வாழ்ந்தாலும், அவன் முன்னர்த் தன்பால் செலுத்திய அன்பினை உள்ளத்து பிறர்நெஞ்சு புகாது கண்ணகி போல வாழ்வது கற்புடைப் பெண்டிர்க்கு இயல்பு அது போன்று ஊரினர், "இவ் ஆழ்வாரின் தன்மை இருந்தவாறு என்னே! பரமனின் கொடுமை இருந்தவாறு என்ன? இஃது அடுக்குமோ? என்றெல்லாம் குறை கூறினாலும் அதற்காக வேறொரு தெய்வத்தைச் சரணடையாமல் மறந்தும் புறந்தொழாராய், பாற்கடலில் பையத் துயின்ற பரமனையே சரணடைகிறார் ஆழ்வார்.

"திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்னும் கொள்கை வலிமையுற்றிருந்த பக்தி இயக்கக் காலத்தில்

"தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே"

என்னும் உவமை தோன்றுவது இயல்பே. அதிலும் மன்னர் மரபில் தோன்றிய குலசேகரர் இறைமாட்சியும் குடிச்சிறப்பும் குறைவற அறிந்தே இருப்பர். குடி தழீஇக் கோலோச்சும் மாநில மன்னர்கள் நெறி வழீஇச் சென்றமையும் உண்டு. அக் காலங்களில் அந்நாட்டு வாழ்ந்த குடிமக்கள் முன்னர்த் தம் மன்னன் அருள் நெஞ்சினாய்ச் செங்கோலோச்சியதை நினைந்து நினைந்து மீண்டும் நல்லாட்சி மலர அவனையே நோக்கி நிற்க வேண்டும். வேற்றரசர் வரவிற்கு வெண்சாமரம் வீசக்கூடாது. காப்பவன் கருணைக்குக் காக்கப்படுமவன் காத்துக் கிடக்க வேண்டும். அது போலவே, பரமாத்மாவின் கருணைக்காக எக்காலும் காத்துக் கிடப்பதைத் தவிர, வேறொரு வழியும் ஜீவான்மாவிற்கு இல்லை என்பதையே இவ்வுவமை சுட்டிக் காட்டுகிறது.

தாய்க்கும் சேய்க்கும் கணவனுக்கும் மனைவிக்கும் அரசனுக்கும் குடிக்கும் உள்ள உறவு அல்லது தொடர்பினைப் போன்றதன்று. மருத்துவனுக்கும் நோயாளனுக்கும் உள்ள தொடர்பு.

மருத்துவனிடத்து நம்பிக்கை பாராட்ட வேண்டுவது நோயாளனின் கடமை. மருத்துவனிடம் தன்னை ஒப்படைத்த பிணியாளன் நோய் நீங்க, அவனிடம் அன்புடையவனாகவும் நன்றி உரையவனாகவும் இருக்கிறான். ஆனால், பிணியாளனின் நோய் போக்கும் முயற்சியில் ஈடுபடும் மருத்துவன் முன்னவனின் கட்டியைக் கத்தியால் அறுத்து, புண் புரையோடாமல் இருக்கச் சூட்டுக் கோலால் சுடுகிறான்.

அப்போது நோயாளன் உறுதுயர் கொஞ்சமோ? உயிர் சிந்தும் நிலை அன்றோ? ஆயினும் நோயாளன் மருத்துவன்பால் வெறுப்புக் காட்டுவானோ? காட்டான்.

பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் செயலும் கைகொல்லும் காழ்ப்புடைய வினை மரத்தைக் கொன்று, அதன் வேரையே சுட்டெரிக்கும் தன்மைத்தாகும். வினை கொன்று அதன் வேரையும் மாய்க்கும் இறைவனிடம் மாறாப் பேரா அன்பு பூண வேண்டும் என்பதை

'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்'

என்ற இவ்வுவமை விளக்குகிறது எனலாம்.

ஐந்தாவதாகிய

''எங்கும் போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே''

என்ற உவமைக் கருத்துத் தனித் தன்மை வாய்ந்தது.

நடுக்கடலில் உயிர் பிழைக்கத் தவிக்கின்ற ஒருவனுக்குச் சிறு மரத்துண்டு கிடைத்தால் அதனையே பற்றுக்கோடாகக் கொண்டு உய்திபெறல் இயல்பன்றோ? அப்படியே உலகியல் வாழ்வெனும் துயர்க்கடலில் உய்தியின்றித் தவிக்கும் உயிர்ப்பறவையினை இப் பாட்டில் குலசேகரர் சித்திரிக்கிறார்.

மண்ணிலோ, மரக்கொம்பிலோ கல்லிலோ இன்னும் பிற மண்ணிடைப் பொருள்களிலோ, மாப் பறவையாயினும் பறந்து அலுத்தபின், கால் பாவ இடமுண்டு. ஆனால், கடலில், பாயாய்ச் சுருண்டு விரியும் கடற்றிரைப் பரப்பில், கால் பாவ இடமின்றித் தவிக்கிறது உயிர்ப்பறவை. சிறகுகள் அலுத்து பொத்தென்று எறிகடலில் வீழ்ந்து மடியத்தான் வேண்டுமா?

மடியும் அவலம் அப் பறவைக்கு இல்லை. நடுக்கடலில் தத்தளிக்கும் உயிர்ப்பறவை உய்தி பெறற்கு ஒரு பற்றுக்கோடு, மரக்கலத்தின் கூம்புதான். அக் கூம்பைத் தஞ்சமடைந்தால் அச்சம் எது? அவலம் எது?

துயர்க்கடலில் மோதுண்டு மொத்துண்டு அழிந்து படாமல் உயிர்ப்பறவை தப்பிப் பிழைக்க, மரக்கலத்தின் கூம்பாக இறை-

வனின் திருவடிகளைச் சரண்புக வேண்டும் என்பதை மிக அற்புதமாக சித்திரிக்கிறது இவ்வுவமை.

இறைவனின் இணையடிகளைப் புணையாகக் கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடக்க நினைத்த தொண்டர்க்கு அவ்வடிகள் புகலளித்தன. இனிச் செய்யத்தக்கது யாது? மீண்டும் ஆசை பெருக்கி அவலத்தில் வீழ்வதோ? பாசம் வளர்த்து மோசம் போவதோ? தஞ்சம் அளித்தவனை ஓவாது நெஞ்சில் இருத்த வேண்டும். அவன் பொருள்சேர் புகழ் பேசி உருகி நிற்க வேண்டும்.

அடுத்த உவமைகளில் குலசேகரரின் திடசித்தம் துலங்குகிறது திருமால் நெறியினின்று தம்மை யாரும் புறநெறியில் புகுத்தி விட முடியாது என்கிறார்.

செந்தீ, செந்தாமரையின் அருகணைந்து வெப்பத்தைச் செய்தாலும், அது மலராது. கதிரவன் தூரத்தே இருந்தாலும், அவன் வெங்கதிர் பட்ட அளவில், தாமரையின் செவ்விதழ்கள் விரிகின்றன.

இறைவனின் அருட் பெற்றி தொண்டனின் அகநெகிழ்விற்குக் காரணமாகும் வைணவத்திற்குப் புறம்பான சமயக்கடவுளரின் பொருளற்ற சீர்மைக்குத் தம் நெஞ்சு நெகிழாது என்கிறார் குலசேகரர்.

இதற்கு முன்னருள்ள பாடல்களில் இறைவனின் குணங்கள் பேசப்படவில்லை. இப் பாட்டிலும் அடுத்து வரும் பாட்டிலும் இறைவனின் அருள் பக்தனின் உளநெகிழ்வதற்கு மூலமாகின்றது.

இந்நுட்பம்,

''செந்தழ லேவந்து அழலைச்செய் திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்''

என்னும் எடுத்துக்காட்டு உவமை அணியால் சிறக்கிறது.

பயிர் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் மழை இன்றியமையாதது. வான்மழையின்றிப் பயிர்கள் வாடிவிடும். வான் மறந்த காலத்தும் தான் மறவாமல் வானையே நோக்கி நிற்கும் பயிர், மழைநீர் இல்லையானால், பிற நீர் கொள்ளும் தன்மையும் அதற்கு இல்லை. பிற நீரும் மழை நீர் ஆகா.

மாந்தமை நிலை வேறு. குறை போக்கி, நிறையாக்கும் பண்பு மானிடம் பாற்பட்டது. முத்தர் மனமிருக்கும் மோனத்தே என்னும்

இயல்பினராகிய பாகவதர், பகவானைத் தவிர வேறு சிந்தனை அற்றவர். வாய்க்கும் வயிற்றிற்கும் வாழும் எளிய மக்கள் இயல்பு கடந்து, குறிக்கோளோடு வாழ்கின்றவர்.

பசிய பயிர்கள் வான்முகிலை நோக்கியிருத்தற்போல, யானும் உன்னையே எதிர்நோக்கியிருப்பேன் என்பார்.

''எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்''

என்னும் உவமை வழித் தம் கருத்தை நிலைப்படுத்துகின்றார்.

அடுத்த உவமையாகிய

''தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்''

என்பது குலசேகரரின் தம்வயமற்ற நிலைமையை விளக்குகிறது.

ஐந்திணை நெறி அளாவிச் செல்லும் ஆறு, இறுதியில் கடலையே புகலாக அடைகிறது. ஆறு கடலை அடைவதென்பது திண்ணம். உலக விவகாரங்களில் தாம் அகப்பட்டு அலைந்தாலும் இறுதியாகப் பரகதியாக விளங்கும் உன்னைப் புகலடைவேன்; பற்றிக் கொள்வேன்; புறம் போகேன் என்கின்றார் குலசேகரர்.

இவ்வுவமையிலும் ஆழ்வாரின் அகவுறுதி வெளிப்படுகிறது.

யாரொருவர் எது ஒன்றை விரும்புகிறாரோ அப்பொருள் அவரினின்றும் விலகிச் செல்லும். யாரொருவர் எது ஒன்றினை வெறுத்து ஒதுக்குகிறாரோ அப்பொருள் அவரைத் தொடர்ந்து வரும். இஃது உலகியல்.

வித்துவக் கோட்டம்மா! நீ என்னை ஏற்றுக்கொள்ளாமல் உதறித் தள்ளினாலும், யான்- உன் உடைமையாகிய யான்- உன்னையே விடாது பற்றிக் கொள்வேன். எதுபோல எனின், வேண்டாதானை வேண்டும் செல்வம் போல'' என்கின்றார் குலசேகரர்.

''நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல்''

என்னும் இவ்விறுதி உவமையில் தாம் இறைவனைச் சிக்கெனப்

பற்றிக் கொள்ளும் பான்மையை- பக்தி வைராக்கியத்தை- அற்புதமாக விளக்குகின்றார்.

ஒன்று முதல் ஆறு பாடல் வரை 'வித்துவக் கோட்டம்மானே! உன்னையன்றி எனக்கோர் புகலில்லை; உன் சரண் அல்லால் சரணில்லை' என்று பன்னிப் பன்னிப் பேசியவர், ஏழு எட்டு ஆகிய பாடல்களில் தம் உள்ள உறுதியைப் புலப்படுத்தி, ஒன்பதாவது பாடலில் நீயே என்னைப் புறக்கணித்தாலும் யான் உன்னையே புகலாக அடைந்திடுவேன்; இஃது உறுதி என்று உரைக்கின்றார் குலசேகரர்.

குலசேகரர் முதல் நான்கு பாடல்களில் உயர்திணையையும் ஐந்து முதல் ஒன்பது பாடல்களில் அஃறிணையையும் உவமைப் பொருள்களாக அமைத்துள்ளமை எண்ணி இன்புறத்தக்கது.

வித்துவக் கோட்டம்மானைப் பற்றி அமைந்த இப் பாட்டுவமைகளில் ஓர் ஒழுங்கு நெறி காணப்படுகிறது; பக்தி நெறி வரையறைக்குட்பட்ட வளர்ச்சியாகவும் அமைந்துள்ளது. தத்துவ நெறிக் காலத்தில் தெளிவுபட்ட சரணாகதி தத்துவம் அல்லது பிரபத்தி நெறி குலசேகரரின் இவ்வுவமைகளில் பொதிந்துள்ளது. தாயாயும் கொழுநனாயும் மன்னனாயும் அமைந்த பரமாத்மா, சேயாயும் குலமகளாயும் குடியாயும் அமைந்த ஜீவான்மாவைப் புரந்தருதலும் ஆதரவு காட்டலும் காத்தலும் செய்ய வேண்டும் என்பதையும் நோய் தீர்த்த மருத்துவனிடம் நோய் தீர்ந்தவன் மாளாக் காதல் கொள்ளல் போல, தன் பிறவி நோயைத் தீர்த்த பரமாத்மாவிடம் ஜீவாத்மா பக்திக் காதல் உடையதாயிருத்தல் வேண்டும் என்பதையும் துயர அலை எறியும் வாழ்க்கைத் தடங்கடலில் காலூன்றி இளைப்பாற இடமின்றித் தவிக்கும் உயிர்ப் பறவைக்கு வங்கத்தின் கூம்பாக இறைவன் மலரடிகள் இலங்குகின்றன என்பதையும் இறைவனின் திருவருள் கிடைத்த பின்னர், ஆதவனுக்கு அலருகின்ற செந்தாமரை போலவும் மாமுகில் கண்டு செழிக்கும் பைங்கூழ்கள் போலவும் ஜீவான்மா இறை இன்பத்தில் திளைக்கும் என்பதையும் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் பரந்தோடினாலும் ஆறு இறுதியில் கடலைப் புகலாக அடைவதுபோல் ஜீவாத்மா உலக வியவகாரங்களில் ஈடுபட்டாலும் பரமாத்மாவைச் சேரல் உறுதி என்பதையும் மாயையினால் ஜீவாத்மாவைப் பரமாத்மா விலக்கி வைப்பதுபோலத் தோன்றினாலும் தன்னை வேண்டாதானைத் தானே சென்றடையும் செல்வம்போல, பரமாத்மாவை அடைவதே ஜீவாத்மாவின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதையும் இவ்வைந்தாம் திருமொழியில் குலசேகரப் பெருமான் குறிக்கிறார் எனலாம்.

# அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் தமிழ் இசையும்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
(ஆட்சிக்குழு உறுப்பினர்
முன்னாள் நிகழ் நிலைத் துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

[தில்லை மாநகரின் எல்லையில் செட்டி நாட்டரசர் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு கலைக் கோயிலாய் வளர்ந்-தோங்கித் திகழ்வதை கல்வி உலகம் நன்கு அறியும். அண்மையில் பொன் விழாக் கொண்டாடிய இப் பல்கலைக் கழகம் பல்வேறு தமிழறிஞர்களை காலத்தால் போற்றிப் பேராதரவு தந்துள்ளது. யாழ்நூல் தந்த விபுலாநந்தரும், திருவாசகத்துக்கு அரியதோர் விளக்கம் ஈந்த கதிர்மணியும் தமிழ்த்தாத்தாவும் நாவலர் நாட்டாரும் இங்கே தொடர்பு கொண்டு பணிபுரிந்தவர்கள். இக் கலைக் கழகம் கண்ட அண்ணாமலை அரசர் தமிழிசையின் மறு-மலர்ச்சிக்கு வித்திட்டவர். தமிழும் இசையும் இருகண்களாகக் கொண்டு பணிபுரிகின்ற இப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் நமது தமிழ்ச் சங்க இயக்குநர் ஒருவரும் உறுப்பினராக தொடர்ந்து நியமிக்கப்படுகிறார் என்பது நினைவு கூர்தற் குரியது பொன் விழாக் கொண்டாடிய பல்கலைக் கழகத்தை உளமார வாழ்த்துவதோடு, பல்கலைக் கழகத்தைப் பற்றி முத்தமிழ் வித்தகர். பண்டித வித்வான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் எழுதியுள்ள ஒரு கட்டுரையினை ஈந்து வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்—(ஆர்)]

இருபதாம் நூற்றாண்டின் கல்வி வரலாற்றில் முதல் இடம் பெற்று இப்போது பொன்விழாக் கொள்ளும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அரும்பெரும் பணிகளுக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் உள்ள பணிகளைக் காணுதல் அரிது.

பெருங்கொடை வள்ளல், செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தனி ஒருவராய்த் தமது பெரும் பொருளை வாரி வழங்கி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவினார்கள். அவர்களும், அவர்கள் குமாரர் பத்ம-பூஷண் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும் ஐம்பது ஆண்டுகளாக, இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள-

ஆற்றிவருகின்ற சீரிய பணிகள் அளவிடற்கரியன. இவ் இரு பெருமக்களுக்கும் கல்வியுலகம் எப்போதும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது.

பல்கலைக் கழக நல்வளர்ச்சிக்குக் கட்டிடங்களையும், சுற்றுப்புறங்களையும் அழகாக அமைப்பதில் ஆர்வம் கொண்டது போலவே, பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்கள் மிகச் சிறந்தவர்களாக அமைய வேண்டுமென்பதிலும் அண்ணுமலை அரசர் அவர்களும், முந்தைய வேந்தர் அவர்களும் ஆர்வம் கொண்டு ஆவன செய்தார்கள்; செய்து வருகின்ருர்கள். நாட்டில் புகழ் சிறந்த பேரறிஞர்களைத் துணைவேந்தர்களாகவும், ஒவ்வொரு துறையிலும் திறமையும் அனுபவமும் நிறைந்தவர்களைப் பேராசிரியர்களாகவும் பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து பணியாற்றச் செய்து மகிழ்வெய்திஞர்கள்; மகிழ்வெய்துகின்ருர்கள். இதன் விளைவாக, அறிவாற்றல் நிறைந்த மாணவ- மாணவியர் பலர் உருவாகி, உலகின் பல்வேறு இடங்களில் பல்வேறு துறைகளில் உயர்ந்து ஓங்கி விளங்கி, இப் பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்து வருகின்றனர்.

இவ்வாறு எல்லா வகைக் கல்விகளையும் வளர்த்து வருகின்ற கலைக்கோயிலாக, இப் பல்கலைக் கழகம் விளங்குகின்ற நிலையில், இதன் கண், தனிச்சிறப்பாக வளர்ந்து வருகின்ற கல்வித்துறைகள் சிலவற்றில், தமிழும் தமிழ் இசையும் குறிப்பிடத்தக்கன. இவ் இரு துறைகளையும் வளர்ப்பதை அண்ணுமலை அரசர் அவர்கள். பல்கலைக் கழகத்தின் குறிக்கோளாகவும், தமது வாழ்க்கைக் குறிக்கோளாகவும் கொண்டார்கள். ''தமிழையும் தமிழ்ப் பண்பாட்டினையும் உலகறியச் செய்வது, இப் பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த குறிக்கோளாக இருக்கும்'' எனவும் ''தமிழ்நாடு எங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல்'' எனவும் அண்ணுமலை அரசர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது நினைத்தற்குரியது.

அரசர் அவர்கள், இசைக்கலையில் தமக்கு இருந்த மிகப்பெரிய ஈடுபாட்டினுல் தாம் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு முன்பே, 1929-ஆம் ஆண்டிலேயே சிதம்பரத்தில், இசைக் கல்லூரியினை நிறுவி, இசைக்கலைக்கு அரும்பணி ஆற்றிஞர்கள். இக்கல்லூரி, நிலைபெற்று வளர்ச்சியுற்றவுடன், இதனை 1932-ஆம் ஆண்டில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தார்கள். இசைக்காகத் தனியே நான்கு ஆண்டு வகுப்பு, முதன் முதலாக நடத்திப் பட்டம் வழங்கிய பெருமை, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம், நாகசுரம், தவுல்,

பரதநாட்டியம் ஆகியவை, இங்கே கற்பிக்கப் பெறுகின்றன. இவ்வாண்டில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ-மாணவியர் கல்வி பயில்கின்றனர் தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும், இலங்கை மலேசியா, முதலிய பிற நாடுகளிலும் இருந்து மாணவ-மாணவியர் பலர் இங்கே வந்திருந்து கல்வி கற்கின்றனர். இங்கே கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சங்கீத பூஷணம், பி. மியூசிக் முதலிய பட்டங்கள் வழங்கப் பெறுகின்றன.

பெரும்பான்மையான இசைக்கருவிகள் இங்கே சேர்த்து வைக்கப்பெற்றுள்ளன. இவற்றில், இப்போது கிடைத்தற்கரிய இசைக் கருவிகள் சிலவும் உள்ளன.

சிறந்த இசைவாணர்களாகிய சபேசையர், சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார் சங்கீத கலாநிதி கே. பொன்னையாபிள்ளை, திருப்பாம்புரம் சங்கீத கலாநிதி டி. என். சாமிநாதப்பிள்ளை, இசைப் பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை, இசைப் பேரறிஞர் எம் எம். தண்டபாணி தேசிகர், கும்பகோணம் இசைப்பேரறிஞர் இராசமாணிக்கம்பிள்ளை,மன்னார்குடி இராசகோபாலப் பிள்ளை, மாயூரம் இசைப் பேரறிஞர் கோவிந்தராசப் பிள்ளை, யாழிசைப் புலவர் வி. எஸ். கோமதிசங்கரையர், சாத்தூர் கிருஷ்ணையங்கார், தஞ்சாவூர் இராமதாஸ்ராவ், வீணை கே பி. சிவாநந்தம், டி. கே. ரங்காச்சாரி முதலியோர், இக்கல்லூரியில் பேராசிரியர்களாவும் விரிவுரையாளர்களாகவும் பொறுப்பேற்றுப் பெரும்பணி புரிந்துள்ளனர். இசையுலகில் பெரும்புகழ் பெற்ற இசைப் பேரறிஞர் மதுரை எஸ். சோமசுந்தரம் அவர்கள் (சோமு), இப்போது இசைப் பேராசிரியராக இங்கே விளங்குகின்றார்கள். இவர்கள் அண்மையில், தமிழக அரசு இசைப் புலவராக நியமிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடுதற்குரியது.

இசையுலகில் பாராட்டுப் பெற்ற சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம் டி. கே. ரங்காச்சாரி, எஸ். வி. பார்த்தசாரதி. கே. எஸ். நாராயண சாமி, டாக்டர் எஸ் இராமநாதன், கோவி. மணிசேகரன் முதலியோர் இங்கே கல்வி பயின்று சங்கீத பூஷணப் பட்டம் பெற்றவர்கள். இவர்களில் டாக்டர் எஸ். இராமநாதன் அவர்கள், இங்கே கல்வி பயின்றபின் அமெரிக்காவில் WESLEYAN பல்கலைக் கழகத்தில் தங்கி, இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து அங்கு டாக்டர் பட்டம் பெற்றவர்கள். நாட்டியக் கலையில் புகழ் பெற்ற திருமதி. பத்மா சுப்பிரமணியம் அவர்கள், இப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி

செய்து அண்மையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். மேலும் இங்கே பயின்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்ற எஸ். கோபால கிருஷ்ணன் அவர்கள், டெல்லியில் அனைத்திந்திய வானொலியில், பல்இசைக் கருவிகள் இயக்குநராகப் பணிபுரிகின்றார்கள்.

இந்நிலையில், இப் பல்கலைக்கழகம் தமிழ் இசையை வளர்த்து வருகின்ற வரலாற்றினை எண்ணிப் பார்ப்பது பொருத்தமாகும்.

1936-ஆம் ஆண்டில், துணைவேந்தர் மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் தலைமையில், ஒரு இசை மாநாடு இப் பல்கலைக் கழகத்தில் கூட்டப் பெற்றது. தமிழ்ப் பாடல்களைப் பலர் அறியச் செய்யவும், தமிழ் இசைப்பாடல்களை மேலும் மேலும் ஆக்கவும் ஆவன செய்யவேண்டுமென்று அமமாநாடு வற்புறுத்தியது. ஆயினும் 1940-ஆம் ஆண்டு வரை, இப் பல்கலைக் கழக இசைப் பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசை-வாணர்கள், தமிழ் நாட்டு இசை அரங்குகளிலும் பிற மொழிப் பாடல்களையே பாடுவராயினர். நம்நாட்டு இசையரங்குகளில் வேற்று மொழிப் பாடல்கள் பாடப் பெறுவது நியாயமில்லை, பயனுமில்லை என்ற உணர்ச்சி அண்ணாமலை வள்ளல் அவர்களின் உள்ளத்தில் பதிந்தது. இந்த நல்லெண்ணம் தமிழ் இசை இயக்கமாக உரு-வெடுத்தது. எச் செயலையும் எண்ணித் துணிந்து, துணிந்த பின் எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது, தொடங்கிய செயலை நிறைவேற்றும் ஆற்றல் உடைய அரசர் அவர்கள், இயக்கத்திற்கு நேர்ந்த எதிர்ப்புக்களையெல்லாம் தமிழ் இசை வளர்ச்சிக்கு ஊக்கம் தருவனவாகக் கருதினார்கள். ஆனால் அரசர் அவர்கள் தொடங்கிய தமிழ் இசை இயக்கம், தமிழ் மக்களின் உள்ளங்களில் பேருவகை ஊட்டியது. டாக்டர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் அரசர் அவர்களுடன் ஒத்துழைத்தனர். எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற்றன. தமிழ் இசைச் சங்கங்கள் தோன்றின. ஆங்காங்கு தமிழ் இசைக் கல்லூரிகள் பணியாற்றத் தொடங்கின. இசை அரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்கள் பாடப்பெற்றன. வேற்று மொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த பல்கலைக்கழக இசைப் பகுதி, தமிழ் இசை கற்பிக்கும் பகுதியாக மாறியது. அவ்வளவில் அன்றிப் பழையனவும் புதியனவும் ஆகிய இசைப்பாடல்களையும், இசை இலக்கண நூல்களை யும் வெளிப்படுத்தும் பெருமுயற்சியையும் அரசர் அவர்களின் பேராதரவில், பல்கலைக் கழகம் மேற் கொண்டது மகாமகோபாத்

தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில், தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப் பெற்றது. அக் குழுவுக்குப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் செயலாளராகப் பணியாற்றினார்கள். வெளியிடங்களிலுள்ள இசைவாணர் பலரும், இசைப்பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப் பல்கலைக்கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லோரும், வித்துவான் மு அருணாசலம்பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, அரசர் அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று விரைந்து செய்த பெருமுயற்சியின் பயனாக, 20 தமிழ் இசை நூல்கள், பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்துள்ளன. அரசர் அவர்கள், பல்கலைக் கழகத்தின் வாயிலாகத் தமிழ் இசையை வளர்த்ததோடு, சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தையும் நிறுவினார்கள். அச் சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்குத் சிறந்த பணிகளை இடையறாது புரிந்து வருவது நாடறிந்த செய்தியாகும். அரசர் அவர்களின் பெயரைத் தாங்கும் பெருமை பெற்று, இப்போது அச் சங்கத்தின் கட்டிடமாகச் சென்னையில் விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம், அண்ணாமலை வள்ளலின் புகழ் போல் ஓங்கி நிற்பதை நாம் கண்டு மகிழ்வெய்துகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுவரை இருபது தொகுதிகளாக, 23 தமிழ் இசை நூல்களை வெளிப்படுத்தியுளளது, அந் நூல்களில், 1254 தமிழ் இசைப் பாடல்கள் 234 இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், அப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுதிகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேள கலாநிதி, பரதசங்கிரகம், மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும் என்ற நூலகள், இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத்தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர் திறமை பெறும் வண்ணம், இப் பல்கலைக் கழகம் வெளிப்படுத்திய மிருதங்க பாட குறைப் புத்தகமும் இத் தொகுதிகளில் ஒன்றாகும். மேலும் 1500-க்கு மேற்பட்ட பாடல்கள் இசை அமைக்கப் பெற்று அச்சிடுதற்கு ஏற்ற நிலையில இருக்கின்றன. தமிழ் இசைக்கு அரும்பெரும் தொண்டுகள் புரிந்த அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப் பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசை மாலை' என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் பயன் தருமாறு இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர்களாக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் அரசர் முத்தைய வள்ளல் அவர்கள், தம் தந்தையார் அவர்கள் காலத்திலும், அவர்களுக்குப் பின்னும் அவர்களைப் போலவே பெருக்கம் கொண்டு தொடர்ந்து தமிழ் இசையையும், சென்னையில் தமிழிசைச் சங்கத்தினையும் வளர்த்து வருவது அனைவரும் அறிந்த செய்தியாகும். மேலும் இவர்கள், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பாண்டிய அரசர்கள், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் தமிழ் இசை வளர்க்கத் திருவுளம் கொண்டு, அங்கே 21-1-1974ல் பெருந் திட்டத்துடன், தமிழ் இசைச் சங்கம் நிறுவியுள்ளார்கள். அந்நாள் முதல் இன்றுவரை, அரும்பணியாற்றி வரும் இச் சங்கத்தின் உரிமை நிலையமாக அரசர் அவர்கள் பெயரால் ராஜா முத்தையா மன்றம் என்னும் கலைக்கோயில், மலைக்கோயில் போலக் கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில், ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் உருவாகி, நிறைவு பெறும் நிலையில் உள்ளது இச் சங்கத்தின் வளர்ச்சியிலும் கட்டிட வளர்ச்சியிலும் முத்தைய வள்ளல் அவர்கள் மேற்கொண்டுள்ள ஆர்வமும் வழங்கிவரும் உதவிகளும் அளவிடற்கரியன.

முத்தைய அரசர் அவர்கள் குமாரர் திரு எம். ஏ. எம். ராமசாமி அவர்கள் இச்சங்கத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுத் தம் தந்தையாரையும் பாட்டனாரையும் பின்பற்றித் தமிழ் இசைக்கு அரும்பணியாற்றி வளர்த்து வருவது, தமிழகத்தின் நற்பேருதம், இவ்வாறு, வழிவழியாகத் தொடர்ந்து, கலைபபணி புரிந்துவரும் இக்குடும்பத்தினரின் தொண்டுகளைத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும்; மதுரை மாநகரில் தமிழ் இசைச் சங்கத்தில் இவ் ஆண்டில் நடைபெற்ற விழாவில் பெரிதும் பாராட்டியிருப்பது பலரும் அறிந்த செய்தியாகும்.

இக் குடும்பத் தலைவர் அண்ணாமலை அரசர், பொதுநலக் கற்பகத் தருவாக நிறுவியுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவினை, உலகம் முழுதும் உவகைமிகக் கொண்டாடுகின்ற இந் நன்னாளில், இக் குடும்பத்தினர், நீடூழி வாழ்க! மேலும மேலும் வளர்க!! என வாழ்த்துவது நம் கடமையாகும்.

# குடும்ப விளக்கு

பழநி. அரங்கசாமி
(மதுரைப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதிதாசன். மூச்சினையும் பேச்சினையும் முத்தமிழ்க் கவிதையாக்கிய இப் புதுமைக் கவிஞர் இலக்கிய உலகில் தமக்கொரு தனி இடத்தைப் பெற்றிருக்கிறார். இவர் தம் கவிதைப் புனலில் கரைபுரண்டு செல்லும் அளப்பரிய தமிழார்வத்தில் நற்றமிழ் நாட்டார் நாளுந் திளைத்து மகிழ்கின்றனர்.

''தாயெழிற் றமிழை என்றன் தமிழரின் கவிதை தன்னை
ஆயிர மொழியிற் காண இப் புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்நாளோ, ஆரிதைப் பகர்வார் இங்கே''

என்று அக்கவிஞர் ஏங்கும் போது, வெறியினை ஒதுக்கிய வேட்கை மீதூரப் பெற்றுத் தமிழின் உயர்வு காணத்துடிக்கின்ற ஓர் அன்புள்ளம் நமக்குப் புலனாகின்றது. பீறிட்டு வரும் உணர்ச்சிப் பிழம்புகளைப் பேசும் இலக்கியமாக்கிய கவிஞரின் பேனாமுனை வாழ்க்கையின் பல்வேறு கோணங்களையும் பட்டை தீட்டிக் காட்டுகிறது. அது மட்டுமன்று பாடுகின்ற புட்களையும், ஓடுகின்ற நதியினையும், கொட்டுகின்ற அருவினையும், குளிர்ந்த மழையினையும், ஊர்கின்ற மேகத்தினையும், உலவுகின்ற தென்றலையும், மலர்கின்ற பூக்களையும் பேரா இயற்கையின் பெருஞ் செல்வங்கள் என்றால், அந்த இயற்கையே இக்கவிஞரின் பேனா முனையில் உருவாகிறது.

ஆங்கிலமொழிப் பெருங்கவிஞன் வேர்ட்ஸ் வொர்த்தின் பாடல்களில் இயற்கையே பேனாவாக உருவெடுத்து வந்து தன்னைத் திறம்படத் தீட்டிக் கொண்டது என்று ஆர்னால்டு என்ற திறனாய்வாளர் புகழ்ந்து கூறுவார். தமிழ் மொழிக் கவிதையினைப் பொறுத்தவரையில் இப்பாராட்டு புரட்சிக்கவிஞருக்கும் ஒக்கும். புதுவைக் கவிஞரின் எழில் கொஞ்சும் கவிதைகளை உலகியற் கண்ணோட்டத்தில் பார்த்தால், அவை நாட்டுப்பற்றினையும், மொழி ஆர்வத்தினையும், பண்பாட்டுச் சிறப்பினையும், இன உரிமையினையும் தெற்றென விளக்கக் காண்கிறோம்.

"தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

என்று மொழிக்கும் உயிருக்கும் உறவு காட்டி, மொழியினை உயிராகக் கருத வேண்டும் என்று கூறாமல் கூறுகின்ற அக்கவிஞர்தம் தலை சிறந்த நூல் குடும்ப விளக்கு. மங்கலமான தலைப்பினைத் தன்பாற் கொண்டிலங்கும் இச் சீரிய செந்தமிழ் நூல் தமிழகத்திற்கொரு அறிவு விருந்து.

பெண்டிரே குடும்பத்துக்கு விளக்கு என்ற கருத்துப்பட 'மங்கல மென்ப மனைமாட்சி' என்பர் வள்ளுவர். ஆனால் இந்நூலோ, அப்பெண்டிர் தமக்கும் விளக்காய் அமைந்த பெருமையுடைத்து. அவர் தம் சீரிய வாழ்க்கையின் செம்மைத் திறத்திற்கு ஒரு தூண்டா விளக்காய் அமைந்தது. ஐந்து பகுதிகளைத் தன்னகத்தே கொண்ட இந் நூல் ஒரு தமிழ்க் குடும்பத்தை முன்னோடியாகக் கொண்டு பின்னப்பட்ட கற்பனைக் கதை. உள்ளீடற்ற வெளிப் பூச்சிலும், பகட்டிலும், மினுக்கிலும் வாழ்கின்ற மேட்டுக்குடி மக்களுக்கு இந் நூலின் கருத்துகள் ஒவ்வாதிருக்கலாம். எதற்கும் வேலையாட்களை நம்பித்தான் வீட்டுவேலை செய்ய இயலும் என்கின்ற சோம்பேறித்தனத்திற்கு இந்நூலில் இடமில்லை. கற்றலும் அதற்குத் தக நிற்றலும் நிறைந்த பண்பாக அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. காதலின் திறமும் பெண்டிர் கடமையும் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கும் ஏனைய சிறப்பியல்புகளாகும்.

பண்டு [illegible]டு இன்று வரை காதலின் வன்மையினைப் பாடாத கவிஞரில்லை. அதனைப் பற்றிப் பேசாத மொழிகள் இல்லை. மொழி, இனம், காலம் ஆகிய இன்ன பல வேறுபாடுகளைக் கடந்து நின்று தனது ஆளுகையினை உலகளாவச் செய்யும் ஓர் இயற்கையான சக்தியே காதலாகும் மன்னர்களையும், மாவீரர்களையும் மண்டியிடச் செய்த இவ்வுலகியற் காதல் பற்பல உலக மா காவியங்களின் உட்கிடக்கை. அனலிடை வெந்தும், புனலிடை மூழ்கியும் ஐம்புலக் கட்டறுப்பேம் என்று சூளுரை பகர்ந்த மாமுனிவர்களும் இதற்குத் தலை பணிந்த வரலாற்றைப் புராணங்கள் பறை சாற்றுகின்றன துறவியாக வாழ்ந்த திருத்தக்க தேவரும் சீவகனின் காதல் மணங்களைச் சுவைபடப் பேசுகிறார். காதலின் பல்வேறு கோணங்களைச் செகப்பிரியரின் நாடகங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆங்கில இலக்கியத்தில் 'சானெட்' (sonnet) என்கிற பதினான்கு வரிப் பாடலைப்

பதினேழாம் நூற்றூண்டு வரை காதலுக்காகவே ஒதுக்கி வைத்திருந்தனர். தலைவன், தலைவியர் தம்முள் உணர்ந்து மகிழும் தலை சிறந்த அன்பினைக் 'காமம்' என்றும், 'காதல்' என்ற சொல்லை அன்பினைக் குறிக்கும் பொதுச் சொல்லென்றும் ஆன்றோர் வழங்கியுள்ளனர்.

'காமங் கலந்த காதல் உண்டெனின்
நன்றுமன்; அது நீ நாடாய் கூறுதி'

என்ற அகநானூற்றுப் பகுதியும் இதனையே வலியுறுத்துகிறது. தெவிட்டாத இக் காதலின் திறத்தினைப் பற்றி வள்ளுவப் பெருந்தகையும்,

"அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழையார் மாட்டு" என்ற

குறட்பாவால் விளக்குவர். பாரதிதாசனே பிறிதோரிடத்தில்

"காதல் அடைதல் உயிரியற்கை-அது
கட்டிலகப்படும் தன்மையதோ" என்று கேட்பார்.

மயக்கும் பேரழகால் தரணியாண்ட தானைத் தலைவர்களையும் நிலைகுலையச் செய்த எகிப்தியப் பேரழகி கிளியோபாத்ரா' கலந்து பழகிய மற்றையோரிடத்தே கசப்பினையும், சலிப்பினையும் கொடுக்கும் ஏனைப் பெண்டிரைப் போலன்றி, தான் விரும்புமிடத்தில் தணியாத வேட்கை உண்டு பண்ணும் திறம் படைத்தவள்' என்கிறார் செகப்பிரியர். அந்த எகிப்தியப் பேரழகியின் ஏனைக் குண நலனை ஒதுக்கிக் காதலின் தனித்தன்மையை எடுத்து நோக்கின், பாரதிதாசனும் செகப்பிரியரும் தோள்பிணைந்து நிற்கிறார்கள். எளிய தமிழில் அவ்விளிய கருத்தினைத் திறம்பட எடுத்துரைக்கும் கவிஞரின் தலைவன்,

"ஒன்றென்றும் சில நாளில் தெவிட்டிப் போகும்
அன்றன்று புதுமையடி, தெவிட்டலுண்டோ?,,

கவிஞரின் தலைவியோ கண்முடித் தனமான காதலை ஒதுக்கியவள்; குடும்பப் பணிகளை முடிந்து விட்டுக் கணவனைக் காண வருகிறாள் அயர்ந்து உறங்கி விட்டான் என்றெண்ணி,

'அண்டையிலே மங்கை போய் 'அத்தான்' என்றாள்.
அத்தானு தூங்கிடுவான் 'உட்கார்' என்றான்."

கவிஞரின் சிந்தனையோட்டம் காதலைக் கண்முடித்தனமாகப் பாராட்டவில்லை. காதலுக்கு முன்னால் கடமைக்கு முதலிடம் கொடுக்கிறது

''அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்
இதுவரைக்கும் பொது நலத்துக் கென்ன செய்தோம்?
என்பதைநாம் நினைத்துப் பார்ப் பதுவுமில்லை''

என்று கடமை உணர்ச்சியினைத் தூண்டி விடுகிருள் தலைவி. காதலின் திறத்தோடு கடமையினையும், தக்க நேரத்தில் அளவோடு அறிவுறுத்துகின்ற தலைவியையும், அதனைப்படைத்த கவிஞரையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

முதுக்குறைந்து மணப்பருவம் எய்தி பின் குடும்பத்தலைவியான பெண்டிருக்குக் காதல் வாழ்வு மட்டும் தொடங்கவில்லை. கடமை வாழ்வும் அத்துடன் இரண்டறக் கலந்திருக்கிறது. கவிதைத் தலைவியின் பொறுப்புணர்ந்த வாழ்வின் ஒவ்வொரு செய்கையிலும் இக் கருத்தின் நிறைவு காணக் கிடைக்கிறது.

''ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்ருேனாக்குதல் தந்தைக்குக் கடனே''

என்பது புறம். குழந்தையைப் பெறுகின்ற பொறுப்பு அன்னைக்கும், சான்ருேனாக்கும் கடமை தந்தைக்கும் ஈண்டு வலியுறுத்தப்படுகின்றன. தாயன்பினையும் தகர்க்கும் தன்மை கல்லாமைக்கு உண்டு என்ற கருத்தும்

''பிறப் போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்''

என்று அறிவிக்கப்படுகிறது.

இளமைக் காலந்தொட்டு குழந்தை தாயிடம் பழகுகின்ற நேரத்தைவிடத் தாயிடம்தான் அதிகம் பழகும். எனவே சிறந்த பல நல்லியல்புகள் குழந்தையிடம் அமைவதற்குத் தாய்தான் பெரிதும் காரணமாக வேண்டும் என்பது இற்றைநாட் கருத்து. பெண்டிரின் கடமையினைக் காலப்போக்கிற்கேற்பக் கவிஞரும் வற்புறுத்துகிருர். சீவிமுடித்துச் சிங்காரித்த குழந்தைகளை உணவு அருந்துவித்த பின்னர் ஒருங்கே அமர்த்திப் பாடம் பயிற்றுவிக்கிருள் அன்னை. தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திளைத்த கவிஞரின் உள்ளம் அந்தக் காட்சியைக் காண்கிறது. மூவாத் தமிழ் வளர்த்த முச்சங்கச் சான்ருேரும், செந்தமிழ்ச் சுவையும் அங்கே நிழலிடத் தோன்றுகின்றன.

"அவள் வாத்திச்சி; அறைவீடு கழகம்
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை; அள்ளி
விழுங்கினர் பிள்ளைகள் வேளையாயிற்றே!"

பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞன் மில்டன் குடும்பக்கலையும், கணவருக்குப் பணி செய்தலையும் தவிர இல்லறப் பெண்டிருக்கு இனியன வேறெவையும் இல்லை என்று அறுதியிட்டுரைக்கிறான். புரட்சிக் கவிஞரோ மில்டனையும் பொன்முடியாரையும் விஞ்சி, குழந்தையின் அறிவுக் கண்களைத் திறக்க வேண்டிய பெரும் பொறுப்பும் அவர் தம்மைச் சார்ந்தது என்பதைக் குறிப்பால் வலியுறுத்தற்குப் பெண் கல்வியினைப் போற்றுகிறார். பெண் கல்வியின் அவசியம் எதிர்மறையாலும் வலியுறுத்தப்படுகிறது.

"கல்வியில் லாதபெண்கள் களர்நிலம்! அந்நிலத்தில்
புல் விளைந் திடலாம் நல்லபுதல்வர்கள் விளைதல் இல்லை'

கல்லாத பெண்டிரும் குழந்தைப் பேறு அடைவர். அது உலகியற்கை ஆனால் அவர்தம் குழந்தைகட்குப் பேதைமை தவிர்க்கும் வரன் முறைக் கல்விக்கு வாய்ப்பில்லை என்பதை எண்ணி, 'நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை' என்று கூறும் நயம் பாராட்டத்தக்கது.

குழந்தையின் வளர்ப்பில், தாய்க்கும் குழந்தைக்கும் இயைந்துள்ள உள்ளத் தொடர்பினைக் கவிஞர் நயம்பட விளக்குகிறார். பாலூட்டப் பெற்ற குழந்தையை மார்போடணைத்து ஒரு கையைக் குழந்தைமேல் வில்லைப்போல் வளைய இட்டும், பிறிதொன்றைத் தலைக்கணையாய் வைத்தும் தாய் அயர்ந்து தூங்குகிறாள். அவள் தூக்க மயக்கத்தில் சிறிதளவே புரண்டாலும் "உருளையின் கீழ் மலர்போல் ஒழியுமே என் குழந்தை" என்றெண்ணி கணவன் மனைவியின் தூக்கத்தைக் கலைத்தற்கு முயல்கிறான். அருகே கிடந்த மலர்ச் செண்டினை எடுத்துக் குழந்தை மீது போடுகிறான். கண்ணயர்ந்து உறங்கும் மனைவியின் கைகள் தாமாகவே அதனை எட்டித் தள்ளி விட்டன. தாய்மையின் ஆற்றலை உணர்ந்த தலைவன்

"தலைமட்டும் இரண்டென்றாலும்
குழந்தையும் தாயும் ஒற்றைக்
குலையே யாம்; உயிரும் ஒன்றே!
உள்ளத்தின் கூறும் ஒன்றே"

என்று கூறி மனம் தெளிகிருன். பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்கத தயங்கிக் கூலிபேசித் தாயமர்த்தும் இற்றைநாள் அன்னையர் குடும்ப விளக்கின் 'மக்கட்பேறு' என்ற பகுதியை அவசியம் படித்தறிதல் வேண்டும். தாய்மையிலே கிடைக்கும் அன்பு ஈடு இணையற்றது; அதனை மறந்தவர்கள் அன்பினை மறந்தவர்களாவர். இதுபோன்ற சிறந்த பல கருத்துகளைக் கூறுகின்ற கவிஞர் பெண்களை மனித உற்பத்தி செய்யும் எந்திரமாகக் கருதவில்லை. காலத்திற்கேற்பக் கருத்தடை பற்றியும் பேசுகிருர்.

''வேண்டும் அளவே
விளைத்து, மேல்-வேண்டாக் கால்
சேர்க்கை ஒழித்துக்
கருத் தடையேனும் செய்க.''

தண்டுன்றி நடக்கும் தள்ளாத காலத்திலும் கூடக் கணவனும் மனைவியும் நிலைத்தகாதலும் நீடிய அன்பும் கொண்டு ஒருங்கிணைந்து வாழவேண்டும் என்று தலைவனுக்கு அறிவுறுத்தும் நற்றிணைப்பாடல் ஒன்று உண்டு.

''அண்ணாந்தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த
தன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பிலும்
நீத்த லோம்புமதி பூக் கிழவோயே''

சங்க இலக்கியப் பாடல்களில் தோய்ந்த புரட்சிக் கவிஞர் தம் நூலின் இறுதிப் பகுதியில், வயது மிக்கிருந்தாலும் அன்பு குறையாத இரண்டு உள்ளங்களைப் பற்றி அழகுபடப் பேசுகிருர்.

பேரன் கொணர்ந்த சுவைமிக்க பொரி மாவைத் தாம் உண்ணாத தாத்தா அதனைத் தலையணைக்குக் கீழ் மறைத்து வைக்கிருர். யாருக்கும் தெரியாமல் அதனைப் பாட்டிக்குக் கொடுக்க வேண்டும் என்பது அவர் ஆவல். கொஞ்ச நேரம் கழித்து அதனை எடுத்துப் பாட்டியிடம் கொடுக்கப் புகும்வேளை மருமகள் வந்து விடுகிருள். எதையோ கூறி எப்படியோ நிலைமையைச் சமாளித்துக் கொள்கிருர் பெரியவர். நூற்றைந்து ஆண்டுகளாகத் தாம் நின்று நிலவி வாழ்கின்றமைக்குத் தம் மனைவியே காரணம் என்று கூறி

''எது எனக் கின்பம் தல்கும்?
இருக்கின்ருள் என்பதொன்றே''

என்று மீட்டும் அவளைப்பற்றிக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கிருர்.

ஒரு நாள் இரவு மணி பத்தாயிற்று. படுக்கைக்குச் சென்ற தொண்டு கிழவர் உறங்கி விட்டாரா என்று அறிய கிழவி வருகிருள். இதனைக் கவிஞர் நயமுறக் கூறும் பகுதி இதோ:

''அரு கரு கிருவர்; மிக்க
அன்புண்டு; செயலே இல்லை''

என்று வயதான காலத்திலும் கணவன் மனைவியர் தம் கருத்தொருமித்த அன்பினைச் சுட்டிக் காட்டுகிருர்.

இந்நூலில் பல்வகையானும் ஆழ்ந்து உணர்தற்குரிய நல்ல கருத்துகளை எளிய தமிழில் கவிஞர் பெய்திருக்கிருர். தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலைத் தக்காங்கு பயில்வதோடு இற்றை நாள் மனையியற் கல்லூரிகளில் பாடமாக வைப்பின் மாணவியர் உலகிற்குப் பெருந் தொண்டு செய்வதாகும்.

# செய்திக்கதிர்

## பெரியார் மாவட்டம் பிறக்கிறது:

செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாள் ஈரோடு நகரினைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த பெருந்துறை. ஈரோடு, சத்தியமங்கலம், கோபி ஆகிய சிறுநகரங்கள் இந்தப் புதிய அமைப்பில் அடங்கும். தமிழ் நாட்டில் மக்கள் தலைவரின் பெயரால் ஒரு மாவட்டம் அமைக்கப்படுவது இதுதான் முதல் தடவை. அண்டை மாநிலமான ஆந்திராவில் காலஞ் சென்ற பிரகாசம் என்ற தலைவரின் பெயரால் ஒரு மாவட்டம் இருப்பது ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கது. ஈரோட்டில் நடந்த விழாவில் மாநில முதல்வர் எம்.ஜி.ஆர். பங்குகொண்டு சொற்பொழிவு ஆற்றியதோடு, நிகழ்ச்சியில் அவருடைய 18 அமைச்சர்களில் பதின்மூன்று பேர்கள் கலந்து கொண்டு வாழ்த்துறை வழங்கியுள்ளனர். தமிழ்மொழியினைப் பாதுகாக்க உதவி செய்தோருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் மாத ஊதியம் வழங்கப்படும் என்று முதல்வர் தமது பேச்சில் கூறியுள்ளார். இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்தோருக்குக் கொடுக்கப்படும் ஊதியமாக இதனை கருதி விடக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தி எதிர்ப்பும் ஒருவகையில் எதிர்மறைமுகத்தான் வருகின்ற தமிழ்ப் பாதுகாப்புத்தான். இந்த மேடைப் பேச்சினைச் செயற்படுத்தும்போதுதான் முதல்வரின் பேச்சு பற்றிய விளக்கம் நன்ருகப் புரியும். பெரியார் மாவட்டம் பிறந்து விட்டது. கீழ் முகவை மாவட்டத்தை காலஞ் சென்ற முத்துராமலிங்கத் தேவர் பெயரால் அழைப்போம் என்று சொன்ன முதல்வரின் பேச்சு எப்போது நடைமுறைக்கு வரும் என்று தெரியவில்லை.

## அன்னை தெரசா

உலகம் தழுவிய மிக உயர்ந்த தொண்டினைக் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகச் செய்து அமைதிக்கான நோபெல் பரிசினைப் பெற்றிருக்கிருர் அன்னை தெரசா. ஜாதி, மொழி, இனம் கடந்த நிலையில் இந்தியக் குடியுரிமை பெற்று 69-வயதிலும் கல்கத்தாவில் அழுகு தொழு நோயருக்கும், அனாதைகளுக்கும் இவர் அரும்பணி புரிவதை இன்று உலகம் பாராட்டுகிறது. அல்பேனியப் பெற்ரேருக்கு யூகோஸ்லாவியாவில் பிறந்த ஆக்னஸ் 18-ஆவது வயதில் டார்ஜிலிங்குக்கு

வந்து துறவுபூண்டார். இருபதாண்டு காலம் கல்கத்தாவில் ஆசிரியையாகப் பணி புரிந்தார். ஐந்து ரூபாய்க் கையிருப்போடு பள்ளிக்கு அருகே சேரியில் தனது தொண்டினைத் துவங்கினார். இன்று அவருடைய அறக் கட்டளையின் கிளை நிலையங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா, டான்சானியா, லிபியா ஆகிய நாடுகளில் பரவியுள்ளன. நேரு நினைவுப் பரிசு, மக்சேசே பரிசு உள்ளிட்ட ஏராளமான பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளார். தொழு நோயருக்கும், அனாதைகளுக்கும், சிறுவர்கட்கும், மரணம் அடைவோருக்கும் தாம் செய்யும் பணியை சமூகத் தொண்டு என்று அவர் கூறுவதில்லை. அவையெல்லாம் இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்றே குறிப்பிடுகிறார். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பதே அவர் இயல்பு. நோபெல் பரிசான 15 இலட்சத்தையும் தனது அறக் கட்டளைக்கே பயன்படுத்துவேன் என்று கூறுகிறார் அன்னை. இவர் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் இலவசமாகப் பயணம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. நகரங்களில் ஒரு நரகம் என்று கூறப்படும் மக்கட்தொகை மண்டிய கல்கத்தாவில் அன்னை தெரசா ஒரு நடமாடும் தெய்வமாக விளங்குகிறார். ஏழு ஆண்டுகளுக்கு முன் அன்னையின் தொண்டினை இங்கிலாந்தில் தொலைக்காட்சியில் வெளிக்கொணர்ந்த பெருமை மக்கரிட்ஜ் எனும் பிரிட்டிஷ் திருபரைச் சாரும்.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன் விழா :**

தமிழிசைக்குப் புத்துயிருட்டிய செட்டி நாட்டரசர் தோற்றுவித்ததே அண்ணாமலைப் பல்கலைக் கழகம். ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி டிசம்பர் திங்கள் 6, 7 ஆகிய நாட்களில் பொன்விழா கொண்டாடப் பெற்றது. குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே டெல்லியிலிருந்து வந்திருந்தார். மாநில ஆளுநர் பட்வாரி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார். பொன்விழாவினை ஒட்டிய சிறப்பு பட்டமளிப்பு விழா இரண்டாம் நாள் நடைபெற்றது.

ஆச்சார்ய கிருபளானிக்கு அவர் நேரில் வாராமலேயே பட்டம் கொடுக்கப்பட்டது. மதுரை சோமு, ம பொ. சி, பன்மொழிப் புலவர், வ. சு. ப. மாணிக்கம், டி. எம். பி. மகாதேவன் ஆகியோர் ஏனைய குறிப்பிடத் தகுந்தோராவர். சென்னை மாநில முதல்வருக்குப் பட்டம் கொடுக்க இருந்ததாகவும், அதை அவர் வேண்டாம் என்று கூறியதாகவும் தெரிகிறது. முத் தமிழ் வித்தகர் லெ. ப. கரு. இராமநாதன்

செட்டியாருக்கு பட்டம் அளிக்காதது ஒரு பெருங் குறை என்று விழாவிலேயே பலர் பேசிக் கொண்டார்கள். விழா சிறந்த முறையில் விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது. சிறந்த பல்கலைக் கழகம் ஒரு குடும்பம் என்று சொல்வது இற்றை நாள் வழக்கு. அதற்கு எடுத்துக் காட்டாக இருந்தது இந்த நிகழ்ச்சி. பழைய மாணவர் பலர் தத்தம் குடும்பத்துடன் வந்திருந்தது குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சியாகும். பல்கலைக் கழக வளர்ச்சிக்கென்று பல்வேறு வகையானும் நன்கொடை பெறப்பட்டாலும், ராஜா. சர். முத்தையா செட்டியாரும் தமது நன்கொடையினை வழங்கியது பாராட்டத் தக்க தாகும்.

பெருந் தலைவர் மறைவு :

தமிழகத்து அரசியல் வானில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒளி வீசிக் கொண்டிருந்த மக்கள் தலைவர் பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் செப்டம்பர் திங்கள் ஆறும் நாள் சென்னையில் உயிர் நீத்தார். அவர் நிறுவிய உசிலம்பட்டி கலைக் கல்லூரியின் திடலில் மறு நாள் அவர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. மாநில அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈமச் சடங்கில் கலந்து கொண்டனர். காலஞ் சென்ற தேவர் அவர்கள் இரு முறை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், ஐந்தாண்டு காலம் டில்லி பாராளுமன்ற உறுப்பினராகவும் பணி புரிந்தவர். ஆன்மீகத் தலைவராக விளங்கிய பசும் பொன் முத்து ராமலிங்கத் தேவரைப் போன்றே ஒரு முறை ஒரே சமயத்தில் பாராளு மன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். தமிழகத்து அரசியல் தலைவர்கள் இவரிடம் கொண்டிருந்த மதிப்பு அளவிடற் கரியது. தமிழகத்தில், குறிப்பாகத் தென மாவட்டங்களில் பார்வார்டு பிளாக் ஒரு அரசியல் கட்சியாக நிலைத்திருப்பதற்கு, தேவர் அவர்களின் தொண்டு அடிப்படையாய் அமைந்திருந்தது. அரசியலில் கருத்து வேறுபாடு கொண்டோரிடமும் இன்முகத்தோடும் அன்போடும் பழகுகின்ற அவர் தம் பண்பும் பாங்கும் பாராட்டத் தக்கனவாய் இருந்தன. அரசியல் தலைவராக விளங்கினாலும், ஆன்மீகத்தில் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருநதார். சுவாமி சிவானந்தர் நிறுவிய தெய்வ நெறிக் கழகம் மதுரையில் விழா நடத்தும் போது, தாம் எங்கிருந்தாலும் தவறாது வந்து அந் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றுவது அவர் வழக்கம்.

## பழைய ஏட்டுச் சுவடிகள்

நாடொறும் அலைந்து செல்லரித்துப் போன ஏடுகளைத் தேடிக் கொணர்ந்து அச்சேற்றிய பெருமை தமிழறிஞர் உ. வே. சா., சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோரைச் சாரும். இதுவரை வெளியிடப்படாத நூற்றுக்கும் மேலான ஏட்டுச்சுவடிகளை அச்சுக்குக் கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மதுரையில் 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அரசு இப்பணியை மேற்கொண்டுள்ளது. இந்த அரிய பணிக்கு சில இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது. வெளியிடப்பட இருக்கும் இப் புதிய நூல்களில் சில சரசுவதி மகால் நூலகத்திலிருந்து வர இருக்கின்றன. வருங்காலத்தில் ஏட்டுச் சுவடிகளே இல்லாது போனாலும் போகலாம். ஏனென்றால் அச்சுக்கு வராத அனைத்துப் பிரதிகளும் இனி எழுத்து வடிவில், பேப்பரில்தான் இருக்கும். எனவே இவற்றைப் பாதுகாக்கின்ற ஆவணக் காப்பகங்கள் (Archives) உரிய முறையில் அரசினரால் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## வேங்கடவன் அருள் அமுது

திருப்பதி வேங்கடவனின் அருள் பிரசாதம் சென்னை, பெங்களூர், ஐதராபாத் ஆகிய இடங்களில் வழங்கப்படும் என்று தெரிகிறது. ஐந்நூறு ரூபாய் முதல் ஐயாயிரம் வரை யாரேனும் ஆண்டவனின் பெயரால் வைப்பு நிதி கொடுத்தால், அத் தொகையிலிருந்து வரும் வருடாந்திர வட்டி ஏழைகளுக்கு உணவாக அளிக்கப்படும். அன்னதானம் நடக்கின்ற அன்று, வைப்பு நிதி வைத்தோர் நேரில் வந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம். எப்படியாயினும் திக்கற்ற அனாதைகளுக்கு உணவு கொடுக்கச் செய்யப்படும் இம் முயற்சி பாராட்டத் தகுந்தது. உடலுரம் உள்ளோரும், சோம்பேறிகளும் பிச்சைக்காரர்களாக மாறி இந்த நல்லறத்தின் பயனைத் துய்த்து விடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்கு வேண்டிய பண உதவி அளிக்குமாறு போப்பாண்டவரைத் திருப்பதி அறங்காவல் குழு கேட்டுக் கொண்டுள்ளது. சாதி சமயம் கடந்து தொண்டு புரிகிறோம் என்று காட்டுவதற்கோ இம் முயற்சி கேட்கத் தோன்றுகிறது!

பாரதி பற்றிய ஒளி—ஒலிக்காட்சி

சென்ற செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாள் பாரதி பற்றிய ஒளி—ஒலிக் காட்சி ஒன்றினை திரு. பாலபழனூர் துவக்கி வைத்தார். பாரதி ஒரு விடுதலைக் கவிஞன் என்றும் தமிழிலக்கியத்துக்கு ஒரு விறுவிறுப்பையும், புதுமையினையும் ஊட்டியவன என்னும் குறிப்பிட்டார். இந்த ஒளி—ஒலிக் காட்சியினை இந்திய அரசின் திரைப் படப் பிரிவினர் தயாரித்துள்ளனர். பாரதியின் இளமைக் காலமும், அவர் வாழ்வில் நிகழ்ந்த சில சிறப்பு நிகழ்ச்சிகளும் இக்காட்சியில இடம் பெற்றுள்ளன.

சென்னையிலும் பாரதி விழா நடைபெற்றது. மாநிலச் செய்தி அமைச்சர் ஆர். எம். வீரப்பன் பாரதியை ஒரு சாதி ஒழிப்புக் கவிஞனாகக் காட்டத் தமிழகம் தவறிவிட்டது என்று குறிப்பிட்டார். குஜராத்தி மொழியில் பாரதி பாடல்களை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்கிறேன் என்று ஆளுநர் கூறினார். இது சந்தர்ப்பங்களை ஒட்டி வருகிற கருத்தாகக் கூட இருக்கலாம். பாரதியை பிற இந்திய மொழிகளில் பெயர்த்தெழுத வேண்டுமாயின், அந்த நல்ல முயறசியினை தேசீயப் புத்தக நிறுவனம் (NBT) காலத்தால் செய்ய வேண்டும்.

அமெரிக்கச் செய்தி நிறுவனம் :

தமிழ்ச் சங்க நூலகத்திற்கு பதினைந்து ஆங்கில நூல்களை சென்னையில் உள்ள அமெரிக்கச் செய்தி நிறுவனத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இதனை அனுப்பிய திரு. கில்ட்னர் நமது பாராட்டுக்கு உரியவர்கள். தத்துவம், அரசியல், நாடகம் போன்ற பல்வேறு செய்திகளைப் பற்றிய இந்நூல்களில் ஒன்று ஆங்கிலச் சொற்களின் வரலாற்றினைக் கூறுவதாக உள்ளது. தமிழில் இது போன்ற நூற்கள் வருவதற்கு இந்நூல் ஒரு முன்னோடியாக இருக்கும் என்று நம்பலாம்.

சமூகத் தொண்டு பற்றிய விளக்கம் :

அண்மையில் தீபம் பார்த்தசாரதி அவர்கள் மதுரையில் ஆர். எஸ். எஸ். பற்றிய ஒரு விளக்கம் அளித்ததை தமிழன்பர்களின் கவனத்துக் கொண்டு வர விரும்புகிறோம். அண்மையில் தினமணிக்

கதிர் ஆசிரியராகப் பொறுப்பு ஏற்றிருக்கும் திரு. நா. பார்த்தசாரதி நமது பாராட்டுக்குரியவர்கள்.

''இந்தச்சங்கத்தை வகுப்புவாதச் சங்கம் என்கிருர்கள். ஒரு கிறிஸ்தவ அமைச்சரோ, முஸ்லிம் பிரமுகரோ அவரவர் மகாநாட்டில் பேசினுல் அது மைனுரிட்டிகளின் உரிமை என்கிருர்கள். ஹிந்துக்களே ஒன்றுபடுங்கள் என்று இந்த இயக்கம் கூறும் போது இவை வகுப்புவாதம் என்கிருர்கள். ஹிந்துக்கள் ஒன்றுபடுவதிலே என்ன தவறு இருக்கிறது. தொன்றுதொட்டு சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்துவரும் ஹிந்துக்களின் மீது மட்டுமே நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன.

ஆர். எஸ். எஸ். உடற்பயிற்சி நடத்துவது அபாயம் என்கிருர்கள். ஆர். எஸ். எஸ். தொண்டர்கள் பாரதி கூறியபடி அறிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டுமாருத உடலுறுதி கொள்ள உடற்பயிற்சி செய்கிருர்கள். நல்ல திட்டமான உடலுடன் தாய்நாட்டிற்காக வாழ்வது தனி மனிதனின் உரிமை. இது அபாயம் என்ருல் பல்லாயிரக்கணக்கான பள்ளிகளிலே, கல்லூரிகளிலே லட்சக்கணக்கான மாணவர்கள் டிரில் செய்வதும் ''பிஸிகல் ட்ரெய்னிங் பெறுவதும் அபாயம்தானே! இந்த நல்ல உடலிலே இருக்கும் ரத்தத்தை நமது ஜவான்களுக்கு பாகிஸ்தான், சீனு, பங்களாதேஷ் போரின்போது கொடுத்துஉதவிய தீரர்கள் ஆர். எஸ். எஸ். காரர்கள்.

ஆர் எஸ். எஸ். ஹிந்துராஷ்டிரம் அமைக்க விரும்புகிறதென குற்றம் சாட்டுகிருர்கள். ஹிந்துராஷ்டிரத்திலே முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் வாழமுடியாது எனப் பொய்ப்பிரசாரம் செய்கிருர்கள். ஒரு தென்னைத் தோப்பிலே ஓரிரு மாமரங்களும் சில கொய்யாமரங்களும் இருந்தாலும்கூட மிகுதியாக தென்னை மரங்கள் இருப்பதால் அதைத் தென்னத்தோப்பு என்கிருேம். இதனுல் மற்ற மரங்கள் அங்குஇல்லை என்பதாகிவிடாது. வெற்றிலை பாக்குக் கடையில் பத்திரிகை முதல் சோப் வரை பல பொருள் கிடைத்தாலும் முக்கியத்தாலும் வழக்கத்தாலும் அதை வெற்றிலைபாக்குக்கடை என்கிருேம். அது போலவே பெரும்பான்மை ஹிந்துக்கள் உள்ள தேசத்தை அவர்களின் பெரும் பான்மையால் வழக்கத்தால் ஹிந்துராஷ்டிரம் என்பதிலே தவறில்லை. அங்கு முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடமுண்டு. ஹிந்து என்ற பதத்தை இந்த தேசத்தில் கலாசாரப் பின்னணியில் பொருள் கொள்ள வேண்டும்.

ஆர். எஸ். எஸ். ஸில் உள்ள இளைஞர்கள் முதியவர்களின் மனப்பக்குவத்துடனும் முதியவர்கள் இளைஞர்களின் உற்சாகத்துடனும் இருப்பது பதவி ஆசைபிடித்த அரசியல்வாதிகள் கண்ணை உறுத்து-கிறது. இப்படி ஒரு இயக்கம் ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ தனது தேசத்திற்காகப் பாடுபடுமானால் அரசே கோடிக்கணக்கில் மானியம் கொடுக்கும். ஆனால் இங்கோ ஆர். எஸ். எஸ் மீது அரசு அநியாய பழி போடுகிறது. தன்னலமற்ற பணி, தேச சேவை, கட்டுப்பாடு கொண்ட இந்த இயக்கம் வளர பொதுமக்கள் உதவ வேண்டும்''.

# சங்கச் செய்திகள்

1979-80-ல் கல்லூரிகளுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் மேல்நிலைப்பள்ளிகளுக்கும் நடைபெற இருக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் 1978-79-ல் நடைபெற்ற தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரங்கள் :

1978-79-ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளையும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகக் கல்லூரிகளையும் சார்ந்த புகுமுக வகுப்பு இளங்கலை முதலாண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குரிய ரொக்கப் பரிசுகள் அனுப்பப் பட்டு விட்டன,

மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிகளிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களை கலந்து கொள்ளச் செய்து வரும் கல்லூரி முதல்வர்களுக்கும் தமிழ்த்துறைப் பேராசிரியர், துணைப் பேராசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற தமிழன்பர்களுக்கும் எங்களது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1978-'79-ஆம் ஆண்டில், மதுரைத் தமிழ்ச் சங்கம் உயர்நிலைப்பள்ளி 10-ஆம் வகுப்பிற்கும், சென்னை, மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்கும் தேர்வு நடத்தியதில் கீழே குறிப்பிட்டுள்ள மாணவர்கள் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

## உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பில் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

| வ. எண். | மாணவர் பெயரும் பள்ளியின் முகவரியும் | மதிப்-பெண் | பரிசு விவரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | சீ. சத்தியபாமா (4388)<br>அரசினர் உயர்பள்ளி,<br>சுப்பிரமணியபுரம்,<br>மதுரை | 182/200 | முதற் பரிசு | ரூ. 100/- |
| 2. | தி. லலிதா (16001)<br>சிறுமலர் மகளிர் உயர்பள்ளி<br>நாகமலை, மதுரை - 19. | 181/200 | 2-ஆம் பரிசு | ரூ. 50/- |
| 3. | சு. சாந்தி (19422)<br>சீதாலட்சுமி மகளிர்<br>உயர்பள்ளி, திருநகர்,<br>மதுரை-6. | 177/200 | 3-ஆம் பரிசு | ரூ. 15/- |
| 4. | ப. திலகம் (19462)<br>சீதாலட்சுமி மகளிர்<br>உயர்பள்ளி, திருநகர்,<br>மதுரை-6. | 177/200 | " " | ரூ. 15/- |

மூன்றும் பரிசுத் தொகை ரூ. 25/- உடன் ரூ. 5/- சேர்த்து சம மதிப்பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 15/- வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | எம்.கே. முருகன்பாபு (19693)<br>சௌராட்டிரா உயர்பள்ளி,<br>மதுரை-9. | 175/200 | ஆறுதல் பரிசு | ரூ. 10/- |

| | | | |
|---|---|---|---|
| 6. | எஸ். அலர்மேலு (7908)<br>அரசினர் உயர்பள்ளி,<br>வடுக முத்தம் பட்டி,<br>குரிசிலாப்பட்டு. | 174/200 | ஆறுதல் பரிசு ரூ. 10/- |
| 7. | எஸ். பிரபாவதி (5692)<br>சின்னூத்தா அரசினர் மகளிர்<br>உயர்பள்ளி,<br>முத்தியால் பேட்டை. | 173/200 | " " ரூ. 10/- |
| 8. | ஜி. தாமரைச் செல்வி (5707)<br>சின்னூத்தா அரசினர் மகளிர்<br>உயர்பள்ளி,<br>முத்தியால் பேட்டை. | 173/200 | " " ரூ. 10/- |
| 9. | வி. சாருமதி (8056)<br>இந்து மேனிலைப்பள்ளி,<br>ஆம்பூர். | 171/200 | " " ரூ. 10/- |
| 10. | ஆர். லதா (10240)<br>முஸ்லிம் மேனிலைப்பள்ளி,<br>அபிராமம். | 171/200 | " " ரூ. 10/- |
| 11. | வி. கணேசன் (13558)<br>பி.கே.என். மேனிலைப்பள்ளி,<br>திருமங்கலம். | 171/200 | " " ரூ. 10/- |

## சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

### புகுமுக வகுப்பு

| வ. எண். | மாணவர் பெயரும் பள்ளி முகவரியும் | மதிப்பெண் | பரிசு விவரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 12. | பெ. விசயலெட்சுமி (548)<br>அரசு கலைக் கல்லூரி,<br>திருச்சி. | 143/200 | முதற் பரிசு | ரூ. 35/- |

13. சி. கேசவன் (1457) 143/200 முதல் பரிசு ரு. 35/-
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு.

14. அ. அனிதா (2340) 143/200 " " ரு. 35/-
எம்.ஆர். அரசு கலைக் கல்லூரி
மன்னார்குடி.

முதல் பரிசுத் தொகை ரு. 100/- உடன் ரு. 5/- சேர்த்து சம மதிப்பெண் பெற்ற மூவருக்கும் ரு 35 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

15. கே. தியாகராசன் (1004) 136/200 2-ஆம் பரிசு ரு. 50/-
திருவள்ளுவர் அரசு கலைக்
கல்லூரி, இராசிபுரம்.

16. கே. அனுராதா (9) 135/200 3-ம் பரிசு ரு. 25/-
பிராவிடன்சு மகளிர் கல்லூரி,
குன்னூர்.

## பட்ட வகுப்பு முதலாண்டு

17. ஆர். சித்தார்த்தன் (5097) 66/100 முதற் பரிசு ரு. 100/-
விவேகானந்தா கல்லூரி
மயிலை, சென்னை-4.

18. பி. சாந்தி (5018) 57/100 2-ம் பரிசு ரு. 50/-
அ.அ. அரசு கலைக் கல்லூரி
வட சென்னிமலை.

19. ஜெ. பிரபாகரன் (5046) 47/100 3-ம் பரிசு ரு. 25/-
மஜ்ஹருல் உலூம் கல்லூரி
ஆம்பூர்.

## பட்ட வகுப்பு இரண்டாமாண்டு

1 கே. கருப்பையா (6298) 72/100 முதற் பரிசு ரு. 100/-
விவேகானந்தா கல்லூரி
மயிலை, சென்னை-4.

2. என். லியாகத் அலி (6026) 70/100 2-ஆம் பரிசு ரூ. 25/-
அரசு ஆண்கள் கலைக் கல்லூரி
உடுமலைப்பேட்டை.

3. எஸ். மூர்த்தி (6145) 70/100 „ „ ரூ. 25/-
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு.

இரண்டாம் பரிசுத்தொகை ரூ. 50/-ஐ சம மதிப்பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 25/- விதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

4. எஸ். கோவிந்தராஜ் (5007) 67/100 3-ஆம் பரிசு ரூ. 25/-
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

## மதுரை பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

### புகுமுக வகுப்பு

| வ. எண். | மாணவர் பெயரும் கல்லூரி முகவரியும் | மதிப்பெண் | பரிசு விவரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | தொ. இ. சேதுராம் (5623) சௌராட்டிராக் கல்லூரி, மதுரை. | 157/200 | முதற் பரிசு | ரூ. 100/- |
| 2. | முகம்மது கனிபா (3795) சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, பாளையங்கோட்டை. | 148/200 | 2-ஆம் பரிசு | ரூ. 50/- |
| 3. | மரியமிக்கேல் சேசுராஜ் (2514) வி. இ. நா. செ. நா. கல்லூரி, விருதுநகர். | 147/200 | 3-ஆம் பரிசு | ரூ. 15/- |
| 4. | வி. பெருமாள் (64) வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை. | 147/200 | | ரூ. 15/- |

மூன்றும் பரிசுத்தொகை ரூ. 25/- உடன் ரூ. 5/- சேர்த்துசமமதிப் பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 15/- விதம் அளிக்கப்படுகிறது.

## பட்ட வகுப்பு முதலாண்டு

1. எஸ். கணேசன் (7122) 52/100 முதற் பரிசு ரூ. 100/-
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

2. சு. கணபதி சங்கரம் (7270) 50/100 2-ஆம் பரிசு ரூ. 50/-
சௌராட்டிராக் கல்லூரி,
மதுரை.

3. தமிழரசி முருகானந்தம் (7150) 49/100 3-ஆம் பரிசு ரூ. 25
ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி,
தூத்துக்குடி.

## பட்ட வகுப்பு இரண்டாமாண்டு

1. வ. சிவப்பெருமாள் (10181) 60/100 முதற் பரிசு ரூ. 100
சௌராட்டிராக் கல்லூரி,
மதுரை.

2. ஜி. ஞானசம்பந்தன் (10062) 56/100 2-ஆம் பரிசு ரூ. 50
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

3. என். கிருஷ்ணவேணி (10025) 55/100 3-ஆம் பரிசு ரூ. 25
அருள்மிகு பழனியாண்டவர்
மகளிர் கலைக் கல்லூரி,
பழனி.

# தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர்! வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்த-தாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை' கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ் மொழிக்கூடம் ஒன்றை நிறுவினர். இன்றைக்கு கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர் களில் பலர் இம் மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்கள் முறையே பொதுத் தேர்விலும் பல்கலைக் கழகத் தேர்விலும் தமிழில் தோல்வி அடைந்து-விடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு கடந்த 78 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது. இத் தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டு பெரும்பயன் பெற்று வருவதைத் தமிழன்பர்கள் நன்கு அறிவார்கள்.

மேல் நிலைப்பள்ளி இரண்டாம் ஆண்டு

இவ்வாண்டு தொடங்கி மேல்நிலைப்பள்ளி இரண்டாமாண்டு மாணவர்களும் பயன்பெற அவர்களுக்கும் தேர்வு நடத்திட தமிழ்ச் சங்கம் முடிவு செய்துள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்-கிறோம்.

தேர்வின் அமைப்பும் பயனும் :

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அரசும் பல்கலைக் கழகமும் வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசும் பல்கலைக் கழகமும் எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும்

விஞக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கும் (PUBLIC EXAMINATION) பல்கலைக் கழகத் தேர்விற்கும் முன்னதாகவே, தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ளமதிப்பெண்ணைத் தெரிவித்துவருகின்றது. அதனால மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத்தேர்விற்கும் பல்கலைக் கழகத் தேர்விற்கும் நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கின்றது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் மேல்நிலைப்பள்ளியிலும், கல்லூரியிலும், முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம் முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்துமூன்று மாணவாகள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் தமிழ்ச் சங்க வெளியீடாகிய ''செந்தமிழ்'' செப்டம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

அன்பளிப்பு :

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை இவ்வாண்டு முதல் பின்வருமாறு மிக உயர்ந்த அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | சென்ற ஆண்டு | இவ்வாண்டு முதல் |
|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி-பத்தாம் வகுப்பு | 0. 65 காசு | 0. 75 காசு |
| மேல்நிலைப் பள்ளி-இறுதியாண்டு | | 0. 90 காசு |
| கல்லூரி | 0. 75 காசு | ரூ. 1. 00 |

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

அன்புவேண்டுகோள் :

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே அறிந்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இவ்வறிக்கையைப் பார்த்தவுடன் உங்கள் பள்ளி - கல்லூரியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாக எழுதி அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் மடல் கிடைத்த உடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பதிவுப் பட்டியலும் (2) வரவு-செலவுப் பட்டியலும் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியலும் (4) கால அட்டவணை, தேர்வுக் கட்டணம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விபரப் பட்டியலும் அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லையென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:- R. Dis. 166528/65 dated 22—12—65 என்ற ஆணையின் (G. O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

**உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கான தேர்வு நாள் தேர்வுக் கட்டண விவரம்**

| வகுப்பு | தேர்வுக் கட்டணம் | தேர்வு நாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு | ரூ. 3. 00 | 9-2-1980 | முதல்தாள் 10-12-30<br>2-ஆம் தாள் 2-4-30 |
| மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டு பொதுத்தமிழ் | ரூ. 3. 50 | 16-2-1980 | முதல் தாள் 10-1<br>2-ஆம் தாள் 2-5 |
| மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டு சிறப்புத்தமிழ் | ரூ. 2. 00 | 18-2-1980 | 10-1 |

**கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 18—1—1980**

கல்லூரிகளுக்கான மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு நாள் பல்கலைக் கழகத் தேர்வு நாளிற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அமையுமானால் கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் எனக் கருதிய கல்லூரி முதல்வர்களும் தமிழ்த் துறைத் தலைவர்களும் சங்கத் தேர்வு நாளினை மாற்றி அமைக்கும்படி விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் விருப்பத்தினை அன்புடன் ஏற்றுக் கொண்டு தேர்வுக்குழு தமிழ்ச் சங்கத் தேர்வு நாளினை 23—2—1980க்குப் பதில் 22—3—1980க்கு மாற்றியுள்ளதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மாற்றத்தினால் தேர்விற்கு முன் கல்லூரி மாணவர்களுக்குரிய பாடப் பகுதிகள் அனைத்தும் நடத்தி முடிக்கப்பட்டிருப்பதோடு பல்கலைக் கழகத் தேர்விற்குமுன் மாநில அளவில் பல்கலைக் கழக வினாத்தாள் அமைப்பு முறையில் பொதுவான தேர்வில் கலந்து கொண்ட பெரும்பயனையும் மாணவர்கள் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்கான தேர்வு நாள் தேர்வுக் கட்டண விவரம்:

| வகுப்பு | தேர்வுக் கட்டணம் ரூ. | தேர்வுநாள் | தேர்வுநேரம் |
|---|---|---|---|
| பட்ட வகுப்பு முதலாண்டு (B.A., B. Sc., I Year, 2-ஆம் பருவத்தேர்வு | 2.50 | 22-3-1980 | 10—1 |
| பட்டவகுப்பு 2-ஆம்ஆண்டு (B A , B Sc , II Year, 4 —ஆம் பருவத்தேர்வு | 2.50 | 22—3—1980 | 10—1 |

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 3-3-1980

## தேர்வு நடத்துவதற்காகப் பிடித்து கொள்ள வேண்டிய செலவுத் தொகை

15 மாணவர்களுக்கு மேல் 32 மாணவர்களுக்குள் தேர்வெழுதும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்/கல்லூரிகள் ரூ. 15—ம் ,32 மாணவர்களுக்கு மேல் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளி/கல்லூரிகள் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடும் (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 15 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளி/கல்லூரிகள் செலவுத்

தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவானால் அத் தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு - செலவு பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.)

தேர்வுக் கட்டணமும், தேர்வு பற்றிய குறிப்புகளும் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
**54**, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை—**625001**.

வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் தோற்றுவிக்கப் பட்ட இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர்களாகிய உங்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

மதுரை,
20—9—1979

தங்கள் அன்புள்ள
டி. பி. எம். பெரியசாமி
செயலாளர்

நமது நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் செந்தமிழ்க் கலைக் கல்லூரியானது மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பகுதி களில் உள்ள தனியார் கல்லூரிகளில், பட்டவகுப்பில் 100% விழுக்காடு பல்கலைக் கழக ஏப்ரல், 1979ஆம் ஆண்டில் நடை பெற்ற தேர்வில் வெற்றி பெற்றமைக்காக அரசினரின் கழுத் கேடயம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவிக் கின்றோம்.

கல்லூரிக் கல்வி இயக்குனர் செயல்முறை கடிதம் எண்: 88413 J3/79. dt. 23. 12. 79 ன் வழியாக இது அறிவிக்கப் பட்டுள்ளது.